


# வெளிச்சம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

ஆனி - ஆவணி, 2004

விலை: ரூபா 50/=

தமிழீழத்தின் அழகே
தனி அழகு

மாலிகா
செங்கை ஆழியான்
சோ.பத்மநாதன்
செ.யோகநாதன்
ஞானரதன்
புதுவை இரத்தினதுரை
சாந்தன்
கல்வயல் வே.குமாரசாமி
ந.சத்தியபாலன்
ஆதிலட்சுமி சிவகுமார்
த.ஜெயசீலன்
அம்புலி
அஜந்தி
அ.இரவி
சிந்தாந்தன்
எஸ்.சிவமலர்
தூயவன்
ஞாலவன்
துன்னாலை செல்வம்

நேர்காணல்
இராஜதர்மராஜா

போரும் போராட்டமுமாகிய ஈழத்தமிழர் வாழ்வின்
புலப்பாடுகளான வெளிச்சம் வெளியீடுகள்

# வெளிச்சம்

வெளிச்சம் சிறுகதைகள்

செம்மணி

வாசல் ஒவ்வொன்றும்

வெளிச்சம் பவள இதழ்

முத்தமிழ் விழா மலர் 1991

வெளிச்சம் கவிதைகள்

ஆனையிறவு

முத்தமிழ் விழா மலர் 1992

நாலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
முல்லைத்தீவு.



*தமிழீழத் தேசியத்தலைவரின் கருத்துரையுடன்*

**கவிதை**

மாலிகா
சித்தாந்தன்
புதுவை இரத்தினதுரை
கல்வயல் வே.குமாரசாமி
சோ.பத்மநாதன்
துன்னாலை செல்வம்
ஞாலவன்
அம்புலி
த.ஜெயசீலன்

**சிறுகதை**

செ.யோகநாதன்
சாந்தன்
ஆதிலட்சுமி சிவகுமார்
அஜந்தி
ஆர்.கே.

**கட்டுரை**

செங்கைஆழியான்
ஞானரதன்
அ.இரவி
ந.சத்தியபாலன்
செல்வி.எஸ்.சிவமலர்
தூயவன்


**நேர்காணல்**

இராஜதர்மராஜா

**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களுக்கு உலகப்பெருந்தமிழன் விருது**



பெங்களூரில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழர் பேரவையின் மாநாட்டில் எமது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களுக்கு மேற்படி பெருவிருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருப்பதறிந்து தமிழீழத் தாயகத்தின் சார்பில வெளிச்சம் கவிஞரை வாழ்த்துகிறது.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
வண்ணார்பண்ணை கிளை நூலகம்

# தலைவாசல்

இதழ் 87 ஆனி - ஆவணி 2004

## "நாளை இங்கும் இதுதான் நடக்கும்"

எம் முற்றத்திற் பரவிய நம்பிக்கை வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மீண்டும் இருள் சூழ்வதற்கான அறிகுறிகளே அதிகம் தென்படுகின்றது. இருளின் அந்தகாரத்துக்குள் சொல்லவொண்ணா இன்னல்களை அனுபவித்தவர்களான எமக்குத்தான் வெளிச்சத்தின் தேவை விளங்கும். போரும், அதன் வலியும், உயிரறுக்கும்போது எழும் வதைக்குரலும், பிரிதலும், தொலைவும் எத்தனை கொடியதென்று கடந்த ஐம்பது வருடங்களாக எமக்குத்தான் அதிகம் தெரியும்.

சின்னத் தீவொன்றில் சிறுபான்மையான ஈழத்தமிழினம் மிகக் கொடிய அரசாலும், பேரினவாத சக்திகளாலும், ஆதிக்க வலைப்பின்னல்களாலும் பெற்ற அராஜக அனுபவங்கள் அதிகம். இதற்கெதிராக எம் தேசியத்தலைவரின் வழிகாட்டலில் ஒரு சுடர்மிகு சக்தியாக ஒன்றிணைந்து நாம்போராடிய விதம் உலகையே அதிசயிக்க வைத்தது. இந்த அதிசயப்போராட்டத்தை வெற்றிமுகம் நோக்கித் திருப்பிய வழியில் நாம் கொடுத்த விலை அதிகம். தேசிய விடுதலைப்போராட்டத்தை ஈழத்தமிழினம் முன்னெடுத்த சமகாலத்திலேயே புதிய அரசுக்கான கட்டுமானங்களுடன் விடுவிக்கப்பட்ட எமது நிலப்பரப்பில் நாமொரு ஆட்சியையும் அமைத்துக்கொண்டோம். சுயநிர்ணய உரிமைக்குரியவர் நாமென சொல்லிலும், செயலிலும் நிறுவியுமுள்ளோம்.

அடக்கி அழித்துவிட முடியாத பலத்துடன் உள்ளிருந்தும் வெளியிருந்தும் வந்த பகையை எதிர்கொண்டோம். வெற்றியும் கண்டோம். புலம்பெயர்ந்த அவலத்துக்குள்ளும் எம் உறவுகள் தம் தாயக விடுதலைக்கு தோள்கொடுத்து விடுதலைப்போராட்டத்தை உயர்த்தினர். காலங்கடந்தாயினும் இவையெல்லாவற்றையும் சரியாக இனங்கண்டுகொண்ட ஸ்ரீலங்கா அரசும், அதன் முதுகுக்குப் பின்னே முண்டு கொடுக்கும் அந்நிய சக்திகளும் போரால் அழிக்கமுடியாத எம் போராட்டத்தை சமாதானப்பேச்சுவார்த்தை எனக்கூறிக்கொண்டு தற்காலிகமாக ஏற்படுத்திக்கொண்ட அமைதிக்காலத்தில் அழித்துவிடக் கங்கணங்கட்டி நிற்கின்றன. வெளியே ஒப்பனைக்கு சமாதானம் என்றும் உள்ளே யுத்தமென்றும் கபடமான திட்டத்துடன் களமிறங்கியுள்ளனர். இந்தப் பேரழிவுப் பொறியை ஆரம்பத்திலேயே நாம் சரியாக அறிந்துகொண்டோம். ஆகவேதான் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் உலகெங்குமுள்ள விடுதலைப்போராட்டங்களை அழித்ததுபோல இங்கு அவர்களால் செய்ய முடியாமற்போயிற்று.

தளராத எங்கள் தலைமையும், மனம் குலையாத எம் மக்களின் விடுதலைத் தாகத்தையும் எவராலும் இல்லாதழிக்க முடியவில்லை. மீண்டும் தோல்வியைத்தழுவிய பேரினவாதம் விட்ட இடத்திலிருந்து போரையே முன்னெடுக்க முனைப்புக்கொண்டுள்ளது. அடக்குமுறையாளருக்கு ஒற்றை வழியே உண்டு. அது இதுவேதான். இதைவிட வேறு மார்க்கம் அவர்களுக்கு இருக்கப்போவதில்லை. விடுதலைக்காக எழுந்தவொரு மனிதக் கூட்டத்தை இறுதிவரை எதிர்த்துநின்றுவிட்டு அடக்குமுறை ஆதிக்கச் சக்திகள் கடைசியில் அந்தரித்தழியும். பரிதாபகரமாக தான்தோண்டிய படுகுழியில் தானே விழுந்து தனக்குத்தானே மண்போட்டு மூடும். நாளை இங்கும் இதுதான் நடக்கும்.

தொகுப்பும் அமைப்பும்
ஆசிரியர் குழு

ஒளிப்படங்கள்
இயல்வாணன், சிவபாலன், நிரோஜன், விடுதலைப்புலிகள் புகைப்படப்பிரிவு

ஓவியங்கள்
நந்தா கந்தசாமி

அட்டைப்படம்
இ.சோபிதன்

அச்சுப்பதிப்பு
நிலா பதிப்பகம்
கிளிநொச்சி


வெளியீடு
விடுதலைப் புலிகள்
கலை,பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
தமிழீழம்.

இணையத்தில் வெளிச்சம்
WWW.Velichcham.com

தொடர்புகளுக்கு:
வெளிச்சம்
புதுக்குடியிருப்பு-04
முல்லைத்தீவு


வெளிச்சம்
விடுதலைப்புலிகள்
கலை,பண்பாட்டுக்கழகம்
மாவட்டச் செயலகம்
பொற்பதி வீதி
கோண்டாவில்
யாழ்ப்பாணம்.

# இன்றும் யதார்த்தமாகும் 19 வருடங்களுக்கு முன்னரான எம் தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனம்.




இந்தத் தற்காலிக போர்நிறுத்த நடவடிக்கையின் பயனாக எமது பிரச்சினைக்கு ஒரு இறுதியான அரசியல் தீர்வு ஏற்படும் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. இனவெறி கொண்ட சிங்கள பௌத்த தலைமைக்கு அப்படித் திடீரென மனமாற்றம் ஏற்படுமென நாம் எதிர்பார்க்கவில்லை. தமிழருக்கு நீதி வழங்கவேண்டும் என்ற தார்மீக சிந்தனைக்குப் பதிலாக தமிழர்களை மீண்டும் ஏமாற்றி ஆயுதப்புரட்சிப் போராளிகளை அடிபணியச் செய்யவேண்டும் என்பதே அரசின் அந்தரங்கத் திட்டமாகும். 35 வருட அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏமாந்துபோன கசப்பான அரசியல் வரலாற்றுப் பாடங்களில் நாம் நிறையக் கற்றுத் தெளிந்திருக்கிறோம். ஆகவே பேச்சுக்கள் என்ற இந்த இராஜதந்திரப் பொறிக்கிடங்கில் நாம் சிக்குப்படப் போவதில்லை என்பதை நான் உறுதியாக, திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு தமிழ்ப்பிரதேச ஆட்சியமைப்பு உருவாக்கப்படுவதை சிங்கள இனவெறியர்கள் விட்டுக் கொடுக்கப்போவதில்லை. ஆகவே மீண்டும் மாவட்டசபையென்றும், அதிலிருந்து மாகாண சபையென்றும் பழைய புளித்துப்போன திட்டங்களே முன்வைக்கப்படலாம். இந்தக் குறைந்தபட்சத் திட்டங்கள் எதையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. எமது மக்களின் சுதந்திரத்தையும், கௌரவத்தையும் நிலைநாட்டவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம். அந்தச் சுதந்திரமும் கௌரவமும் நிலைநாட்டப்படாதவரை நாம் ஆயுதங்களைக் கைவிடப் போவதில்லை.

(1985 ஆம் ஆண்டு யூலை மாதம் திம்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் மத்தியில் ஒரு போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. இப்போர்நிறுத்தம் பற்றியும், போர்நிறுத்தத்துக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் பற்றியும் தமிழீழத் தேசியத் தலைவர் 24.06.1985 இல் விடுத்த அறிக்கையில் இருந்து.)




அந்த நெட்டூரம் நிகழ்ந்த அன்றிருந்து
இப்படித்தான் ஒருவாய் நீர்கூட உள்ளிறக்காமல்
ஏகாந்தமாய் வெறித்த பார்வையுடன்
சோபிதம் அகல ஒற்றையனாய் நிற்கிறது
இந்த நெடிய பனை.
காலெடுத்துநகரா வாழ்வெனினும்
ஜனனத்திலிருந்தே அருகென்றாகி
இணையென இருந்தன ஒருசோடிப் பனைகள்.
பெருங் காற்றடிக்கும்போதில் மெல்லத் தோளுரசி
புளகமெய்தி
பருவமெய்தியதும் காதல்மீதுர
சிரித்துப்பேசி இருந்தன இரண்டும்.
நேற்றொருவன் வந்தான்
அவன் மனிதனாம்.
மளமளவென்று பெண்ணுடல் சுற்றிப்படர்ந்து
மார்புரச ஏறிக் கழுத்தில் சுருக்கிட்டான்.
மூச்சுத் திணறியது பெண்ணுக்கு.
கீழே விழுந்த கோடரிவெட்டு ஒவ்வொன்றுக்கும்
துடித்துப்போனாள் காதலி.
அருகிருந்த ஆண்பனைக்கு,
தன் ஆசைக் காதலனுக்கு
ஏதேதோ சொல்லி அரற்றிற்றுப் பெண்பனை.
கூடல் கலங்கி எதிரொலிக்கக் கத்திற்று.
மௌனத்தில் உறைந்தன அருகிருந்த உறவுகள்.
மதியப்பொழுதானதால் வெட்டுவாயிருந்து
அதிக குருதி பெருகிற்று.
சற்று நேரத்தில் அன்றில் பறவைகளிலொன்று அடிசாய்ந்தது.
குரூர மனிதனுக்கு எப்படிக் காதலைக் கணக்கிட முடியும்?
சக உயிரின் வலிருசிக்கும் மனிதனுக்கு
மகளென்ன? மரங்களென்ன?
காதலைப் பிரிப்பதே களிப்பு.
நேற்றுக் காதல்மரங்களில் ஒன்றை வெட்டிய மனிதனே
சோடிப்பனைகளில் ஒன்றையேன் விட்டுச்சென்றாய்?
வாடா; வந்து வெட்டடா மற்றதையும்.
காதலியிடம் போய்ச்சேரட்டும்
இந்த ஒற்றைப் பனையின் உயிரும்.
□□

# 2004 யூலை 05 கரும்புலி நாளன்று தமிழீழத் தேசியத் தலைவரிடம் விருதுபெறும் மூன்று மூத்த கலைஞர்கள்




இசைவாணர் கண்ணன்

இசைவாணர் கண்ணன் தமிழீழத்தில் வெளிவந்த ஆகக் கூடுதலான விடுதலைப் பாடல்களின் பிதாமக இசையமைப்பாளர். தமிழீழ விடுதலைப்போராட்டத்தை இசையால் உலகறியச் செய்து எல்லோர் வாய்களிலும் பாடலாகப் பரவிய கலைஞர்.

இயக்குநர் ஞானரதன் தமிழீழத்தின் புதிய சினிமாவின் ஊற்றுக்கண். 'காற்றுவெளி', 'முகங்கள்', 'புயல் புகுந்த பூக்கள்' உட்பட பல வீடியோப் படங்கள், விவரணங்கள் என்று எம் தேசவிடுதலைப்போராட்டத்தை உலகறியச் செய்தவர்.



இயக்குநர் ஞானரதன்



கவிஞர் நாவண்ணன்

கவிஞர் நாவண்ணன் தன் எழுத்துப் பதிவுகள் மூலமும், இசைப்பாடல்கள் மூலமும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை வையப் பரப்பெங்கும் வரைந்தவர். 'கரும்புலிகள் காவியம்' மூலம் கரும்புலிகளை எம் நெஞ்சங்களுக் குள் நிறுத்தியவர்.




யாழ்ப்பாணம் பாரீர் - 2

# களைத்தோடிக் கண்ணகை

செங்கைஆழியான்

ஒரு மாலைப்பொழுதில் பொன்னாச்சியும் அவளது மகள்வழிப்பேத்தி பவளமும் நவாலி கடந்து வயலோர வீதியில் மினிபஸ்ஸில் வந்து இறங்கினர். யாழ்ப்பாணத் திலிருந்து ஆனைக்கோட்டையூடாகக் கட்டுடைவரை நெருக்கியடித்து நின்றபடி பயணப்பட்ட களைப்பு இருவ ரிலும் தெரிந்தது.

"ஒருத்தனுக்குக் கூட நெஞ்சில் ஈவிரக்கமில்லை. ஒரு கிழவி நின்றபடி தொங்கிக்கொண்டுவர இளந்தாரி யள் குசாலாக சீற்றில இருந்து வாறாங்கள். கலி முத்திய காலம்......" என பொன்னாச்சி பொருமிக் கொண்டாள். அவள் கொட்டிய வார்த்தைகளைக் கிரகிக்கும் நிலையில் பவளம் இல்லை. பக்கத்து வீட்டுச் சரசிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டு வந்த நான்கு பிள்ளைகளின் நினைவு மனதில் தளர்வைத் தந்தது.

"கெதியாகத் திரும்பவேண்டும் அம்மாச்சி. பிள்ளை யள் தனிய.... நானில்லாட்டில் கடைக்குட்டி துடித்துப் போய்விடும். இப்ப எங்கயணை கூட்டிக்கொண்டு போறாய்?"

"உனக்கெப்பவும் அந்தரம்தான். பேசாமல் என்னோட வா. நான் இங்க வந்தும் கனகாலமாகுது. ஆரிட்டை யாவது இடம் கேட்பம்....."

எரிச்சலோடு ஆச்சியைப் பவளம் பார்த்தாள். நல்ல வேளை வீதியில் ஒருவர் தண்ணீர்க் கானுடன் வந்து கொண்டிருந்தார்.

"டேய் தம்பி.... இந்தக் களத்தோடை கண்ணகி அம்மன் கோயில் எங்கை இருக்குது.....?"

"என்னணை சரியான இடத்தில நிண்டுகொண்டு கேக்கிறியள். அங்க பாருங்கோ..... அரைச்சுவரில தெளிவாக எழுதியிருக்குது. அப்படியே மேற்கால போனா ஐந்து கோயில்கள் வரும். அப்படியே அவற்றினைக் கடந்துபோனால் வயல்வெளி வரும். அங்க மேட்டில களைஓடி கண்ணகை அம்மன் கோயில் இருக்குது."

"எனக்கிப்ப தெரியும்...." என்றாள் முகம் மலர்ந்தபடி பொன்னாச்சி.

"ஏனணை அங்கை?"

"பேசாமல் வா மோனை. வலு சக்தியுள்ள அம்மன். உன்ர துயரங்களுக்கு எல்லாம் விடிவு வரும்."

பொன்னாச்சி இடதுபுறமாகச் சென்ற மண்வீதியில் இறங்கி முன்னே நடந்தாள். வீதியோரத்தில் தெளிவாக 'களை ஓடை கண்ணகை அம்மன் கோயில்' என எழுதப்பட்டிருந்த அரைக்கற்சுவர் விளங்கியது.

"இதென்ன களைஓடைக் கண்ணகை அம்மன் என்றிருக்குது. நீ களைத்தோடி கண்ணகை அம்மன் என்கிறாய், அம்மாச்சி."

"பாண்டி நாட்டை எரிச்சிட்டுக் களைத்து ஓடிவந்த கண்ணகிதான் இவ...."

அவள் கேள்விப்படாத கோயில் அது. அவள் கண்களில் இவ்வளவு காலமும் இது படவில்லை. எவரும் இக்கண்ணகி கோயில் பற்றிக் கூறியிருக்க வில்லை. இருந்தாற்போல ஆச்சி இக்கோயிலிற்குச் சொல்லாமல் கொள்ளாமல் அழைத்து வந்திருக்கிறாள். அவளுடைய துயரம் இங்கே வந்தால் தீருமாம். அது ஆச்சியின் நம்பிக்கை. அவள் எத்தனை கோயில்களில் கண்ணீரோடு முறையிட்டும் தீராத துயரம் அது.

"என்ர துயரம் தீராதணை அம்மாச்சி. செல்லம்மா வீட்ட மேய்ச்சலிற்குப் போய் வாறதை அந்த மனிசன் நிறுத்தாது."

எதிரில் ஒரேயிடத்தில் ஐந்து கோயில்கள் குறுக் கிட்டன. பவளத்திற்கு வியப்பாக இருந்தது. இப்படி ஒரேயிடத்தில் அனைத்துத் தெய்வங்களையும் அவள் தரிசித்தவளல்லள்.

"நீ எப்பவாவது உன்ர மனிசனைக் கண்டித்திருக் கிறியா?" என்று இருந்தாற்போல பொன்னாச்சி கேட் டாள். அவளே தொடர்ந்து, "இல்லை.... எங்க கண்டித் துக் கேட்டுச் சண்டை பிடித்தால் அவர் உன்னையும் பிள்ளையளையும் கைவிட்டுவிட்டு ஓடிப்போயிடுவார் எண்ட பயம். அதுவும் சரிதான். ஆனால்....." என்றபடி பொன்னாச்சி ஒரு ஒதுக்காக நடந்தாள். பற்றைகளுக் குள்ளால் ஒரு ஒடுங்கிய பாதை சென்றது. இரு புறங்களிலும் வளர்ந்திருந்த முட்பற்றைகள் வழியைத் தடைசெய்தன. அப்பாதை ஏறியவிடத்தில் சுண்ணப் பொளி கற்களால் கட்டப்பட்டிருந்த ஒரு அழகான கேணி குறுக்கிட்டது. நீள்பக்கத்தில் கேணிக்குள் மனிதர் இறங்கப் படிகளும் அகலப் பக்கத்தில் மாடுகள் இறங்கி நீரருந்தச் சரிவுப் பாதையும் இருந்தன. சரிவுப் பாதைப் பக்கத்தில் மாடுகள் பேன் கடிக்கும், உடல் உழைவிற்கும் முதுகு தேய்க்க ஆவுரோஞ்சிக் கல் நடப்பட்டிருந்தது.

"அங்க பார் கண்ணகை அம்மன் கோயில்..." என பொன்னாச்சி மேற்கே சுட்டிக்காட்டினாள். மேற்கு வானில் சூரியன் சரிந்து கொண்டிருந்ததால் ஒளிக்கதிர் கள் சாய்வாகப் பவளத்தின் முகத்தில் படிந்து பொன் னாச்சி சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்க்கத் தடைசெய் தன. கண்ணுக்கெட்டிய தூரம்வரை வயல் விரிந்து கிடந்தது. பவளத்திற்கு எதுவும் தெரியவில்லை.

"எங்கயணை.....?"

"அந்தா..."

"ஒரு கோபுரத்தையும் காணேல்ல..... கோயில் எங்கை..?"

"அங்க பார் பிள்ளை..... ஒரு மேடு, வயலுக்குள்ள சிறியதொரு மலைக்குன்றாகத் தெரியுது. அதில காடு போல மரங்கள் வளர்ந்திருக்குதெல்ல....."

பவளத்திற்கு இப்போது ஆச்சி சொன்னவிடம் புலப் பட்டது. வயல்களின் நடுவே மணல் மேடு ஒன்று தெரிந்தது. அதில் மரங்களும் கொடிகளும் பற்றை களும் மூடி வளர்ந்து கவிந்திருந்தன. அதற்குள் கோயில் இருப்பதற்கான அறிகுறி எதுவுமில்லை.

அவள் ஆச்சியைத் தொடர்ந்தாள். வயற்பாதை மணமேட்டினை நோக்கித் திரும்பியது. கற்படிகள் அமைக்கப்பட்டிருந்தன. அப்படிகளில் பொன்னாச்சி ஏறினாள். அவளைத் தொடர்ந்த பவளத்திற்கு மணல் மேட்டில் சிறியதொரு கோயில் இருப்பது தெரிந்தது. படிகளில் ஏறும்போது தன்னையறியாமல் படிகளை எண்ணிக்கொண்டாள். உச்சியை அடைந்தபோது பதினெட்டுப் படிகள் அமைக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

"பதினெட்டுப்படிகள் அம்மாச்சி..."

"அப்படியே.... ஐயப்பனுக்கும் பதினெட்டுப்படிகள் தானாம்."

சிறியதொரு கர்ப்பக்கிருகம். அதன் முன் அர்த்த மண்டபம். அதற்குமுன் ஒரு சிறிய மகாமண்டபம் எல்லாம் சேர்ந்து முப்பத்திரண்டு அடி நீளமும் பத்துப் பன்னிரண்டு அடி அகலத்திற்குள்ளும் அடங்கிவிடும். அக்கோயிலின் அமைவிடம் மிக அற்புதமானது. அக்கோயிலைச் சூழ்ந்து சரிந்து சென்ற சாய்வுகளில் வேம்பு, பனை, புன்னை முதலான மரங்களும் பற்றை களும் வளர்ந்து சோலையாக்கியிருந்தன. அவற்றில் தாவி ஏறி இறங்கி விளையாட வேண்டும்போல பவளத்திற்கு இருந்தது. கர்ப்பக்கிருகத்தில் கண்ணகை அம்மன் சிலாவிக்கிரமாக அமர்ந்திருந்தாள். கர்ப்பக் கிருகக் கதவு திறந்திருந்தது. அம்மனைத் தரிசிக்க முடிந்தது. கோயிலைச் சுற்றி வந்தார்கள்.

பவளத்தின் களைப்பும் வீட்டு நினைவுகளும் மறந்து போயின. மண்டபத்தில் பொன்னாச்சி அமர்ந்ததும் அவளும் அவளருகில் அமர்ந்துகொண்டாள். அவர்கள் இருவரையும் தவிரக் கோயிலில் வேறு எவருமே யில்லை. கோயிலும் சூழலும் அமைதியில் ஆழ்ந்து கிடந்தன.

"இப்படி அமைதியான ஒரு கோயிலை நான் காணவில்லை..... மனதுக்கு நிம்மதியாக இருக்குது, அம்மாச்சி."

காகங்கள் சிலவற்றின் வருகை கரைதலிலிருந்து தெரிந்தது.

"ஏனெணை என்னை இங்கை கூட்டி வந்தாய்?"

"உன்ர வயதுதான் அப்ப எனக்கும் இருக்கும். உன் கொம்மப்பா அதுதான் உன்ர அப்பு திருவாளர் முத்தர் அம்மான் ஐந்து பிள்ளையள் பெறுமட்டும் நல்ல ஒழுங்காகத்தான் இருந்தார்." பொன்னாச்சி நிறுத்திவிட்டு பேத்தியைப் பார்த்துச் சிரித்தாள்.

பவளம் வியப்புடன் ஆச்சியை நோக்கினாள். ஆச்சி தொடர்ந்தாள்: "எப்படியோ அவருக்கு தையலோட தொடுப்பு ஏற்பட்டுவிட்டது. கதை ஊரெல்லாம் பரவி எல்லாரும் சிரிசிரியெனச் சிரித்தபின்னர்தான் எனக்குத் தெரிந்தது. துடிச்சுப்போனன். காட்டிக்கொள்ளவில்லை. தெரிஞ்சதாகக் காட்டிக்கொண்டால் இப்ப இருக்கிற பயமும் போய்விடும். எவருக்கும் தெரியாமல் அழுதன். என்ர ஆச்சி கண்டிட்டா ஒருநாள். அவவிடம் சொல்லி அழுதன். "அழாதை பிள்ளை. எதுக்கும் கண்ணகை அம்மனிடம் முறைப்படு. அவ தீர்ப்பா" என்றா. எனக்கு

ஆச்சியின்ர பேச்சில நம்பிக்கை வந்தது. ஒருநாள் மனிசனையும் கூட்டிக்கொண்டு இங்க வந்தன்...." ஆச்சி தொடர்ந்தாள்.

பொன்னாச்சி அமர்ந்திருக்கிற இடத்தில்தான் அன்று முத்தர் அம்மான் அமர்ந்திருந்தார்.



"நல்ல கோயிலணை.." என்றார் முத்தர் அம்மான்.

"ஓமோமப்பா.... கண்ணகி கோவலன் கதை தெரியுந்தானே.....?"

முத்தர் அம்மான் சிரித்தார்.

"அது தெரியாமல் ஆராவது இருப்பினமே? கண்ணகி இருக்கத் தக்கதாக அவர் மாதவியிடம் போனது.... காற்சிலம்பை விற்கப் போனது..... பாண்டியன் கள்ளனென நினைத்துக் கொல்வித்தது..... படிச்சிருக்கிறன்.... பெரிய எழுத்துக் கோவலன் கதை என்னிடம் இருக்குது. நாட்டுக் கூத்தும் பாத்திருக்கிறன்" என்றார் ஆர்ப்பாட்டமாக முத்தர் அம்மான்.

"கோவலன் செய்தது சரியோ? கண்ணகி இருக்க மாதவியிடம் போனது....."

"பெண்ணாசை ஆரை விட்டது?" என்றார் முத்தர் அம்மான்.

"அப்ப நீங்களும் அப்பிடியே?"

முத்தர் அம்மானின் முகம் வியர்த்துவிட்டது.

"நானோ? என்ர ராசாத்தியாட்டம் நீரிருக்க நான் வேறை தேவடியாளை நாடுவனோ?"

பொன்னாச்சி கொடுப்பிற்குள் சிரித்துக்கொண்டாள்.

"பிறகென்ன நடந்தது?"

"எதுக்குப்பிறகு?"

"பாண்டியன் கோவலனைக் கொலை செய்வித்ததன் பிறகு?"

"என்ன தெரியாதது மாதிரிக் கதைக்கிறாய், பொன்னு? தன்ர முலையைத் திருகி பிடுங்கி எறிந்து மதுரையை எரித்தாள். பேந்து.... சேர நாட்டிற்குச் சென்று அதுக்குப் பிறகு களைத்து ஓடி இந்தவிடத்தின் மண்மேட்டில தங்கினாளாம். அதுதான் களைத்தோடி கண்ணகை அம்மன்...."

"நானாகவிருந்தால் கண்ணகி மாதிரிச் செய்திருக்க மாட்டன்....."

"என்ன செய்திருப்பாய்...."

"மாதவியிடம் அவன் போறான் என்று கேள்விப்பட்டதுமே நித்திரையில வைச்சு நான் திருகிப் பிடுங்கியெறியிறதே வேறாக இருந்திருக்கும்" என்றாள் பொன்னாச்சி திடமாக. முத்தர் அம்மான் பேயறைந்தவர் போலானார்.

அவரால் எதுவும் பேசமுடியவில்லை. வியர்த்துக் கொட்டியது. "செய்தாலும் செய்வாள். செய்யக்கூடியவள்" எனத் தனக்குள் கூறிக்கொண்டார். "வா நேரமாகுது போவம்" என்று எழுந்தார்.

பொன்னாச்சி கதையை நிறுத்தினாள். பவளம், ஆச்சியை வியப்புடன் ஏறிட்டாள்.

"அதுக்குப் பிறகு உன்ர அப்பு வீட்டைவிட்டு வெளியில போறதில்லை" என்று பொன்னாச்சி கடகடவெனச் சிரித்தாள்.

அவர்கள் ஆலயத்தினை விட்டுப் புறப்பட்டனர். பவளம் எதுவும் பேசவில்லை. யோசனையில் ஆழ்ந்து போனாள். ஆலய மேட்டிலிருந்து படிகளூடாகக் கீழிறங்கி வயற் பாதையில் நடந்து கேணியைத் தாண்டி ஐந்தாலயங்களைக் கடந்து வீதியில் ஏறி வீடு வரும்வரை பவளம் பேசவில்லை.

"எங்க ஆச்சியோட போயிட்டு வாறாய்.... இங்க புள்ளையள் நீயில்லாமல் தவிச்சுப் போட்டுதுகள்...." என்றான் பவளத்தின் கணவன்.

கணவனை ஆழமாக பவளம் ஏறிட்டுப் பார்த்தாள். பின்னர் கேட்டாள், "நானும் நீங்களும் ஒருக்கா களைத்தோடி கண்ணகை அம்மன் கோயிலுக்குப் போகவேணும்....."


பொன்னாச்சி தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

# புதுவேகம் அல்லது நிலைமை

கல்வயல் வே.குமாரசாமி

நுனி இலைகள் சுமந்த பனி
கனிகிறது புவி மடியில்
அவசரத்தில் அவசரமாய்
அந்தரத்தில் மடியடியில்
கனவுகளின் போதையிலே
கவிகிறது கவிதையென
மனித மன உணர்வுகளின்
மரண அடிகளிலே.

பழையபடி வீட்டுப் படலைகளில்
நிற்கின்றாய்.
நுழைகின்ற குஞ்சு குமர் நெஞ்சில்
கெடிக்கலக்கம்
பழையபடி என்வீட்டுப் பக்கத்தில்
உன்கையில் துப்பாக்கி, கைக்குண்டு தொங்க
ஒரு யமன் போல பழையபடி
நம்வீட்டுப் பாதை அருகோரம் இரவு, பகல்
நிற்கின்றாய்?
என்கை வெறுங்கையாய்
குரல் வளைக்குள் சொல் சிக்கி
நா கொன்னிக் கொள்கிறது.
வராதாம் ஓர் வார்த்தை
வருகின்ற ஆத்திரத்தில்.
சொறி பிடிச்ச நாய்கள் சில சுற்றியுனை
நின்றாலும்
வெறி தெறிக்கும் உன் விழிகள்
வேட்டை நாய் வேக்காட்டில்
பொறி பறக்கும் உன் மூச்சில்



பூவரச மரம் கருகி;
தறுவாய்க்குக் காலாற நிழல் தந்த புல் உலரும்.
ஏன் வந்து நிற்கின்றாய் எண்ணிப்பார்.
உன் வீட்டில் நான் வந்து நின்றால்
என்ன நடக்குமென?
உன் கால்படக் கூசி என்மண் கொதிக்கிறது.
அன்புக் கரம் நீட்ட ஆயத்தமாக நான்
உன்கைத் துவக்கால் உறுதி;
பெறுகின்றேன்;
நாக விகாரைக்கு; நயினாதீவுக்குமென

போக வருவோரைப்
போதி; மர மாதவத்தான் சாக; விடமாட்டான்
சலனங்கள் ஏற்பாரோ?
நீதியைப் பற்றி நினைச்சுப்பார் ஓர்! சிறிது

அம்மா என் அம்மா
அறிவிப்பின் அற்புதங்கள்!
எம்மை மயக்கவோ? என்ன?
மயக்கமோ?
பிறியமாம் எங்களிலே
பேச்சு வார்த்தைக்கு வர
அறிவிப்பில் அவசரங்கள்; அறிவிப்பில் அவசரங்கள்.
நம்புதற்கு நாம் என்ன நாதியற்ற நாய்களா?
நம்பி ஒன்றும் இங்கே நடந்துவிடப் போவதில்லை.
மழை வெயிலை நீ மறந்தேன் மனிசா
பழையபடி; பழையபடி?
என் வீட்டுப் படலையில் ஏன் நிற்கின்றாய்?
செம்மணியும்
அம்மணமாய் சீரழிந்த:
நம்மணியும்
அம்மா உதறி; !
எறிந்து மறந்துவிட: எம்மால் முடியாது
உட் காயமாறலையே!
புத்த தந்தப் பேழை புனிதமெனப் போற்றுகிறாய்
எத்தனை கோயில் இங்கே இடிந்து கிடக்கிறது.
சித்திரத்தேர் எத்தனை பார் – சிதறிக் கிடக்கிறது.
அத்தனையும் ஆர் அழித்தார் ஆர் இடித்தார் அத்தனையும்

அக்கறையோ?
எங்களிலே!
அக்கறையை யார்கழுவ?
பக்கத்தில் வந்தேன்
பக்கத்தில் வந்தேன் பண்டார நிற்கின்றாய்!
துப்பாக்கி; குண்டு,
இரும்புத் தொப்பி இவை சகிதம்.
திக்கற்று நிற்பதாா்
திண்டாடிப் போப்போறாய்!

நுனி இலைகள் சுமந்த பனி
மறைகிறது புவிமடியில்
தினகரனார் கதிர்தழுவ எழுகிறது புதுவேகம்.

□□



**அருமை, அரசடிச் சந்திக்கு வந்ததுமே நேரத்தைப் பார்த்தார். ஏழேகால். நேரேபோய், அரச மரத்தோடு இருந்த வைரவரடியில் இரண்டு நிமிடம் கண்மூடி நின்றார். பிறகு, இடமும் வலமும் வடிவாகப் பார்த்துவிட்டுத் தெருவைக் கடந்துபோய் பூவரசடியில் நின்றுகொண்டார்.**

**பஸ் சத்தங்கேட்டது. நேரத்துக்கு வருகிறது இன்றைக்கு. வலக்கையிலிருந்த பையை இடக்கைக்கு மாற்றிக்கொண்டு அருமை தயாரானார்.**

**ரிக்கெற்றை வாங்கிக்கொண்டு எங்கே இடமிருக்கிறது என்று பார்த்தபோது, சந்திரனின் சிரித்த முகம் பளிச்சென்று கண்ணில் பட்டது.**

# பின்னல்

- சாந்தன்.



"இப்பிடி வாங்கோ", தன் பக்கத்தில் வெறுமையாய்க் கிடந்த இடத்தைக் காட்டினான் அவன். அருமை உட்கார்ந்ததும், "இன்றைக்கு எனக்குக் கிளினிக்", என்றான் சந்திரன். அவர் அலுவலகத்திற்குப் போகிறாரென்பது அவனுக்குத் தெரியும்.

அடுத்த நிறுத்தத்திலேயே பஸ் நிரம்பிவிட்டது. அவர்களை ஆறுதலாகப் பேசவும் விடாமல் தலைக்கு மேல் வளைந்த சனம் - அருமை, தன்னுடைய நிறுத்தம் வந்து இறங்கும்போது கூட கஷ்டப்பட்டுத்தான் இறங்க வேண்டியிருந்தது. இறங்கியதும் சட்டையைத் தட்டியபடி, "வாறன்", என்றார் அண்ணாந்து. யன்னலூடாகத் தலையசைத்தான் சந்திரன். விறுவிறென்று நடந்தார் அருமை.

சந்திரன் அடுத்த நிறுத்தத்தில் இறங்கவிருந்தான். அது தான் கடைசி; பஸ் நிலையம். தெருவில் போக்குவரத்து நெரிசல் தொடங்கிவிட்டிருந்தது. பள்ளிப் பிள்ளைகளின் சைக்கிள்களும், மண்ணெண்ணெய்ப் புகை கக்கும் வாகனங்களுமாய்... பஸ், விடாமல் ஹோண் அடித்தபடிதான் போய் நிலையத்தில் வட்டமடித்து நின்றது. எல்லாரும் இறங்குமட்டும் காத்திருந்தான் சந்திரன். எட்டு மணி. எட்டே காலுக்குப் போனாலும் போதும்: மச்சான்காரன் இடம் பிடித்து வைத்திருப்பான்.

இறங்கி நடந்தபோது, எதிர் வெய்யில் கண்களில் அடித்தது. பட்டணம் மூச்சுப் பிடித்து இயங்கத் தொடங்கியிருந்தது. நடைபாதையில் பரப்பியிருந்த கடையொன்றுக்கு விலகியபோது, எதிரே வந்த நடுத்தரவயதுப் பெண்ணொருவர், எட்டி, "எட, தம்பி", என்றபடி அவன் கையைப் பற்றினார்.

"அக்கா!", அப்போதுதான் கவனித்தான் சந்திரன், "துலைக்கோ, இந்தநேரம்?" "உதிலை பாங்குக்கு. அத்தான் பின்னாலை வாறார்".

"எனக்கு இண்டைக்கு கிளினிக்", சிரித்தபடி நகர்ந்தான், "வரட்டே? நேரமாகுது".

'எட! திரும்பிப்போகேக்கை அவனை வீட்டை வரச்சொல்லியிருக்கலாம்' என்று நினைத்தபடி நடந்தா அக்கா. 'பரவாயில்லை, எங்கட பாங்க் அலுவல் எத்தினைக்கு முடியுமோ' என்றொரு சமாதானமும். எதிரே பேப்பர்க் கடையடியில் நின்றவரைப் பார்த்ததும் அதிசயமாக இருந்தது.

"என்னெண்டு என்னை முந்திக்கொண்டு வந்தநீங்கள்?"

"நான் சைக்கிளெல்லோ", சிரித்தவர்,

"நடவும்: பின்னாலை வந்திடுறன்", என்று விலகி நின்றார்.


பேப்பர் கடையிலிருந்து வெளியே வந்த ஒருவர் அத்தானிடம் வந்தார்.

"நடா, குறை நினையாதை: எனக்கு இப்ப ஒன்பதுக்கு வகுப்பு ஒண்டிருக்கு", என்றார் வருத்தம் தெரிவிப்பதுபோல.

"ரைட், பிறகு சந்திப்பம்", நடா விடை கொடுக்கவும் மாஸ்ரர் தன் பேப்பரை அவசரமாக மடித்துப் பையில் வைத்தபடி போய்ச் சற்றுத் தள்ளிநின்ற சைக்கிளை எடுத்தார்.

மாஸ்ரர் பாடசாலை வாசலருகில் வந்து இறங்கவும், எட்டே முக்கால் வழிபாட்டு மணிஅடிக்கவும் சரியாயிருந்தது.

*



இரண்டேமுக்காலுக்கு மீண்டும் மாஸ்ரர் வெளியே வந்தபோது, வெய்யில் கண்ணை மின்னியது. காற்றேயில்லாத காங்கை.

இந்த வெய்யிலில், இந்தப்பள்ளி நெரிசல்களில் வீடுபோய்ச்சேர மூன்றேகாலாகிவிடும். அதன் பிறகென்ன மத்தியானச் சாப்பாடு என்று அலுத்தபடி சைக்கிளை மிதித்தார்.

வீடு போய்ச் சேர்ந்து, மேல் கழுவி, சாப்பிட்டுவிட்டு, 'முருகா' என்று பேப்பருங்கையுமாய் நாற்காலியில் சாய்ந்தபோது நாலுமணி.

"தம்பி இன்னும் ரியூஷனுக்கு வெளிக்கிடேல்லையோ?" மனைவியைக் கேட்டபடி பேப்பரைப் பிரித்தார்.

"தீபன்!", தாய் உள்ளே போனா. அதற்காகவே காத்திருந்தவன்போல வெளியே வந்து "போட்டு வாறன்" என்று சைக்கிளை எடுத்தான் தீபன்.

படலையைச் சாத்திக் கொழுவிவிட்டுத் தாவியவன், சட்டென்று குதித்து, பின் சில்லை அழுத்திப் பார்த்தான். சளிந்தது. சரிதான்! நாலைரைக்கு வகுப்பு. சைக்கிள்கடைவரை தள்ளத்தான் வேணும் - ஓட்டமும், நடையுமாய் உருட்டினான்.

"இரண்டு ஒட்டு", என்றார் சிறீயண்ணை, ரியூப்பைத் தண்ணீர் வாளியால் எடுத்தபடி.

"என்னவோ, கெதிப்பண்ணித் தாங்கோ அண்ணை, தயவு செய்து" - கணக்குகளின் நினைவாகவே இருந்தது தீபனுக்கு. நேரத்துக்கு வந்துவிடுவர், விக்ஸ்.

ஆனால், குளிப்பு, சாப்பாடெல்லாம் அவதி அவதியாய் அரைகுறையில் முடித்தும் அன்றைக்கு நேரத்திற்கு வரமுடியாமலாகிவிட்டது, விக்சுக்கு! இத்தனைக்கும் அன்று வேலைக்கும் போகவில்லை. வீட்டில் வயறிங் கொஞ்சம் சரிபார்த்து திருத்துவிக்கவேண்டியிருந்தது. "நீங்கள் காலமைபோய் சாமான்களை வாங்கி வையுங்கோ, நான் பத்துப் பத்தரைக்குள்ள வந்திடுவன்", என்று சொல்லியிருந்தான் பாலா.

என்றாலும், பாலா வரவே பன்னிரண்டாகிவிட்டது. அதன் பிறகு தொடங்கி, வேலையெல்லாம் முடிய மூண்டேகால்! அன்று முழுக்க யாரையோ ஏசிக்கொண்டேயிருந்தான் பாலா.

ஏதோ அலுவலாய் ஏதோ கந்தோருக்குப் போனானாம். அங்கிருந்த கிளாக்கர் மினக்கெடுத்தி விட்டாராம்!

"அரை மணித்தியாலத்திலை செய்யிறவேலை, ஸேர். அந்தாள் ஏதோ சட்டங்கள் பேசி மூண்டு மணித்தியாலம் சுணக்கிவிட்டுது! நல்ல பேர் வைச்சாங்கள், எருமை எண்டு....."

"எருமையோ?"

"அருமையாம்! அருமை....."

# என்திசை வழியில் என்னை யாரோ அவதானித்துக் கொண்டிருக்கிறார்



காலைப் பனிப்புகையடர்ந்த
இரண்டு உருவங்களுக்குள்
கூறுபட்டுக்கிடந்த இதயத்தசையை
காதலின் மொச்சை மூடிக்கிடந்தது.

புருவங்களில் விழியேறி
கண்கள் திரவங்களாய் உருண்டன.
ஆழ் நதியோடித் திரும்பலில்
காத்திருந்தன மண் பொம்மைகள்

மண் பொம்மைகளின்
மென் புன்முறுவலை
ஒரு மௌனக் கணத்தினிலோ
பெரும் பொழுதொன்றிலோ
நானே உரித்தெறிந்தே போனேன்.

அந்தமற்று விரிகிற அதட்டுச்சிரிப்புகளுக்குள்
அமுந்திப் போய்விடுகிறது. குழந்தைப்புன்னகை
மிஞ்சியிருக்கும் வலியை தவிர்த்துவிட முடிவதில்லை.
நீ பசியாறும் இலையோர மடிப்பில்
எனது இரத்தத்தை மீதமாக்கிவிட்டு
நான் உறங்கப் போகிறேன்.
பொம்மை விழிகளை மூடிக்கொண்டு.
எனக்குத் தெரியும்.
நீதான் என்னை அவதானித்துக் கொண்டிருக்கிறாய்.

□□

– சித்தாந்தன்

# மூடிகள் வெளிச்சமாய்..
# முகங்கள் இருண்டதாய்..



சிறுகதைகள்

கோகிலா மகேந்திரனின்
முகங்களும்
மூடிகளும்

மதிப்பீடு
செல்வி.எஸ்.சிவமலர்

உளவியற் கருப்பொருளைக் கொண்ட சிறுகதைகளின் தொகுதியாகக் கோகிலா மகேந்திரனின் "முகங்களும் மூடிகளும்" நூல் வெளிவந்திருக்கிறது. மனிதப் பாத்திரங்கள் எல்லாம் மூடிகளை அணிந்திருக்கின்றன. அந்த மூடிகளுக்குள் மறைந்திருக்கும் முகங்களைத் தேட வேண்டியுள்ளது என்ற கருத்தை அட்டைப்படம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. மூடிகள் வெளிச்சமாய் இருக்க முகங்கள் இருண்டுபோய் உள்ள நிலைமையையும் அட்டை சுட்டத் தவறவில்லை.

"முகங்களும் மூடிகளும்" கதையில் வரும் ஆச்சி, சனசமூக நிலையத் தலைவரான அப்பா, 'விஷம்' கதையில் வரும் பாம்புராஜா, "முகாமுக்குப் போகாத அகதி" கதையில் தோன்றும் மாலாவின் மாமி, 'பெண்பனை' கதையில் பாத்திரமாகும் பாலராஜா, 'நெருஞ்சி' கதையில் வரும் நடத்துநர், 'ஏ-9 பாதை' கதையில் காணப்படும் 'சுது ரவல்ஸ்' ஓட்டுநர் போன்ற பாத்திரங்கள் மூடியணிவது நல்லதில்லை என்பதையும், அது உள ஆரோக்கியமற்ற நிலை என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

மாணவர்களுடைய பிரச்சினைகள் அவர்களுடைய நடத்தையில் எப்படி மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதைச் சில பாத்திரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. பிறழ்வின் தோற்றம் கதையில் வரும் மாணவன் இப்படிக் கூறுகிறான், "என்ன மேசையிலை ஏறிறதும் இறங்கிறதுமா நிக்கிறனோ? ஓ..... அப்பிடித்தான் வகுப்பிலை ஒரு இடத்திலை இருக்க மாட்டன். ஓ...... கோவம் வந்தா.. வகுப்பிலை பெடியளுக்கு அடிப்பன். பேந்து பட்டந்தரிக்கிற ஆக்களுக்கெல்லாம் பிடிச்சு நல்ல சாத்துப்படி குடுத்திடுவன்...."

இந்தப் பிள்ளையின் ஆக்ரோஷ நடத்தை வெளிப்பாட்டுக்கு இவனது தந்தையார் முக்கிய காரணமாக இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம்.

முகாமுக்குப் போகாத அகதி கதையில் வரும் தங்கை, "பப்பியை விட்டிட்டு வந்திட்டம். பாவம் றவுண்ட்ஸ் பட்டுச் செத்துப் போச்சுதோ என்னவோ?" என்று சொல்லுகிறபோது ஒரு நாயின் இழப்பு எப்படி ஒரு சிறுமி மனதில் 'இழவிரக்கம்' என்ற பிரச்சினையாக உருவாகும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிந்துகொள்கிறோம்.

"அவர் அப்ப என்னைத் தூக்கிக் கொண்டு திரிவார். எல்லாருக்கும் முன்னாலையும் என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சுவார். கிள்ளுவார்...." என்று பேசும் மாணவியின் பாத்திரம் (உயர்ந்து செல்லும் சீரழிவுமானி) மாணவர் மத்தியில் சிறுவர் துஷ்பிரயோகம் வளர்ந்து செல்லும் வேகத்தை நோக்கி எம்மை விழித்தெழ வைக்கிறது.

"முடியாத ஒன்றைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்து அவரே ஏமாந்து போயிருப்பதற்கு அவள் எவ்விதத்திலும் பொறுப்பாக முடியாது" என்று ஆசிரியர் (முகங்களும் மூடிகளும் கதை) கூறும்போது பெற்றோரின் மனநிலை தொடர்பான பிரச்சினையை எம்முன் வைக்கிறார்.

"மதுபானம் அருந்தாத, சிகரெட் புகைக்காத, மச்ச மாமிசம் உண்ணாத, இறை நம்பிக்கை மிக்க விழுமியங்கள் நிறைந்த ஆசிரியர் பாடசாலைச் சூழலில் வாழ்ந்து வந்தாலே மாணவருக்கு அது பெரும் வர்ப்பிரசாதமாக அமையும்" என்ற கருத்து (தொண்டர்) ஆசிரியர் உலகத்தைச் சிந்திக்கச் செய்யும்.

திருமணம் செய்யாமல் உழைத்துத் தர வேண்டும் என எதிர்பார்க்கும் சாதாரண யாழ்ப்பாணத்து அக்கா யாழ்ப்பாணத்து மனப்பாங்கை எடுத்துக்காட்டும் பாத்திரமாக எம்மை யோசிக்கச் செய்கிறார்.

"ஒரு வருடத்துக்கு மேலாகக் கணவன்

பற்றிய தகவல் இல்லை. சாத்திரக்காரர் 'இருக்கிறார்' என்று தீர்மானமாகச் சொல்லுகிறார்களாம். 'பூவும் பொட்டுமாய். இவ சிங்காரித்துத் திரியிறா' என்று ஊர் கதைக்கிறதாம். இந்தப் பாத்திரம் மறத்தல் (*Denial*) என்ற உளப்பாதுகாப்புக் கவசத்தை எமக்கு நினைவூட்டுகிறது.

நெருஞ்சியில் வரும் நடத்துநரின் அக முரண் அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அவன் கூறுவான்.

"உதிலை துரை வீதியிலை கனபேர் இறங்கப் போயினம் ஏறுங்கோ"

"இல்லை. இல்லை. துரைவீதி இறக்கமில்லை. றைற்"

"பஸ் போற பக்கம் பாத்துக்கொண்டு பின்னுக்குப் போங்கோ. வாசல்லை என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு நிண்டு என்னெய்யப் போறியள்?"

"அடியிலை போய்க் கிடந்திடுவியள். கெதியா வாங்கோ. புற் போட்டிலை நிண்டாப் பொலிஸ்காரனோடை பிரச்சினைப் படோணும். ஒரு மாதிரி மேலை ஏறுங்கோ."

சாதாரணம் போல உலாவுகிற உள ஆரோக்கியக் குறைவுடைய ஒரு பாத்திரம் இவன்.

உள ஆரோக்கியக் குறைவைச் செம்மைப்படுத்துவதற்கான தீர்வு முறைகளும் இந்நூல் முழுவதும் பூக்கள் போல வீசப்பட்டுள்ளன. சீர்மிய அமர்வுகள் பற்றியும், உடனிருத்தல், உற்றுக்கேட்டல், ஒத்துணர்வுப்பதில் வழங்கல் போன்ற நண்திறன்கள் பற்றியும் பல இடங்களில் பேசப்படுகின்றன. ஒரு சீர்மியர் எப்பிடித் திறந்த வினாக்களைக் கேட்கவேண்டும் என்பது, "உங்களுக்கு விருப்பமான விஷயங்களைப் பற்றிச் சொல்லுங்கோ. அப்பாவைப் பற்றிக் கொஞ்சம் சொல்றீங்களா?" (இளம் கனவு) என்ற இடத்தில் சுட்டப்படுகிறது. இளம் கனவு சித்திரம் மூலமான வெளிப்பாட்டுச் சிகிச்சை பற்றியும் பேசுகிறது.

"நல்ல காற்றுள்ள பூந்தோட்டத்தில் நின்று ஆழமூச்செடுத்து விட்டுப்பார். ஒரு தீபத்தைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிரு. கண் மடல்கள் களைத்துப் போகத் தீப ஒளியை மனக்கண்ணுக்கு மாற்றிப் புறக்கண்ணை மூடிக்கொள். தீபத்தினூடு எல்லாம்வல்ல இறைவனுக்கும் உனக்கும் ஒரு இறுக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்" என்று வரும் இடங்கள் (மெத்தென்ற மௌனம்) சாந்தவழி முறைச் சிகிச்சைகளை நினைவூட்டுகிறது.

இதுவரை வெளிவந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் தொகுதிகளில் வித்தியாசமான போக்கிலும் நோக்கிலும் அமைந்த தொகுதியாக இதைக் கருதலாம் என்று கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் சொல்வதைத் தயக்கிமின்றி வழிமொழியலாம்.

# சேர்ந்திருந்தால்!

ஆழத்தின் பெருமை
திமிர்
நடந்தும் வரும் ஓடியும் வரும்
உறங்கியும் விடும்
இதன் விளைவுகள்.

மேலே வந்து வட்டம் போட்டு
பார்த்து விட்டு
வந்த வேகத்தில்
கீழே போய் ஏதோ
பேசிவிட்டு
கிளறி விடும் சுழியோட்டம்.

ஆழத்தில் எதுவித பிரச்சனையுமில்லாமல்
தீங்கு செய்யாமலும்
சந்தோஷமாக இருக்கும்
கடல் வாழ் பொருட்கள்
கரைக்கு
வீசி எறியப்படும்.

கொண்டு வரவும்
கொண்டு போகவும் தான்
அலை.

நிறுத்தவும் முடியாது
அமைதியாக இருக்கவும் முடியாது
அதற்கேற்ப
ஓடிக்கொண்டிருக்கின்றது.

மீண்டும்
மேலே வந்து வட்டம் போட்டு
பார்த்து விட்டு
வந்த வேகத்தில்
கீழே போய் ஏதோ
பேசிவிட்டு
கிளறி விடும் சுழியோட்டம்
சேர்ந்திருந்ததால் தான்.

● துன்னாலை செல்வம்

# நலியோமெனும் நம்பிக்கை 1

தமிழில் தம்மகவுக்குப் பெயர் சூட்டியோருக் குக் கனடா சிலம்பம் அமைப்பினர் தாயகத்தில் பரிசளித்து மதிப்பளித்த விழாக் காட்சிகள்.



அரிமா அழகன்

தேசம் பிரிந்து புலம்பெயர்ந்த நிலையிலும் ஈழத்தமிழரின் தாயகம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என கனடா விலிருந்து எம் மண்ணுக்கு அரும்பணி யாற்றவென 'சிலம்பம்' அமைப்பினர் செய்துவரும் காலப்பணி எமக்கு நம்பிக்கை தருகிறது. தம் மகவுக்குத் தமிழ்ப்பெயர் சூட்டியோருக்கு மதிப் பளிக்கும் திட்டத்தின்மூலம் தமிழின் வாழ்வைத் தம்வாழ்வாகக் கருதி கனடா விலிருந்து செயற்படும் திரு.அரிமா அழகன், திரு.செங்கதிர் அவர்களுடன் இணைந்த இன்னும் சிலரின் உழைப் பில் அண்மையில் திருகோணமலை யில் மகவுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டிய பெற்றோருக்கு மதிப்பளிக்கும் விழா வின் காட்சிகள் இவை. நலிவடை யோம் நாமெனும் நம்பிக்கை எமக்குள் சுடர்கிறது. இது போன்ற மதிப்பளிப்பு விழாவை அண்மையில் சிலம்பம் அமைப்பு யாழ்ப்பாணத்திலும் நடத்தி யது குறிப்பிடத்தக்கது. கனடா சிலம் பத்தை தாயகத்தின் சார்பில் வாழ்த்து கிறோம்.












# நலியோமெனும் நம்பிக்கை 2










பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தினர் நடாத்திய தமிழர் பாரம்பரிய கலை வடிவங்களின் ஊர்வலக் காட்சிகள்.



மெற்றாஸ்மயில்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினர் தமது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி இம்மாதம் 16.07.2004 தொடக்கம் மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடத்திய பாரம்பரிய கலைகள் ஆற்றுகையும், கலைஞர் கௌரவமும் எம் பாரம்பரிய கலைகள் புத்துயிர்ப்புப் பெறுவதை எமக்குச் சொல்கிறது. கலைஞர் மெற்றாஸ்மயில் அவர்களின் அயராத உழைப்பும் அவருடன் இணைந்த எம் தேசத்து தமிழர் பாரம்பரியக் கலைஞர்களின் ஒருங்கிணைப்பும் எம் இனத்துக்குரிய ஆணிவேர்களை அடையாளப்படுத்துவதாக அமைகிறது. இளைய தலைமுறையினரிடமும், மாணவர்களிடையேயும் உலகமயமாதலின் அலை வலுவாக அடிக்கும் இந்நேரத்தில் எம் பாரம்பரிய வாழ்வை எடுத்துக்காட்டும் இம்முயற்சிகள் நலிவடையோம் நாமெனும் நிமிர்வை எமக்குத் தருகின்றது. இனத்தின் வாழ்வுரிமைக்காகப் போராடும் எம் மண்ணில் எம் கலைகளை எல்லோரும் இணைந்து மீட்டெடுப்போம்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# இராஜதர்மராஜா நேர்காணல்

**கேள்வி: உங்களது சராசரி வாழ்வோட்டம் இலக்கியத்தின் பக்கம் திரும்பியதற்கான பின்புலத்தைக் கூறுவீர்களா?**

பதில்: என்னுடைய இலக்கியப் பிரவேசம் பற்றிப் பெரிதாகச் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு அதிகம் இல்லாவிட்டாலும்கூட அதுபற்றிச் சில நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளலாம். 1969ஆம் ஆண்டு திருகோணமலை இந்துக்கல்லூரியில் விஞ்ஞானத்துறையில் உயர்தரக்கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அக்காலத்தில் திருகோணமலை கல்வியில் பின்தங்கிய பிரதேசமாகத்தான் இருந்தது. பெரியளவில் கல்வி கற்பதற்கான வசதிகளும் இருக்கவில்லை. இந்தச் சூழலில் உயர்தரக் கலைப் பிரிவில் கல்வி கற்றுக்கொண்டிருந்த நண்பர்கள் சிலர் கவிதை எழுதும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். குறிப்பாக திருமலை நவம் போன்றவர்கள். அவர்கள் சிலரின் கவிதைகள் பத்திரிகைகளிலும் பிரசுரமாகின. அதைப் பார்த்த போதுதான் நானும் இந்த முயற்சியில் ஈடுபட்டால் என்ன என்ற எண்ணம் ஏற்பட்டது. அதற்கான வாசிப்புப் பின்னணியும் எனக்கு ஓரளவு இருந்தது. ஆயினும் அது ஆரம்பநிலை வாசிப்புத்தளம்தான். கல்கி, அகிலன், பார்த்தசாரதி போன்றோரது எழுத்துக்கள்தான் எனக்கப்போது பரிச்சியமாக இருந்தது. எனது சக மாணவநண்பனான சங்கரலிங்கம் என்பவர் இலக்கியத்தில் ஆர்வமுள்ளவராக இருந்தார். அவர் மலையகத்தைச் சேர்ந்தவர். நானும் அவருமாக இணைந்து முறைசார் கல்விக்கு அப்பால் இலக்கியத் தேடலில் இறங்கினோம். வாசிப்பார்வம் எங்களைத் தொற்றிக் கொண்டது.

இந்தக் காலத்தில் செம்பியன்செல்வன் என்றழைக்கப்படும் இராஜகோபால் அவர்கள் திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரிக்கு ஆசிரிய

திருகோணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட மருத்துவரான இராஜ தர்மராஜா 1970ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலிருந்து எழுதத்தொடங்கி கணிப்புக்குள்ளான சிறுகதைகளையும் கவிதைகளையும் படைத்து இலக்கிய உலகில் நன்கறியப்பட்டவர். இவரின் சிறுகதைத் தொகுப்பு நூலொன்று விரைவில் வெளிவரவிருக்கிறது. எங்கும் விதந்துரைக்கப்படும் தருமு சிவராமுடன் (பிரமிள்) இளவயதில் நெருக்கமான தொடர்பும் உறவும் கொண்டிருந்த இவர் பின்னர் மார்க்சிசத்தில் ஈடுபாடுகொண்டு அதற்கான இயங்கு தளங்களில் தன்னை இணைத்துக்கொண்டவர். திருகோணமலையில் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு இவரின் பங்களிப்புக் கணிசமானது. வெளிச்சத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்புச் செய்துவரும் இராஜதர்மராஜா திருகோணமலை 'முன்னோடிகள்' இலக்கிய அமைப்பின் மூலவர்களில் ஒருவர். மருத்துவரான இவர் தனியார் மருத்துவமனையொன்றை நிர்வகித்து வருகின்றார். வெளிச்சத்துக்காக 'சுட்டும்விழி' இதழாசிரியர் யதீந்திரா இந்த நேர்காணலைச் செய்துள்ளார்.

\- வெளிச்சம்


**இப்பொழுது எமக்கு முக்கியம் தமிழ்த்தேசியத்தைப் பலப்படுத்துவதுதான். இதனை எந்த மார்க்சிசவாதியும் மறுதலிக்கமுடியாதது மட்டுமல்ல மறுதலிக்கவும் கூடாது.**

**நேர்கண்டவர்: யதீந்திரா**

ராக இடமாற்றம்பெற்று வந்துசேர்ந்தார். அவரது நட்பும் எங்களுக்குக் கிட்டிற்று. உண்மையில் அவர்மூலம்தான் ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகள், சிறந்த நூல்கள் எங்களுக்கு அறிமுகமாகின. ஜெயகாந்தன், மௌனி, லா.ச.ரா போன்றோரது எழுத்துக்களைப் படித்தோம். மௌனியின் எழுத்துக்களைப் படித்தபோது அவரைப்பற்றி இன்னும் அறியவேண்டும் என்ற ஆர்வம் மேலிட்டது. அப்போது இந்துக் கல்லூரிக்கு அருகில் வாழ்ந்த தருமு சிவராமு (பிரேமிள்) டன் தொடர்புகளை ஏற்படுத்தினோம். அவருடனான தொடர்பு இன்னும் எங்களின் இலக்கியத் தேடலை விரிவுபடுத்த உதவியது. அவர் மூலம் தமிழகத்திலிருந்து வெளிவந்த எழுத்து 'கசடதபற' போன்ற சஞ்சிகைகள் கிடைத்தன. ஒரு தீவிர இலக்கியத் தேடலுக்கு நான் ஆட்பட்டேன். இதன் காரணமாக முறைசார் கல்வியை ஒருவருடம் கோட்டைவிடவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இக் காலத்தில் திருகோணமலைக் கச்சேரியில் பணிபுரிவதற்கென நல்லை அமிழ்தன், கி.பவானந்தன் போன்றோர் வந்துசேருகின்றனர். அவர்களுடனும் எனக்குத் தொடர்புகள் ஏற்படுகிறது. இதேசமகாலத்தில் (அதாவது 1972 - 73 ஆம் ஆண்டுக் காலப் பகுதி) என எண்ணுகிறேன். நண்பர் புதுவை இரத்தினதுரை அடிக்கடி திருகோணமலைக்கு வந்துபோகும் நிலையொன்றிருந்தது. புதுவை இரத்தினதுரையின் வருகையின் பின்னர்தான் எம்மத்தியில் அரசியல் ரீதியான பார்வையுடன் கூடிய இலக்கியம் நோக்கி நகர்ந்தோம் உண்மை

யில் புதுவையின் வருகையின் பின்னர்தான் மார்க்சிசத் தாக்கம் என்னைத் தொற்றிக்கொண்டது. இலக்கியத்துக்கு அப்பால் சமூக, அரசியல் சார்ந்தும் சிந்திக்க வேண்டிய தேவையை உணர்ந்துகொண்டேன். இப்போதுதான் நாங்கள் அனைவரும் இணைந்து 'முன்னோடிகள்' என்ற அமைப்பை உருவாக்கினோம். இத்தகைய பின்னணியும், தொடர்புகளும், வாய்ப்புகளும்தான் நான் இலக்கியத்தின் பக்கம் வருவதற்கான காரண மேயன்றி வேறுகுடும்பப் பின்னணிகளோ, கருவிற்திருவுடைய காரணங்களோ எனக்குக் கிடையாது.

**கேள்வி: முன்னோடிகள் அமைப்புப் பற்றிக் கூறினீர்கள். முன்னோடிகள் அமைப்பின் அக்காலகட்டப் பணிகள் குறித்துச் சற்று விபரமாக விளக்கமுடியுமா?**



பதில்: 1974ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எந்தத் திட்டமிடலுமின்றித் தற்செயலாக உருவாக்கப்பட்ட அமைப்பே முன்னோடிகளாகும். நல்லை அமிழ்தன், நான், கி.பவானந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை, இரத்தின.விக்கினேஸ்வரன், திருமலை நவம், அலெக்ஸ்தோட்டம் சிவலிங்கம், செல்வ.பத்மநாதன் இன்னும்பலர் மாலைநேரங்களில் அரசாங்க ஊழியர் விடுதியில் தினசரிகூடுவோம். விடியவிடிய இலக்கியம் பேசுவதே எமக்கிருந்த ஒரே வேலையென்றாகியிருந்தது. (அந்த அரசஊழியர் விடுதி இப்பொழுதும் சுங்கவீதியில் என் நினைவுக்குத் தடமாக இருக்கிறது) இதில் நல்லை அமிழ்தன், கி.பவானந்தன் ஆகியோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் யாழ்ப்பாண இலக்கிய முயற்சிகள், சஞ்சிகை வெளியீடுகள், நூல்கள் பற்றியெல்லாம் இவர்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

நான் முன்னர் குறிப்பிட்டதுபோன்று இதேகாலத்தில் நண்பர் புதுவையின் வரவும் நிகழ்ந்தது. இவர் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட பார்வை உடையவராக இருந்தார். இலக்கியத்துக்கு அப்பால் சமூக மாற்றம் சார்ந்து சிந்திப்பவராகவும் இருந்தார். இவரது வருகையும், கருத்துக்களும் எங்கள் மத்தியில் இயங்கவேண்டும் என்ற உத்வேகத்தை ஊட்டியது. நாங்கள் வெறுமனே இலக்கியத்தைப் பேசிக்கொண்டிருப்பதுமட்டும் போதாது இலக்கியத்தை மக்கள் மத்தியில் பரவலாக்கவேண்டும், புதியவர்களை உருவாக்க வேண்டும் போன்ற சிந்தனைகளும் எமக்குள் பிறந்தன. முன்னோடிகள் என்ற பெயர்கூட தற்செயலாகத் தீர்மானிக்கப்பட்டதுதான். ஒவ்வொரு பௌர்ணமி நாளும் இலக்கியச் சந்திப்புக்களை ஏற்படுத்தி எமக்குள்ளே விவாதித்தும், படைப்புக்களைப் பரஸ்பரம் பரிமாறியும் எம்மை வளர்த்துக்கொண்டோம். ஆரம்பத்தில் சிலராக இருந்தநாம் காலப்போக்கில் பலராகி முன்னோடிகள் அமைப்பு எங்கும் அறியப்பட்டதாகிவிட்டது. வெளிமாவட்டங்களிலிருந்தும் அறியப்பட்ட எழுத்தாளர், கலைஞர்களை அழைத்துக் கருத்தரங்குகளை நடத்தினோம். வ.அ.இராசரத்தினம், சில்லையூர் செல்வராசன், கே.டானியல், என்.கே.ரகுநாதன் இன்னும் பலரின் தொடர்புகள் எமக்கேற்பட்டன.

இந்தப் பின்னணியில்தான் இன்றும் வெகுவாகப் பேசப்படும் பெரிய எழுத்தாளர்கள், கலைஞர்கள் மாநாட்டை ஒழுங்குசெய்து நடத்தினோம். நல்லை அமிழ்தன், புதுவை இரத்தினதுரை, திருமலை நவம், கி.பவானந்தன், சாருமதி, சுபத்திரன், கலைவாதி கலீல், பாலமுனை பாரூக், அன்புடீன், செ.கணேசலிங்கன், சில்லையூர் செல்வராசன், என்.கே.ரகுநாதன், நந்தினி சேவியர், கே.தங்கவடிவேல் போன்ற அக்கால முக்கிய படைப்பாளிகள் எல்லோரும் இம்மாநாட்டில் பங்குகொண்டனர். பொதுவுடமை தத்துவநிலைப்பாடு பற்றியும், இடதுசாரி அரசியல் செயற்பாடு பற்றியும், இவைகளை உள்ளடக்கிய இலக்கியப் படைப்பாக்கம் பற்றியும் விரிவாகப் பேசினோம், கலந்துரையாடல்கள் நடத்தினோம். என்னைப் பொறுத்தமட்டில் இந்த மாநாடு முன்னோடிகள் அமைப்புச் செய்த மிகப்பெரிய காலப்பணியாகக் கருதுகிறேன். திருகோணமலையில் இலக்கிய ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் புதிய உத்வேகமும், விழிப்பு நிலையும் ஏற்பட்டதற்கு முன்னோடிகள் அமைப்புத்தான் காரணம் எனத் துணிந்து கூறுவேன்.

***கேள்வி: ஒரு காலத்தில் (உங்களது காலத்தில்) திருகோணமலை இலக்கிய***

**ரீதியாக விதந்து கூறத்தக்க நிலையில் இருந்தது. ஆனால் இன்றைய சூழலில் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது திருகோணமலை திருப்திப்படக்கூடிய நிலையில் இல்லை என்பது ஒரு பொதுவான அபிப்பிராயம். அதில் உண்மையும் இல்லாமல் இல்லை. இந்த வீழ்ச்சி நிலையை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

*பதில்:* என்னளவில் இதனை நான் காலமாற்றத்தோடு பார்க்கிறேன். வரலாற்றில் ஒரு விடயம் எல்லாக் காலங்களிலும் எழுச்சிமிக்கதாக இருப்பதில்லை. எங்களுடைய காலத்தில் தொடர்பு சாதனங்கள் இந்தளவிற்கு ஆதிக்கத்துடன் இருக்கவில்லை. இன்றைய கல்வி முறையும் முழுமையாகவே இயந்திரத்தனமாக மாறிவிட்டது. மாணவர்கள் ரியூட்டரிக் கலாச்சாரம் ஒன்றிற்கு ஆட்பட்டுக் கிடக்கின்றனர். இவைகள் நகர்மயமாதலோடு இணைந்தபோது நிலைமை மோசமாகிவிடுகின்றது. எங்களுக்கு முன்னர் மூத்த தலைமுறையினரான வ.அ.இராசரத்தினம், நா.பாலேஸ்வரி அக்கா ஆகியோர் இலக்கிய முயற்சிகளில் தீவிரத்துடன் இயங்கினர். அரசாங்க சேவைக்காக வந்த பலரும் இலக்கியப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். குறிப்பாகச் செங்கைஆழியான், செம்பியன் செல்வன், கலா பரமேஸ்வரன், பற்குணம், டிவகலாலா ஆகியோரின் பணிகள் திருகோணமலை இலக்கியத் துறைக்கு வளம் சேர்த்திருக்கின்றன. ஆனால் காலப்போக்கில் தமிழ்த்தேசிய எழுச்சி மேலெழுந்தபோது கூடவே பேரினவாதத்தின் அகோர நிலையும் மேலெழுந்தது. இளைஞர் சுதந்திரமாக எழுத, கருத்துக்கூறமுடியாத நிலைமை தோன்றியது. எங்களோடு இருந்த நண்பர்கள் பலரும் தேசிய எழுச்சியினுள் உள்வாங்கப்பட்டனர். உதாரணமாக புதுவை இரத்தினதுரை தேசிய எழுச்சிக்கு ஆட்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்துகொண்டார். அதற்காக, எங்களுக்கு பிறகு ஒரு முயற்சியும் நடைபெறவில்லையென்று கூறிவிடமுடியாது. எங்களுக்குப் பின்னர் சங்கப்பலகை என்ற அமைப்பும் இயங்கியது. அவர்களும் பல இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டனர். தம்பி தில்லைமுகிலன் போன்றவர்கள் சில முயற்சிகளில் ஈடுபட்டனர். இளைய தலைமுறையைப் பொறுத்தவரையில் நண்பர் யதீந்திராவின் முயற்சிகள் குறிப்பிடத்தக்கன. அவர் 'சுட்டும்விழி' என்ற சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டு வருகின்றார். சமூக, அரசியல் சார்ந்த கருத்தரங்குகளை நடாத்துகின்றார். அதேபோன்று இளைய தலைமுறை எழுத்தாளர்




கள் உருவாகியிருக்கின்றனர். குறிப்பாக கௌரிபாலன் போன்றவர்கள். திருமறைக் கலாமன்றத்தினரின் முயற்சிகளும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக இருக்கின்றது. மயூரன், வேலவன் போன்ற மாணவர்களும் இலக்கியத்தின் பக்கம் வந்திருக்கின்றனர். சில முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுமிடத்து எங்களது முயற்சிகள் குறைவாக இருக்கலாம். ஆனால் இன்னொரு விடயத்தையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுமிடத்து எங்களுடைய மாவட்டம் சிறிய மாவட்டம். ஆகவே அளவிற்கு ஏற்றதான முயற்சிகள் இருக்கத்தான் செய்கின்றன.

*கேள்வி:* **தருமு சிவராமுடனான தொடர்புகள் பற்றிக் கூறினீர்கள். தருமு சிவராம் பெரும்பாலும் ஓர் ஆன்மீகக் கருத்து நிலைப்பட்டவராக அடையாளம் காணப்பட்டிருப்பவர். அவரது தமிழக நண்பர்கள் அனைவரும்கூட கருத்துநிலைப் பார்வையுடையவர்கள்தான். குறிப்பாக மார்க்சிச எதிர்ப்பாளர்கள் இந்நிலையில் அவருடனான உங்கள் தொடர்பு எப்படி அமைந்திருந்தது? குறிப்பாக அவர்பற்றி நீங்கள் எழுதியும் இருக்கின்றீர்கள்.....**

*பதில்:* அவரது கருத்துநிலை ஆன்மீகம் சார்ந்ததென ஓரளவு கூறமுடிந்தாலும் பெரிதாக அவர் ஆன்மீகக் கருத்துலகில் சஞ்சரித்தவர் எனக் கூறமுடியாது. நான் பழகிய அடிப்படையில் கூறுகின்றேன். நானும் எனது நண்பர் சங்கரலிங்கமும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவருடன் கலந்துரையாடுவோம். அவர் பல விடயங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்வார். உண்மையில் அவரது கருத்துநிலைப்பாடு தீவிர இலக்கியம் சார்ந்ததாகத்தான் இருந்தது. அவர் அதிகம் அரசியல் சார்ந்து சிந்திக்காதவராகத்தான் இருந்தார். அவர் ஒரு சுதந்திரக்

கலைஞனாக இருக்க விரும்பினார். எந்நேரமும் எழுத்து முயற்சியில் இருப்பார் அல்லது ஓவியம் வரைந்துகொண்டிருப்பார். ஒரு சிற்பத்தை உருவாக்கும் முயற்சியில் இருப்பார். அவருக்கு இருந்த ஆங்கிலப் புலமைக்கு அவர் பல தொழில்களுக்குச் சென்றிருக்கலாம். சில தொழில்களுக்கும் சென்றார். ஆனால் அவரால் எதிலும் நிலைத்திருக்க முடியவில்லை. அந்தளவுக்கு அவர் ஒரு சுதந்திரக் கலைஞனாக இருக்க விரும்பினார். இதன் சரிபிழை வேறு. தனது முயற்சிகளுக்கு ஈழச்சூழல் பொருத்தமற்றது எனக் கருதியபோது பிரான்சுக்குப் புறப்பட்டார். ஏஜன்டால் ஏமாற்றப்பட்டார். இறுதியில் தமிழ் நாட்டிலேயே தங்கவேண்டியநிலை ஏற்பட்டது. இந்தக் காலத்தில்தான் நீங்கள் மறைமுகமாகக் கூறிய கா.நா.சு., மௌனி, வெங்கட்சாமிநாதன் போன்றோருடன் இணைந்து செயற்பட்டார். நீங்கள் கூறியதுபோன்று இவர்கள் கருத்துநிலைப் போக்குடையவர்கள்தான். குறிப்பாக இடதுசாரி எதிர்ப்பாளர்கள்.



தருமுவைப் பொறுத்தவரையில் இவ்வாறானவர்களுடன் இணைவதற்கு 'எழுத்து'ப் பத்திரிகையும், அதனோடு இருந்த தொடர்பும்தான் காரணம். அதற்காகத் தருமு முழுமையாக அரசியல் கருத்துக்களை எதிர்த்தார் என்று கூறிவிட முடியாது. அவருக்கு சேகுவராவின் படைப்புக்களில் ஈடுபாடிருந்தது. பிடல் காஸ்ரோவின் கருத்துக்களில் பிடிப்பு இருந்தது. அவர் முழுமையாக இடதுசாரி எழுத்தாளர்களை எதிர்த்தார் என்றுமில்லை. சிலரை எதிர்த்தார், சிலரை ஆதரித்தார். அவரை ஒரு படைப்பாளியாக மட்டுமே நாம் பார்க்கவேண்டும். அதற்காக நான் அவருடைய கருத்துக்களோடு ஒத்துப் போனேன் என்பதில்லை. அவரும் எவர்மீதும் தன்னுடைய கருத்துக்களைத் திணிக்கவும் இல்லை.

**கேள்வி: பொதுவாக ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. அதனை ஒரு குற்றச்சாட்டாகவும் கொள் எல்லாம். இடதுசாரிகள் எனப்படுவோர் ஆரம்பத்தில் தமிழர் தேசியப்பிரச்சினையைப் புரிந்துகொள்வதில் தவறிவிட்டனர் என்பது தான் அது. ஒரு இடதுசாரி என்ற வகையிலும் அக்காலகட்ட அரசியலோடு உணர்வுரீதியாக இணைந்திருந்த ஒரு படைப்பாளி என்ற வகையிலும் இக்குற்றச்சாட்டை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**


பதில்: இக்குற்றச்சாட்டை நான் முழுமையாக மறுதலிக்கின்றேன். இடதுசாரிகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உதவினார்களே ஒழிய ஒருபோதும் எதிராகச் செயற்பட்டிருக்கவில்லை. சிலர் உண்மைக்கு மாறாக இக்குற்றச்சாட்டைப் பிரச்சாரப் படுத்துகின்றனர். உலகளவில் மார்க்சிசம் ஒரு பெரிய அலையாக எழுந்தபோது அதனால் தாக்குண்டு பல்வேறு அரசியல் செயற்பாடுகள் மேலெழுந்தன. இலங்கைச் சூழலிலும் பல இடதுசாரித்தலைவர்கள் உருவானார்கள். அது தமிழ்த் தலைவர்களாக இருக்கலாம், சிங்களத் தலைவர்களாக இருக்கலாம். இன்று நாம் போற்றும் தலைவர்கள் எல்லோருமே பிரித்தானியக் காலனித்துவத்தை ஏற்று அவர்களுக்கு அடங்கி, மதம் மாறி, தொழில்பெற்று அரசியல் நடாத்தியபோது, இடதுசாரித் தலைவர்கள் அதற்கு மாற்றான அரசியலை முன்னிலைப்படுத்தினர். ஒட்டுமொத்தமான இலங்கைக்குமான சுயாதிபத்திய விடுதலைபற்றிப் பேசினர். அவர்கள் இனத்துவத்தை மையப்படுத்திச் சிந்திக்கவில்லை. அப்படியொரு சூழலும் அப்பொழுது இருக்கவுமில்லை. ஆனால் காலப்போக்கில் சில இடதுசாரிகள் பாராளுமன்றச் சந்தர்ப்பவாதத்துக்கு ஆட்பட்டு, தமது கொள்கைகளுக்கு முரணாகச் செயற்பட்டது உண்மைதான். நாங்கள் இந்தப்

பாராளுமன்ற அரசியல் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையுமில்லை. அதனால் பெரிதாக ஒன்றையும் சாதித்துவிடவும் முடியாது.

ஆனால் சமூக, அரசியல் ரீதியாக இடதுசாரிகள் பணி என்ன என்பதைத்தான் நாம் கருத்திற் கொள்ளவேண்டும். உண்மையான இடதுசாரிகள் தமிழ்மக்களின் உரிமைக்காகப் போராடத் தவறவில்லை. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக அவர்கள் குரல் கொடுக்கத்தவறவில்லை. உதாரணமாக நான் ஒன்றைச் சொல்வேன். 1970 ஆக இருக்கவேண்டும். இலங்கையின் பல பாகங்களிலும் தமிழ்மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு. அதன் அடிப்படையில் அவர்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமையுமுண்டு. அதே போன்று மலையக மக்களுக்கும் சுயநிர்ணய உரிமையுண்டு என்ற கோரிக்கைகளை முன்வைத்து இடதுசாரிகள் சுவரொட்டிகளை ஒட்டினர். நாங்கள் அந்த சுவரொட்டிகளைத் திருகோணமலையில் ஒட்டியிருக்கிறோம். அந்தக் காலத்திலேயே இடதுசாரிகள் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுத்திருக்கின்றனர். நான் முன்னரே குறிப்பிட்டதுபோன்று எல்லாவற்றினதும் உச்சமாக நாங்கள் விடுதலைப் போராட்ட அரசியலில் இணைந்திருக்கிறோம். தமிழர் விடுதலைப் போராட்டத்தையும், தமிழர் தேசியத்தையும் பாதுகாப்பதுதான் எங்களுக்கு முக்கியமானது. இதனை எந்த மார்க்சிசவாதியும் எதிர்க்கமுடியாது.

**கேள்வி: இறுதியாக ஒரு கேள்வி. ஒரு காலகட்டப் படைப்பாளி என்றவகையில் தற்கால விமர்சனப்போக்குகள்பற்றிய உங்கள் அவதானத்தைப் பகிர்ந்துகொள்கிறீர்களா?**

பதில்: நான் ஒரு படைப்பாளி. தற்போது அதிகம் படைப்பு முயற்சிகளில் ஈடுபடாவிட்டாலும்கூட எனது பிரதான இயங்குதளம் படைப்புத்தான். ஒரு படைப்பாளிக்கு விமர்சனம் தேவை. அது எப்படியான விமர்சனமாகவும் இருக்கலாம். ஆனால் தற்கால விமர்சனப்போக்குகள் ஆரோக்கியமாக இருப்பதாகக் கூறமுடியாது. ஈழத்து விமர்சனத் துறை ஆரம்பத்தில் மிகவும் சிறப்பாக இருந்தது. அத்தகைய சிறப்பிற்கு பேராசிரியர் கைலாசபதியும், பேராசியர் கா.சிவத்தம்பியும் ஆற்றிய பங்களிப்பு அபரிமிதமானது. ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் அவர்களது விமர்சனங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் இன்று அவர்களின் இடம் வெற்றிடமாகவே கிடக்கின்றது. பல்கலைக்கழக மட்டத்திலும் அதற்கு வெளியிலும் ஆரோக்கியமான விமர்சன அணுகுமுறையையோ, ஆற்றல் மிக்க விமர்சகர்களையோ காணமுடியவில்லை. விமர்சனத் துறையில் நாங்கள் மிகவும் பலவீனமாகத்தான் இருக்கிறோம். அதேநேரம் தமிழகத்தில் விமர்சனத்துறை மிகவும் வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்த இடத்தில் நாங்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரையும் குற்றஞ்சாட்ட வேண்டித்தான் இருக்கிறது. அவர்களும் தங்களுக்குப் பின்னர் விமர்சனத்துறையில் ஆற்றல் மிக்கவர்களை வளர்க்க முற்படவில்லை. இன்று படைப்பாளிகள் தோன்றியுள்ள அளவிற்கு, கவிஞர்கள் தோன்றியுள்ள அளவிற்குச் சிறந்த விமர்சகர்கள் தோன்றவில்லை.



நூல் அறிமுகப் பகுதிக்கு படைப்பாளிகள் மற்றும் வெளியீட்டகங்களிலிருந்து இரண்டு புத்தகங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகளுக்கான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.


மனநடை 4

பொழுது விடிந்துகொண்டிருந்தது.

**குருவிகள் முன்னைய காலங்களைப்போல இன்ப ஒலிகளால் வானத்தை நிரப்பவில்லை. கோவிலின் ஆதிமூலத்தில் ஐயர் கிலுக்கிற மணியோசை, கட்டவிழ்த்துவிடக்கோரி கத்தும் மாட்டுக்கன்றின் இரங்கல் ஒலி எதுவுமே கேட்கவில்லை. இவைபோன்ற - குருவிகளின் குதூகலத்தோடு கலக்கின்ற இனிய காலைப் பொழுதுகள் இனிவராதா? ஆங்கிலக் கவிஞன் ஜோன் மில்டன் 'இழந்துபோன சொர்க்கம்' *(Paradise Lost)* என்று வரைந்த கவிதை வரிகள் வேறொரு விதமாக என் மனநடைக்கமைவாகவே அர்த்தப்படுகின்றன.**

# இழந்துபோன வானமும் ஒடுங்கிய காலவெளியும்

ஞானரதன்



இப்பொழுது எங்கு திரும்பினாலும் இரைச்சல், புழுதி, புகை - வன்முறை ஒலியதிர்வுகள் வானத்தை நிறைக்கின்றன. மௌனமாய் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டிருக்கும் வானம் ஒரு நாளைக்குப் போர்க்கொடி தூக்கக் காத்திருக்கிறதா? 'சூழல் மாசடைதல்' விற்பன்னர்களுக்குரிய விடயம் இது. நிகழ்காலத்தைத் திட்டிக்கொண்டும், சபித்துக்கொண்டும், இழந்துபோன இளமைக் காலத்தையே பொற்காலமாகக் கருதி, வாழ்நிலை யதார்த்தத்திற்குள் இடறிக்கொண்டு வாழமுற்படும் வயோதிப காலத்தின் சுபாவமா எனக்கும் தொற்றிவிட்டது? இப்படித்தான் முன்னோர்களும் வருங்காலச் சந்ததியைத் திட்டிக்கொண்டே மடிந்துபோயிருப்பார்கள் என்றால் இதுதான் உலக நியதியாகவும் இருக்கலாம். என்மனவயல் நடைவரம்பில் நடந்தவாறு, சிந்தனையின் ஊதற்காற்றுத் தழுவலில் காலத்தைச் சுருட்டி வைப்பதும், விரித்துப் பார்ப்பதுமாய் போகிறது மனம்.

மனத்தின் அழுக்குகள் மட்டுமல்லாமல் தூய்மையானவையும் கழுவப்பட்டால் மனத்தின் துடிப்படங்கி அமைதிகொள்ளும். உணர்ச்சித் துடிப்புடன் இயங்கும் மனம் என்றைக்குமே 'உண்மை'யைத் தரிசிக்கப் போவதில்லை என்பது கே.கிருஷ்ணமூர்த்தியின் கருத்தாகும். அப்படியொரு உன்னத நிலையை மனம் எட்டக்கூடுமானால் மரணத்தின் பின்பும், அழியாப் பொருளாக மனம் கால வெளிகளைத் தாண்டி நிலைத்து நிற்கக்கூடுமோ? ஆன்மீக விழிப்புணர்வு, தியானம், பக்தி, வழிபாடு, சடங்குகள் எல்லாமே இதைநோக்கிய பயணங்கள்தான் எனக்கூறுகின்றனர் ஆன்மீகத் தொழில் நடத்துபவர்கள், பிரசங்கிகள், ஆன்மீக மத மொத்த வியாபாரிகள், முதலீட்டாளர்கள். எது சரி, எது பிழை எனக் கண்டுபிடிக்கும் வேலை மிகவும் வில்லங்கமான சங்கதி. இக்காலத்தில் பேச்சு, எழுத்தோடு மட்டும் காரியம் முடிந்துவிடாது. அடி, உதைக்கும் நின்றுபிடிக்கக்கூடிய உடல் வலு உள்ளதா என முதலில் யோசிக்கவேண்டும்.

பௌதிக உலகிற்கு அப்பால், விரிவடைந்து வியாபித்து நிற்கும் இன்னொரு பேருலகின் ஒளிக்கீற்றை அல்லது 'கற்பனை கடந்த சோதியை' காண முனையும் முயற்சிகள்தாம் இவை என்பதால் - முனிவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஞானிகள், சித்தர்கள் காலந்தொட்டு இன்றுவரை

மானுடம் இந்த முயற்சியைக் கடத்திக்கொண்டே வந்துகொண்டிருக்கிறது.

ஊழின் சக்கரச் சுழற்சி நின்றுபோனபின் இது சித்திக்கக்கூடும் என அறிந்திருக்கக்கூடும். இதில் குறுக்கு வழிப் பயணிகள்தான் அதிகம். பூவுலகப் பம்மாத்தில் ஊறிப்போன மனசு, சும்மாவிடுமா? ஊழின் சக்கரத்தைப் பின் சுழற்றி நிறுத்திவிடும் முயற்சி. ஊரைக்கொள்ளையடித்த பணத்தில் கோவில் கட்டிப் புண்ணிய உண்டியல் சேர்ப்பதுபோல.

புவனேஸ்வரி அம்மையார் காலை வழிபாடு ஆராதனை முடித்துக்கொண்டு சுவாமியறையிலிருந்து வெளியே வந்தபோது அவரின் பேரன் கேட்ட கேள்விகள் எரிச்சலூட்டின. ஏழுவயதுச் சிறுவன். ஜெர்மனியில் பிறந்து வளர்ந்தவன். டொச் - தமிழில் அவன் பேசியதை புவனேஸ்வரி அம்மையாரின் மகன் தமிழில் சொல்லி விளக்கினான். பாடசாலை அதிபராக இருந்து ஓய்வுபெற்ற அவரைச் சினங்கொள்ள வைத்தமைக்காக மகன் மன்னிப்புக்கேட்டிருக்கக்கூடும். அது மேற்குலக வாசம் தந்த நன்மைகளில் ஒன்று. சுவாமியறையில் மாட்டப்பட்டிருந்த ஒவ்வொரு படத்தினதும் விளக்கத்தைச் சிறுவன் கேட்டான். 'இவர்களெல்லாம் பரலோகத்தில் உள்ளார்கள்' என்பதைச் சிறுவன் குறுக்கு விசாரணை செய்யவில்லை. சுவாமிப் படங்களில் கண்ட ஆடைகள், நகைகள், மற்றும் அணிகலன்களைச் செய்பவர்களும் பரலோகத்தில் இருக்கிறார்களா என்ற கேள்விதான் புவனேஸ்வரி அம்மையாருக்குப் பிடிக்கவில்லை. பல வருடங்கள் சைவசமயப் பாடம் கற்பித்த அவருக்கு இதுகாலவரை எந்த மாணவனும் கேட்காத கேள்வியைக் கேட்டதுதான் எரிச்சலூட்டியிருக்க வேண்டும்.

'நல்ல பிள்ளை வளர்ப்பு' என மகன்மீது கடிந்தபோது, அவன் ஜெர்மனியின் முன்பள்ளி விவகாரங்களை விளக்கினான். தேடல் முயற்சியைச் சிறுபராயத்திலிருந்தே ஊக்குவிப்பார்களாம். முற்காலத்தில் எங்கள் ஊர்களில் பேய், பிசாசுக் கதைகளைச் சிறுவர்களுக்குச் சொல்லும் பாட்டிகள்தான் அதிகம்பேர்.

பல்வேறு பெயர்களில் பேய்கள்.

கொத்தி, எறிமாடன், ஊத்தைகுடியன், கொள்ளிவால், முனி எனப் பலவுள்ளன.

மாரடைப்பினால் *(Coronary Thrombosis)* இறந்தவர் களெல்லாம் பேய்களின் கைவரிசைகளாகவே கணக்கிடப்பட்டனர். ஆடு, மாடு கன்றுகள் ஈனும்போது இளங்கொடியைப் பனையோலை உமலில் சுற்றிக்கொண்டு போய் ஆலமரத்தில் கட்டித்தூக்கிவிடும்பழக்கம் இருந்தது. பால் மரத்திற் கட்டிவிட்டால் கால்நடைகள் நன்றாகப் பால் கறக்கும் என்பது நம்பிக்கை. ஜெர்மனிச் சிறுவன் கேட்டதுபோல் எங்கள் காலத்துச் சிறுவர்கள் கேள்வி கேட்பதில்லை. வயதில் மூத்தவர்கள் சொன்னால் அது சரிதான்.

'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்' எனப் பாரதி பாடி எவ்வளவு காலம் போயிற்று. பௌதிக உலகின் அசைவியக்கம் தன் விருப்பப்படியேதான் சுழலும் போலிருக்கிறது.

பகுத்தறிவாளர்கள், விஞ்ஞானிகள், சித்தாந்திகள், ஞானிகள் எனப்பலர் இடைக்கிடை தோன்றி உலகப் பரப்பைச் சுரண்டிப் பார்த்துவிட்டுப் போனதுதான் மிச்சமா? இன்றும்கூட மூலைக்கு மூலை, வீடுவீடாக, கையேடுகள், சிறுநூல்கள் சுமந்தவாறு இறைவனின் நல்ல செய்தி சொல்வதற்காக அலைவதைக் காண்கிறோம். மதம் சாராத நலன்விரும்பிகள் இன்னொருபுறம். எல்லாமிருந்தும் என்ன பயன்? சகமனிதன்மீது உண்மையான அன்பு செலுத்துதல், நெருக்கமான குடும்ப உறவுகள், திறந்த மனம், எல்லாவற்றையும் என் மன வயற்பரப்பின் இளமைக்கால விளை நிலங்களிலேயே தரிசிக்க முடிகிறது.

முற்றிச் சரிந்து கிடக்கும் நெற்கதிர்களின் வாசனை இன்னும் மனதில் மாறாமலே உயிர்த்தெழுகிறது. எப்பொழுதோ இறந்து சுவடற்றுப்போன மனிதர்களின் முகங்கள் உயிர்ப்பெய்தி வருகின்றன.

கூழ் பற்றிய சுவையான விபரிப்பு 'செயங்கொண்டானின்' 'கலிங்கத்துப்பரணி'யில் வருவதைக் காணலாம். போர் முடிந்துவிட்டது. போர்க்களத்தில் பேய்கள் கூடின. பேய்களும் கூழ் காய்ச்சுகின்றன. இந்த விபரிப்பில் அணிகலன்கள், மாணிக்கங்கள் போன்றவை கொண்டு அடுப்பை எரிக்கின்றன பேய்கள். மண்டை ஓடுகளில் கூழை நிரப்பிக் குடிக்கின்றன. துவாரமுள்ள மண்டையோட்டினில் கூழ் ஒழுகுவதைக் கண்ட 'மொக்கு'ப் பேய் ஒன்று மண்டையோட்டைப் புரட்டிப் பார்க்கிறது. கூழ் நிலத்தில் கொட்டிவிடுகிறது. இவ்வாறு கற்பனையாக வரும் சம்பவங்களின் பின்னால் குறியீடாக வேறுவிடயங்களையும் செயங்கொண்டான் புகுத்திவிடுகிறாரா என்பதைத் தமிழ்ப் புலமையாளர்கள் கண்டுபிடித்திருக்கக்கூடும். ஆனால் இது எமது பாரம்பரியக் கூழ்விருந்து.

சுற்றத்து உறவுகள் ஒன்று சேர்ந்து கூழ் காய்ச்சுகிறார்கள். கூழ் காய்ச்சுவதுபற்றி ஆங்கிலச் சிறுகதையொன்றில் அழகு சுப்பிரமணியம் என்ற ஈழத்து எழுத்தாளர் மேற்குலகுக்கு அறிமுகம் செய்திருந்தார். யப்பானிலும் கூழ்போன்ற சிறப்பு விருந்துணவு உண்டு என்கி

றார்கள். கூழ் என்றால் அது ஒடியற் கூழ்தான். ஆண்கள் கூட மும்முரமாகப் பங்கேற்பார்கள். பலாவிலை மடித்துத் தென்னீர்க்கினால் தைத்து சுற்றிவர அமர்ந்து கூழ் குடிப்பார்கள். சுடச்சுட உறைப்புடன் முகத்தில் வியர்வை துளிவிட கூழ்குடித்து இலேசான கள்ளு நெடியுடன் சாணத்தினால் மெழுகப்பட்ட திண்ணைக் குந்தில் சரிவார்கள் சிலர். அச்செழுப் புகையிலையில் சுற்றிய சுருட்டின் மகிமைபற்றி பேசியவாறு உறங்கிப் போவார்கள். குடும்ப விடயங்களை அலசும் சிலர் எனக் காலத்தை வீணடித்தார்களா அல்லது நிறைவாக வாழ்ந்து மடிந்தார்களா என்று என் மனதில் சர்ச்சை ஏதும் இதுவரை உருவெடுத்ததாக இல்லை. ஊரின் வைரவர், காளி கோவில்கள் சிலவற்றில் ஆடுகள், கோழிகள், பொங்கல், மடையென்று விடிய விடியச் சடங்குகள் முடிந்தபின் பலியிடு வார்கள். தலைக்கடா மாலைபோட்டு விலாச மாகக் கொண்டுவரப் படும். உடல் தசைகள் மினுமினுத்துக் குலுங்க, செழித்து வளர்ந்த பிடரி மயிர்கள் காவடி ஆடத் தலைக்கடா கொலைக் களத்துக்கு வரும். பாரிய கத்தியுடன் உரு ஆடிக்கொண்டிருப்பவன் ஒரே வெட்டுத் தான். இரத்தம் 'ஹோஸ்பைப்'பிலிருந்து தண்ணீர் பாய்ச்சுவது போலச் சீறிப்பாயும். அதன் துடிப்படங்க முன் அடுத்தகடா மரணஒலியோடு வரும். சிறு தெய்வ வழிபாடு, பலிகள் தமிழர்களிடம் எக்காலப் பகுதியில் உள்நுழைந்தது.



நவாலியூர் சோமசுந்தரப்புலவர் 'ஆடு கதறியது' எனக் கவிதை இயற்றியது தர்மம் சார்ந்த வெளிப்பாடா கவே அமைகிறது. சோமசுந்தரப்புலவர் நல்ல வேளை யாக முன்னரே போய்விட்டார். இல்லாவிட்டால் அவரின் சொந்த ஊரான நவாலியில் சென்.ஜேம்ஸ் தேவாலயத் தில் மனிதர்கள் இந்த வேள்விக் கடாக்களைவிடக் கேவலமாகக் குண்டு வீசிப் பலியெடுக்கப்பட்டதை எவ்வாறு கவிதை இயற்றியிருப்பார்? உணவுக்காக மனிதர் கள் விலங்குகளைக்கூட பலியிடுவதைச் சகிக்காத மனிதர் காலத்துக்கு முந்திவிட்டதே அவர் செய்தபேறு.

இந்த மண் சந்தித்த அவலங்களிலிருந்து உயிர்தப்பி வாழப் புலம்பெயர்ந்த இளையோர் உலகெலாம் பரந்து விட்டனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் பலியாகவும், சித்திரவதையாகவும், சிறையாகவும் வதைத்தது கொஞ்சநஞ்சமா? புவனேஸ்வரி அம்மையாரின் மகன் ஜெர்மனிக்குப் புலம்பெயர்ந்தது எழுபதுகளில். 1978இல் அநுராதபுரத்தில் தமிழர் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது அநுராதபுரம் புகையிரத நிலையத் தில் உப அதிபராக புவனேஸ்வரியின் கணவர் கடமையாற்றி யதால் புவனேஸ்வரி அம்மையாரின் குடும்பம் தப்பிப் பிழைத்துக்கொண்டது. அதோடு புறப்பட்டவன்தான் மகன். அப்பொழுது அநுராதபுரம் - புத்தளம் வீதியில் தமிழர் களின் உடல்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொங்கவிட்டி ருந்ததைக் கண்டவன் அவன். அக்காலப்பகுதியில் பிரபாகரன் திருநெல்வேலித் தாக்குதலை நடத்த வில்லையே! பதின்மூன்று இராணுவத்தைக் கொன்ற படியால்தான் சிங்கள வன்முறை வெடித்தது என்று புருடா விடுகிற சிங்கள அரசியல்வாதிகளுக்கு இன்றும் பஞ்சமில்லை. அடி, உதை வாங்கிக் கொண்டு, அழிந்து கொண்டு போனால் மெத்தச் சந்தோசம். அட மடையர்களே நியூட்டனின் விதி *(Action and Reaction)* ஒருபோதும் மாற்ற மடையாதென்பதை அறியமாட்டீர்களா?

புலம்பெயர் நாடுகளில் வேரூன்றிய எம் உறவுகளின் அடுத்த பரம்பரை அடையாளமிழந்து இலட்சக்கணக்கில் அழிந்து போகட்டும் என்ற சுகமான கனவில் லயித்திருக்கும் சிங்கள பௌத்த் ஆதிக்கவெறி விடுதலை நெருப்பில் ஒருநாள் பொசுங்காமலா போய்விடும்.

1958ம் ஆண்டு தொடக்கம் 1983ம் ஆண்டு வரை தமிழர்கள் மீதான அழிப்பு நடவடிக்கை கிரமமாக நடந்தேறியதல்லவா. எதற்காக இதை இனக்கலவரம் என்று பெயர்சூட்டியிருக்கிறார்கள். தமிழர்களும் இடைக்கிடை 'அடிச்சு நொருக்கினார்கள்' என்பது போல. 1983இன் பின் அழிப்பு வேலையை இராணுவம் சட்டரீதியாகத் தொடர்கிறது. அவ்வளவுதான். முன்பு குண்டர்கள், காடையர்கள், பின்னர் இராணுவம். நாடகங்களில் வருகிற முற்கோவலன், பிற்கோவலன் மாதிரி, வெவ்வேறு நடிகர்கள் என்றாலும் கோவலன் தான் பாத்திரம்.

1958இல் கொழும்பு எரிந்தது. தமிழர்கள் கப்பல் களில் ஏற்றப்பட்டு காங்கேசன்துறைக்குக் கொண்டு வரப்பட்டனர். உயிரிழப்பு, சொத்துக்கள் இழப்பை,

விசாரணைசெய்த 'சன்சோனி' விசாரணைக்குழு இழப்புக்களை முழுமையாகப் பதிவு செய்ததா என்பது தெரியவில்லை.

இந்தக்காலப்பகுதிச் சம்பவங்களை கொழும்பு ஒப்சேவர் ஆங்கிலப்பத்திரிகையில் தொடர் கட்டுரையாக டார்சி விட்டாச்சி *(Tarzie Vitachi)* என்ற ஊடகவியலாளர் எழுதி வந்தார். அதன் தலைப்பு 'அவசரகால நிலை 58' *(Emergency 58)* என்பதாகும். காடையர் ஒருவன் கறுப்பு மையினால் சிங்களத்தில் 'சிறீ' எழுத்து எழுதுவதற்காக மதிற்சுவரருகே குந்தியிருந்தவாறு தீவிரமாக யோசிக்கிறான். அவனின் பிரச்சனை சிங்களத்தில் சிறீ எழுதும்போது எந்தப்பக்கம் சுழி போடுவது என்பது தெரியவில்லை. இவர்கள்தான் பௌத்த சிங்கள தேசபக்தர்கள். தாய்நாட்டின் பாதுகாவலர்கள். தமிழ்க்குடும்பமொன்றின் குசினிக்குள் பிட்டுக்குழலிலிருந்து பிட்டை வெளியே தள்ளிவிடக்கூட அவகாசம் கிடைக்காமல் தப்பியோடியிருப்பதை அவதானிக்க முடிந்தது எனப் பல சம்பவங்களைக் கொண்டிருந்தது அவரின் தொடர் கட்டுரை. இதில் ***'Jaffna Reacts'*** என்ற தலைப்பில் ஒரு அத்தியாயத்தையும் சேர்த்து ஓரளவு சமநிலைப்படுத்த முயற்சித்திருந்ததும் புலப்படும். ஏரிக்கரைப் பத்திரிகை வெளியீடல்லவா? சுதந்திர ஊடகம் என்பதுபோல, வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல நோகாமல் ஏற்றிவிடும் உத்தியை பத்திரிகை முதலீட்டாளர் டார்சி விட்டாச்சிக்குப் பணித்திருக்காமல் விட்டிருப்பார்களா? டார்சி விட்டார்ச்சி பின்னர் நிரந்தரமாகப் புலம்பெயர்ந்து போய்விட்டது ஏரிக்கரைப் பத்திரிகைக்குப் பெரும் நஷ்டம்தான்.

ஏரிக்கரை ஆங்கிலப் பத்திரிகையில் கேலிச்சித்திரக்காரராக புகழ்பெற்றவர் 'கொல்ட்' *(Collette)*. இவர் உருவாக்கிய கற்பனைப் பாத்திரம் சிம்பிள் சிமியன் *(Simple Simeon)*. கொழும்புக் காடையர் ஒருவனைப் போல தலையில் கைக்குட்டை மடித்துக்கட்டியபடி, பரட்டைத்தலை, பெனியன், மடித்த கோடன் சாரக்கட்டு - நகைச்சுவை மிகுந்த இந்தப் பாத்திரத்தை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. இவரின் அரசியல் காட்டூன்கள் ஆழமானவை. சேர்.ஜோன் கொத்தலாவலை பிரதமராக இருந்த காலத்தில் 'கொலட்'டின் அரசியல் காட்டூன்களில் அதிகம் மாட்டிக்கொண்டதாக நினைவு.

தமிழில் சிரித்திரன் சுந்தர் உருவாக்கிய சவாரித்தம்பரும் இவ்வாறுதான். இவரின் சவாரித்தம்பர், கிட்டினர் போன்ற யாழ்ப்பாண மண்வாசனைப் பாத்திரங்கள் இன்றும் மறக்கமுடியாதவை. வால்ட் டிஸ்னி உருவாக்கிய 'மிக்கி மௌஸ்' என்ற சுண்டெலிக் காட்டூன் உலகின் மூலை முடுக்கெல்லாம் அறியப்படவில்லையா?



இவற்றை உருவாக்கிய கலைஞர்கள் இன்று இல்லை. ஆனால் பாத்திரங்கள் வாழ்கின்றன. ரவிவர்மா என்ற இந்திய ஓவியர் சரஸ்வதி, லக்சுமி, சிவன் என்ற கடவுள்களுக்கெல்லாம் கொடுத்த உருவம் இன்றும் நிலைத்திருக்கவில்லையா? ரவிவர்மா வரைந்த சிவனுக்கு மீசை இருந்ததால் சர்ச்சைக்குட்பட்டு அப்படம் வழக்கொழிந்து போயிற்று என அறியமுடிகிறது. ஆனால் லக்சுமி, சரஸ்வதி மாற்றம்பெறவில்லை. உடை, அணிகலன்கள், சூழல் எல்லாம் ரவிவர்மாவின் மனத்திலிருந்து எழுந்தவையா அல்லது தெய்வீக அருட்டுணர்வு தானா என்பதைப்பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் புவனேஸ்வரி அம்மையார் போன்றவர்கள் பூவைத்துக் கும்பிட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். கோவில் கருங்கற் கட்டுமானத்தில் அதிர்ந்து எழும் மந்திர ஒலிகள் பிரபஞ்ச ஒலியுடன் ஒருங்கிசைந்து பெறும் சக்தியை ஆலயதரிசனத்தினூடாகத் தனக்குக் கிடைப்பதாகப் புவனேஸ்வரி அம்மையார் விளக்கம் கூற முற்பட்டால் 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என மடக்கிவிடலாம் என்பது எனது யோசனை.

*(மனநடை தொடரும்......)*



# காலம் எ

நாளை மழை கழுவிச்செல்லும்
மண்ணிருக்கும் காற்தடத்தையும்.
அவர்களை கந்தகநெடியாக வாங்கிய காற்று
தன் சுயத்துக்குத் திரும்ப
சுவடுமற்றுத் தொலைந்து போவர்.
இறுதியாக தாய்மண்ணை முத்தமிட்டு
எல்லை பிரிந்தேகிய போது
தொட்டுத் தடவிப்போயினர் பூக்களை.
அற்றைநாளே அவை வாடிவிழுந்திருக்கும்.
பயணக் களைப்பை மறக்க
பாடிய பாடல் பரவிய வனம்
மீண்டும் மௌனத்துறையும்.
அவர்களுக்கு கையசைத்துப்போன
பள்ளிச் சிறுவர்
வழமையான வழிப்போக்கரென எண்ணியிருப்பர்.
வழியில் கொஞ்சம் காலாற அமர்ந்திருந்த
மரநிழலுக்குத் தெரியுமா
தான் குடைவிரித்தது அக்கினி நாவுகளுக்கென்று?
இந்த வரம்பிற்தானே நடந்தனர்
இந்தக் கரையிற்தானே படகேறினர்
இதோ இந்தத் தோட்டவெளிக் கிணற்றில்தான்
எரிமலைகள் நீரருந்தின.
இடியுண்டு பூசையற்றுப் போக
எவரும் எட்டிப்பார்க்காதிருந்த கோயில் வெளியிற்தான்
கூட்டாக எல்லோரும் போட்டோ எடுத்தனர்.
உள்ளே கலங்கி
வெளியே விளங்கியபடி நின்றவருக்கு
சென்றவர்கள் பயணம் சொல்லிப் போயினர்.
நடந்தும்
படகேறியும்
புகைவண்டிக்குள் கரந்துறைந்தும்
பணிமுடித்தலுக்கிடையில் எத்தனை வதை
சாவுக்குக்கூட சாகஜம் வேண்டியுள்ளது.
கரும்புலிகள்.
கவிதை தோற்றுப்போவது அவர்களிடம்தான்.
அகமும் புறமும் அளவெடுக்க முடியாமலும்
உள்ளுறையும் அமுக்கத்தை அறியமுடியாமலும்
கவிஞன் தோற்பதும் அவர்களிடம்தான்.
வரலாறு திருப்பிகளாய்
வெடித்து அதிர்ந்துதிரும் வரை
வழியெங்கும் சிரிப்பெறிந்து திரிவர்.
வீசிப்போகும் புன்னகை
இளமையாய் கிடக்கும் நெடுங்காலம்.
நானென்பது நானல்ல
அது நீயென்பதாய் அவர் தோழமை.



# களின் கதை



புதுவை இரத்தினதுரை

எட்டிப்பிடித்து கைவிரல் நீவி
மௌனமாய் அவர் தூறும் மொழிக்கு
அகராதி இல்லை
எத்தனை அர்த்தங்கள் விரிக்கலாம் அதில்.
குளிர்நாளில் கணப்பருகிலிருத்தலான பிணைப்பில்
பிரியும் நாள் நெருங்குவது புரியும்.
வாயால் ஒரு வார்த்தையுரைத்து
போய்வருகிறோமெனில் குறைந்தா போவர்.
பொல்லாத அமசடக்கிக் கள்ளரவர்
பேசவே மாட்டார்கள்.
ஓங்கி முகத்திலறைந்துவிட்டு
அழ நினைக்கும் மனம்.
எப்படி முடியும்?
அது சாவுக்கு வழியனுப்பல் என்றாகிவிடுமே.
அறிந்தவர் இடிந்துதிர
அவர்கள் நடப்பர் திரும்பியும் பாராமல்.
இப்படி இருந்துபோக
எப்படி முடிகிறது அவர்களால்?
விளக்கில் தொட்டாலே துடிக்கும் மெல்லியருக்குள்
வெடியாய் சிதறுவோர் விளைவது எப்படி?
ஈசலின் இறப்புக்கே
இழவு கொண்டாடும் இனமொன்றில்
அவர்களின் தோற்றுவாய் சூத்திரம் என்ன?
ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கிறது
அவர் உயிர்மையம்.
ஞானவிழிகளுக்கு மட்டுமே
நெருப்பாற்றின் உற்பவமும், கழிமுகமும் தெரியும்.
அஞ்ஞானக் கண்கள் அறியக்கூடியதல்ல
விஸ்வரூபத்தின் அடியும் முடியும்.
போத்தலில் அடைக்கமுடியுமா
பேராற்றின் பிரவாகத்தை?
புசு புசு மயிர் விளைந்த பூனைக்குட்டிகளாய்
மடி விளையாடிவிட்டு
விடைகொள்ளும் ஒவ்வொரு தடவையும்
சாவது அவர்களல்ல நாங்களும்தான்.
"கரும்புலிகள்
பலவீனமான இனமொன்றின் பலம்"
தலைவன் சொன்னதே சரி.
அவர்களை வரையத்தொடங்கியது பிழை.
ஆயினும் தூரிகை தோற்கும் போதெல்லாம்
ஓவியன் வெற்றியடைகிறான்.
கரும்புலிகளுக்கு மட்டுமே இந்தச் சமன்பாடு.
இனியும் தொடரும் அவர்கள் பயணம்
தேசம் ஒளிகொண்டு இலங்கும்வரை.
பிரிவதும் கவல்வதுமாய் போகுமெம் காலம்.
வாழ்வின் விதிமீறும் குழந்தைகளை
வரைவது எங்கணம்?
தோற்றுப்போவதே ஓவியப்பெருமை.

□□

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
வண்ணார்பண்ணை கிளை நூலகம்

# காரணமும் காரியமும்

ஞாலவன்

விழிக்க மறந்த கண்கள்
தூக்கமும் துன்பமும்
தொடர்ந்ததினால்
எட்டாத வேதனைக் கரைகளை
எட்டாமலேயே போனதாக எண்ணி
கடலிடையே ஓர்
கண்ணீர் வாழ்க்கை
பார்வைகளை மறுத்ததினால்
பாதைகள் திசைகளையிழந்து
சிக்கித் தவித்தன
உண்மைகளை நோக்கிய
தேடல்கள்
உருவங்களிடம்
தங்களையே இழந்து போயின.
இழப்புக்கள்
விளக்கங்களுடன் விரிந்து
இலக்கணமாகியது
பற்றுக்கொண்ட தேடல்களும்
கூடவே ஓட்டிக்கொண்டன
இருட்டு மேடையில்
சுருட்டல் நாடகம்
நலமே நடந்தேறியது
தொலைந்து போன சொந்தங்களிலே
எஞ்சிப் போனவை:
ஏழ்மையும் ஏளனமுமே!
நியாயக் கற்பிதங்கள்
கோர்ட்டும் சூட்டும் மட்டும்
போட்டிருக்கவில்லை
கோவணமும் சால்வைத்துண்டும் கூட
எட்டி நின்று ஏவல் செய்தன
மேடைக்கு வெளியிலும்
நடமாடும் வேசங்கள்
அவற்றின் கூச்சலிலே
அருகில் நின்ற ஆதரவென்றெண்ணி
நம்பியே வெம்பிய கூட்டங்கள்
மூடிய கண்களுக்குள்ளே
முழுநேர விரிவுரைகள்
வெளிச்சத்திற்கு வேலியிட்டன.
வேலியென்ன
தாழ்ப்பாளே போட்டன
கடந்து போனவையெல்லாம்
இழந்து போனவையாம்
புதிய விளக்கங்கள்
கண்ணுக்கு மை இட்டு
அழகென்று அறிவுறுத்தின
குருட்டுக் கண்கள்
இருட்டு வாழ்க்கையிலும்
இழந்ததை
தாம் மறந்ததை - ஏதோ
மீட்டுக் கொண்டதைப்போல்
மகிழ்ந்து கொண்டன
தேவைகளின் நிர்ப்பந்தத்தில்
நீண்டு வரும் கைகள்
வாங்குவதிற்காக ஏங்கி நிற்கும்
ஏங்கி ஏங்கி
எதையுமே வாங்காமல்
தூங்கிப்போகும் - அல்லது
துளியொன்று கிட்டிவிட்டால்
துள்ளிப்போகும்
முட்டும் நீர்த்துளிகள்
கண்களை மீறி
எட்டிப் பார்க்க
எல்லைகளைத் தாண்டிய
அழுகைகள்
வெளிச்சத்திற்குள் வந்து
வேவு பார்க்கும்
இருட்டு மேடைகளின்
வரட்டு வாதங்கள்
கேள்விக் குறிகளாகி
விலகிப் போக
தூக்கத்தின் துயரங்கள்
வாழ்க்கை வரைமுறைகளோடு
அளக்கப்படும்
வாங்கிய கைகள்
ஓங்கும் நாள் வரின்
துயரங்கள் தூரமாகி
எட்டினும் எட்டாமல்
விட்டுப் போய் விட
காரணங்களைத் தேடிய
கண்கள்
பார்வைகளுக்குள்
பதிந்து கொண்டதை
எடை பார்த்து
எடுத்துக் கொள்ளும்
நாளை நம்கையில்
வாழ்வு எம்கையில்
வரைமுறைகளும் அவ்வாறே!
ஆமாம்
இறந்தகாலம் பாடங்களாகி
இலட்சியம் எதிர்காலமாக
போராட்டம் நிகழ்காலமாகட்டும்!!
அப்போதுதான்
வினாக்கள் விடைகளைக்காண
விடைகள் வரைகளைக்காண
வரைகள் மனிதத்தைக் காணும்!!!
□□

# அமைதி குலைந்த நாட்கள் - புதுசு கவிதைகள்
# உண்மையின் சாட்சியம்

இலண்டனிலிருந்து அ.இரவி

ஒரு விடியற்புறத்தில் எழுந்து கோபம் கொப்புளிக்க இதனை நான் எழுதிக்கொண்டிருக்கின்றேன்.



விடயம் இதுதான். 'புதுசு' பதினொரு இதழ்களிலும் வெளிவந்த கவிதைகளை அமைதி குலைந்த நாட்கள் என்கின்ற தலைப்பில், சபேசன் என்கின்ற நபர் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். 'புதுசு'வில் வெளிவந்த கவிதைகளை யாரும் தொகுத்து வெளியிடலாம். ஆனால், இந்த நபர் புதுசுகளே அதனைத் தொகுத்தது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஏற்கனவே நிகழ்ந்த சில விடயங்களை இப்பொழுது நான் குறிப்பிட வேண்டும்.

1980 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நாங்கள் புதுசு சஞ்சிகையினை வெளியிடுகின்றோம். 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை பதினொரு இதழ்கள் வெளியாகின. அ.இரவி ஆகிய நான், கவிஞர் என அறியப்பட்ட இளவாலை விஜயேந்திரன், பாலசூரியன், சபேசன் ஆகிய நால்வருமே புதுசு ஆசிரியர் குழுவாக இருந்த புதுசுகள். அதன்பின்பு வந்த 1983, 1984, 1985 ஆம் ஆண்டுகளில் வெளிநாடு செல்வதற்காக ஒவ்வொருவராக புதுசுவை விட்டு வெளியேறுகின்றனர். ஆயினும், 1987 ஆம் ஆண்டு மார்ச்வரை புதுசுவைத் தனித்து நடாத்துகின்றேன்.

மூவரும் இருந்த காலங்களிலும்கூட, புதுசு வெளிவருவதனை உறுதிப்படுத்துவதற்கு பெரும் பங்கினை நான் ஏற்றிருந்தேன். அது இந்த மூவருக்கும் மாத்திரமல்ல, வெளியில் புதுசுவில் அக்கறை கொண்டிருந்த பலருக்கும் தெரியும். அதிலும் இந்த சபேசன் என்கின்ற நபர் - புதுசு வெளிவந்த உடன் எனது வீட்டுக்கு வந்து, வெளிவந்த புதுசுவின் இருபத்தைந்து பிரதிகளை எடுத்துக்கொண்டு, பேராசிரியர்கள், கலாநிதிகள், இன்னும் தன் பெயர்சொல்லத்தக்க பெரிய மனிதர்கள் இவர்களிடம் புதுசுவைக் கொடுத்து, தான்தான் புதுசுவை வெளியிட்டேன் என்கின்ற ஒரு படிமத்தையும்

(image) கொடுக்கத் தவறமாட்டார். ஆனால், இந்தச் சின்னத்தனங்களையெல்லாம் நாம் பெரிதும் கவனத்திற் கொள்ளவில்லை.

ஆனால், நாம் பெரிதும் கவனத்தில் எடுக்க வேண்டிய ஒரு காரியத்தை சபேசன் என்கின்ற இந்த நபர் செய்தார். 1985 ஆம் ஆண்டு 'மண் சுமந்த மேனியர்' நாடகம் குடாநாடெங்கும் பெரும் வரவேற்புடன் ஆற்றுகை செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நலிவடைந்த புதுசுவின் பொருளாதாரத்தை ஓரளவு சீர்செய்வதற்கு - மண் சுமந்த மேனியர் நாடகத்தை புதுசுவின் நிதிக்காக, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் அரங்காற்றுகை செய்வதற்கு ஒழுங்குபடுத்தியிருந்தோம். நான் அந்த நாடகத்தில் நடிப்பதனால், சபேசன் என்கின்ற இந்த நபர் - மேடையேற்றுவதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

நாடகம் ஆற்றுகை செய்யப்பட முன்னர் நான் ஒப்பனை செய்துகொண்டிருந்தேன். அப்போது ஒரு துண்டுப் பிரசுரம் என் கைக்குக் கிட்டியது. அந்தத் துண்டுப் பிரசுரத்தில் - 'மண் சுமந்த மேனியர்' குட்டிப்பூர்சுவாக் கருத்துக்களைக் கொண்டுள்ள நாடகம். அது பிற்போக்குத் தனமான கருத்துக்களையே விதைக்கின்றது. ஆயினும், எமது நிதித் தேவைக்காக இந்த நாடகத்தை நாம் மேடையேற்றுகின்றோம்' என்ற கருத்துப்பட அந்தப் பிரசுரத்தில் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பிரசுரத்தை வெளியிட்டது 'புதுசுகள்' என்று குறிப்பு இருந்தது.

யாரும் இவ்வாறு கருத்துக் கூறியிருந்தால், அது கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம். ஆனால், புதுசுவின் நிதிக்காக மேடையேற்றுகின்ற நாடகம் மோசமானது என்று புதுசுகளே கூறுகின்றனர் என்றால், இது அராஜகம் அல்லவா? அதுவும் புதுசுகளில் ஒருவனான நான் நாடகத்தில் நடிக்கின்றேன். எனக்குத் தெரியாமலேயே புதுசுவின் பெயரில் பிரசுரம் வருகின்றது. இது அப்பட்டமான ஜனநாயகமீறல். இந்த நபர் ஜனநாயகம் பற்றிப் பேசுவதற்கு எந்தளவு உரித்துடையவர்?

இந்தப் பிரசுரத்தைக் கண்டவுடன், புதுசு நிதிக்காக நாடகத்தை மேடையேற்றுவது அர்த்தமற்றது என்ற கருத்தும் எழுப்பப்பட்டது. அதில் பங்கேற்ற கலைஞர்களின் விவாதத்தின் பிறகு, எனது முகத்துக்காகவும், பல்லாயிரக்கணக்கான இரசிகர்களின் காத்திருப்புக்காகவும் நாடகத்தை மேடையேற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. எனது சக கலைஞர்களின் பெருந்தன்மையால் நான் மீண்டேன் என்றாலும், சபேசன் என்கின்ற இந்த நபரினால் நான் அவமானத்துக்குள்ளானேன்.

இந்த நபரை நான் நேரடியாகக் கண்டித்தேன் என்பதுபோக, அடுத்து வந்த புதுசு இதழிலும், 'அந்தப் பிரசுரத்துக்கும் புதுசுவிற்கும் சம்பந்தமில்லை. அது தான்தோன்றித்தனமான ஒருவரின் கருத்து. இதனால், மனம் நொந்திருக்கும் கலைஞர்களுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்' என்று புதுசுகள் கருத்துத் தெரிவித்திருந்தனர். அத்துடன். சபேசன் என்கின்ற இந்த நபரை புதுசுகளிலிருந்து நீக்கிவிட்டோம்.



இந்த நபர் - மண் சுமந்த மேனியர் நாடகத்தின் மூலம் புதுசுவிற்காக சேகரித்த நிதியினையும், எந்தக் கணக்கும் காட்டாமல், இங்கிலாந்துக்குக் கொண்டு ஓடிவிட்டார். அதன் பின்பு அவருடனான உறவையும், தொடர்பையும் முற்றாக நிறுத்திவிட் டோம்.

இவர் அந்தப் பிரசுரம் வெளியிட்டமைக்கான காரணம் தெரியாமலில்லை. சொந்தக் கருத்தில்லாதவர் இவர். புதுசுகளில் இவரையிட்டு உயர்ந்த அபிப்பிராயம் இல்லை. இன்னும் சொன்னால், இவரை 'பியோன்' என்றே அழைத்துக்கொள்வோம். அதற்காக பியோன் என்ற தொழிலைக் குறைத்து மதிப்பிடுவதல்ல அதன் நோக்கம். பியோன் வேலை பார்ப்பவரிடம் சுயஆளுமை இருக்கும். ஆனால், வேலை என்று வந்தவுடன் அவர் பிறரின் பொருளையோ, கருத்தையோ

காவிக்கொண்டு வந்து, இன்னொருவரிடம் சேர்ப்பிப்பார். அவ்வாறு தான் இந்த நபரும் தனக்கென சொந்தக் கருத்தினைக் கொண்டிராமல், பிறரின் கருத்தினைத் தனது கருத்தாகக் காவிக்கொண்டு திரிவார்.

அந்தவகையில், இவர் ஆதரவாளராகச் சார்ந்து நின்ற தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியின் (NLFT) கருத்தினையே புதுசுகளின் கருத்தென்று பிரசுரமாக வெளியிட்டிருந்தார். அந்தப் பிரசுரத்தினை எழுதியவரையும் நான் அறிவேன். இந்த நபரது வேலை - அந்தப் பிரசுரத்தைக் காவிக்கொண்டு, அச்சகத்தில் அச்சேற்றி, அதை விநியோகிப்பதுதான்.

இனித்தான் இப்போதைய என் கோபத்துக்கான விடயத்துக்கு வருகின்றேன்.

மிகச் சமீபத்தில் சபேசன் என்கின்ற இந்த நபர் - புதுசு பதினொரு இதழ்களிலும் வந்த கவிதைகளைத் தொகுத்து, 'அமைதி குலைந்த நாட்கள்' என்று தலைப்பிட்டு வெளியிட்டிருந்தார். அது குறித்து யாரிடமும் அவர் அனுமதி பெறவில்லை. 'தான்தான் புதுசு' என்று எல்லா இடங்களிலும் பிரகடனப்படுத்தவேண்டும் என்ற அடங்காத ஆவலாதிதான் அதற்குக் காரணம். தான்தான் புதுசு நடத்தியதாக சபேசன் சொல்லித் திரிவதாக, நான் லண்டன் சென்றிருந்தவேளை பலர் சொல்லக் கேள்விப்பட்டேன். நான் மனதினுள்ளும், கொடுப்பிற்குள்ளும் சிரித்தேன். அதனை உறுதிப்படுத்துவதற்காக இந்தத் தொகுப்பினை அவர் வெளியிட்டிருந்தார்.

சபேசன் என்கின்ற பெயரில் அதனை அவர் தொகுத்திருந்தால், அது பற்றிப் பெரிதும் ஒன்றும் பேசப்போவதில்லை. புதுசுகள் அதனைத் தொகுத்ததாக, இந்த நபர் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தத் தொகுப்புக்கும் எங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாதபோதும் எங்களை அதில் சம்பந்தப்படுத்தியிருப்பது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. எந்தக் கேட்டுக்கேள்வியுமில்லாமல், புதுசுகள் என்கின்ற பெயரில், தனது இணையத்தள முகவரியையும், தனது வீட்டு விலாசத்தையும் கொடுத்துள்ளார். இதுவும் கடும் கோபத்துக்குரியது.

இந்தத் தொகுப்பில் இந்த நபர் - புதுசுகளின் பெயரில், புதுசுவில் கவிதை எழுதிய கவிஞர்கள் பற்றிக் குறிப்புக்களை எழுதியுள்ளார். மிகத் தவறுகள் அதில் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக - எஸ்.வி.பரமேஸ்வரன் என்கின்ற கவிஞர் கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எந்தவித பொறுப்புத்தனமும் அற்று இந்தக் கவிஞரை வன்னியில் பிறந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இன்னும் நிறையத் தவறுகள் நிகழ்ந்துள்ளன.

மேலும் கவிஞர்கள் பற்றிய குறிப்புகளில் மிகப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. தனக்குப் பிடித்த, தனக்குத் தெரிந்த கவிஞர்கள் என்றால், அவரது தாய், தந்தை, பிறந்த இடம், வளர்ந்த இடம், பிறந்த திகதி, படித்த பாடசாலை, பாடசாலைக்குப் போன பஸ், வகிக்கும் உத்தியோகம், உத்தியோகத்தில் கிடைக்கும் சம்பளம், பயணம் செய்த ஊர் உலகம் என்றெல்லா விபரங்களும் எழுதப்பட்டிருக்கும்.

ஆனால், இவருக்குப் பிடிக்காத, தெரியாத கவிஞர் என்றால் - அவர் அனாதை. அவ்வளவும் தான்.

இவை கடும் கண்டனத்துக்குரியன. ஏனென்றால், இந்தத் தவறுகளுக்கு புதுசுகளைப் பொறுப்பேற்க விட்டுள்ளார் இந்த நபர். புதுசுகளுக்கும் இந்தக் குறிப்புகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது.

இந்தக் கவிஞர் பற்றிய குறிப்புகளில் ஒருவர் பற்றிய குறிப்பே எம்மை ஆகலும் திகிலூட்டியது. அதனை வாசித்தவுடன் நாம் அலமலந்து போனோம்.

மீரா என்கின்ற பெயரில் கடற்கவிதைகள் என்று மூன்று கவிதைகள் எழுதிய செல்வகுமாரன் பற்றிய குறிப்பு. அவரது பெயர் செல்வகுமாரன். இந்த நபர் செல்வகுமார் என்று எழுதியுள்ளார். செல்வகுமாரன் பிறந்த இடம் பொலிகண்டி. ஆனால், இந்த நபர் செல்வகுமாரன் பிறந்த இடமாக வல்வெட்டித்துறையைக் குறிப்பிட்டுள்ளார்.

யாவற்றுக்கும் மேலாக செல்வகுமாரன் பற்றிய குறிப்பு இவ்வாறு வருகின்றது *'ரமணி என்று பரவலாக அறியப்பட்ட மருத்துவபீட மாணவரான இவர் - தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியின் (NLFT) மத்தியகுழு உறுப்பினர் என்கின்ற காரணத்துக்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் 1989 ஆம் ஆண்டு கடத்திச் செல்லப் பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்'.*

சபேசன் என்கின்ற இந்த நபர் - தனது பெயரில் தொகுத்த எந்த நூலுக்காவது இவ்வாறு ஒரு குறிப்பு எழுதியிருந்தால், நாங்கள் எந்த ஆட்சேபமும் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால் எங்களின் பெயரில், அதாவது புதுசுகளின் பெயரில் இவ்வாறு எழுதியதையிட்டு நாம் கடும் கண்டனம் தெரிவிக்கின்றோம் என்கின்ற வார்த்தையுடன் இதனை நாம் விட்டுவிடப் போவதுமில்லை.

இந்த செல்வகுமாரனை நான் 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கண்டிருக்கின்றேன். அதுபோக, தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர் என்கின்ற காரணத்துக்காக நாங்கள் செல்வகுமாரனை கடத்திக்கொன்றுள்ளோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் அறிக்கை விட்டார்களா? அல்லது இவருக்காவது, யாருக்காவது இரகசியமாகச் சொன்னார்களா?

சபேசன் என்கின்ற இந்த நபர் - தானே காரணத்தைக் கற்பித்து, அதனைத் தன் பெயரில் அல்லாது புதுசுகளின் பெயரில் பிரசுரிப்பதற்கு என்ன காரணம்?

சிங்களப் பேரினவாத அரசுடனும், அதன் தலைவர்களுடனும் இவருக்கு இருக்கும் உறவும், நெருக்கமுமே இதற்குக் காரணமாகும். லண்டனிலுள்ள இவரது வீட்டுக்குச் சென்றால், சிங்கள அரசியற் தலைவர்களுடன் இவர் சேர்ந்து எடுத்துக்கொண்ட வண்ணப் புகைப்படங்கள், சட்டம் போட்டு மாட்டப்பட்டிருக்கும். அதிலிருந்து இவரது அரசியலை நாம் புரிந்துகொள்ளலாம். இவரது சொந்தத் தமையனார் சந்திரிகாவுக்காக தேர்தல் வேலைகள் செய்துள்ளார் என்பதிலிருந்தும் யாவற்றையும் நாம் புரிந்து கொள்ளமுடியும்.

இந்தத் தொகுப்புநூல் என் கைக்குக் கிட்டியவுடன், இந்த நபருக்குத் தொலைபேசி எடுத்து, செல்வகுமாரன் தொடர்பான குறிப்புக்கு என் கடும் ஆத்திரத்தைத் தெரிவித்தேன். 'நீ புலிக்கு வக்காலத்து வாங்குகிறாய்' என்றார். உன்னுடைய ஊகத்தை எங்களுடைய உறுதியான முடிவாக நீ எப்படி எழுதலாம்' என்றேன். பதில் சொல்லத் தெரியாது திணறி, தொலைபேசியை அறைந்து வைத்தார் சபேசன் என்கின்ற இந்த நபர்.

நான் உடனடியாக பாலசூரியனுடனும், இளவாலை விஜயேந்திரனுடனும் தொடர்பு கொண்டேன். பாலசூரியன் 'எனக்கும் புதுசுவிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை' என்று தெரிவித்துக் கொண்டார்.இளவாலை விஜயேந்திரன் 'நீ என்ன முடிவு எடுக்கின்றாயோ அதற்கு என்னுடைய முழுமையான உடன்பாடும், ஒத்துழைப்பும் கிடைக்கும்' என்றார்.

எனவே, இத்தால் புதுசுகள் சார்பில் நான் இவற்றை அறிவிக்கின்றேன்.

சபேசன் என்கின்ற இந்த நபர் வெளியிட்ட 'அமைதி குலைந்த நாட்கள்' கவிதைத் தொகுப்புக்கும், புதுசுகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. அந்தத் தொகுப்பில் வெளிவந்த எந்தக் கருத்துக்களும் புதுசுகளின் கருத்துக்கள் அல்ல. சபேசன் என்கின்ற இந்த நபருக்கும், புதுசுவிற்கும் எந்த உறவும், எந்தத் தொடர்பும் கிடையாது.

மேலும் புதுசுகளின் பெயரில் வந்திருந்த கருத்துக்களினால் யாரும் மனம் நொந்திருந்தால், அந்த வருத்தத்தை நாம் புரிந்துகொண்டு, எமது செயல்களினூடாக அந்த வருத்தத்தை நாம் துடைத்துவிடுகின்றோம். எமக்கும் அந்தக் கருத்துக்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் புரிந்திருப்பீர்கள் தானே?

இன்னும் எச்சரிக்கை ஒன்று. சபேசன் என்கின்ற இந்தக் கோரமுகமும், பிரமுகர்த்தனமும் ***'யுகம்'*** என்கின்ற பத்திரிகையினூடாக தமிழ்த் தேசியத்தை நசுக்கவும், சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தை நியாயப்படுத்தவும் வெளிவருகின்றது. அதனை மிகக் கவனமாக இனங்காணுங்கள்.

# அற்புதங்கள் இங்கே அநேகம்

சோ.பத்மநாதன்

வெப்பம் அடங்கிக் குளிர்காற்று வீசுகிற
ஐப்பசியில் ஓர்நாள்
மணி மாலை ஆறிருக்கும்
வெள்ளமாய் மக்கள் வெளியேறி
வீதிவழி அள்ளுண்டு போனார், அலையலையாய்!
ஆம் ஆம் ஆம்!
ஆயிரம் பத்தாயிரங்கள் அல்ல,
பல லட்சம்!
தீபரவ ஊர்ந்து விரையும் எறும்புகளாய்
ஊர்மனைகள் விட்டும்
உறவுகளை விட்டும் – தம்
வேரடியின் மண்ணை உதறி நடந்தார்கள்!
தேவாலயங்கள், மடம், பள்ளி, புறந்திண்ணை
தாவாரம் எங்கும் தரித்துக் கிடந்தார்
கண்ணீர்வார
விம்மி நெடுமூச் செறிந்தார்கள்
"ஆரோடு சொல்லி அழலாம்?
அகதி என்ற பேரோடு அலைந்து
பிறநாடு போவோமா?"

வேண்டுதல்கள் – ஏக்கம் ஒருநாள் பலிக்க –
இவர் மீண்டு வந்தார்
தம்மண் மிதித்தார், புளகித்தார்
பாட்டனார் தொட்ட பழங்கிணற்று நீர்
தலையில் ஊற்றி உடல் புளகித்து
உச்சிக்குப் போனார்கள்.
மாளிகையும் வாகனமும் மாடு, ஆடு, கோழி என
சூழ இருந்த அனைத்தும் தொலைத்தவர்கள்
மீள எழுந்து நிமிர்ந்த விதம் – வீரம்
ஈழம் உலகுக்கு எடுத்துரைத்த அற்புதங்காண்!
வெந்து தணியாத மண்மீதிலே நின்று
அந்தி பகலாய் அரும்பாடு பட்டார்கள்
மாதேவன் பண்டரங்கம் ஆடும் மயானத்தின்
மீதும் தமிழர் விவசாயம் செய்கின்றார்!
தேனீயாய், சிற்றெறும்பாய், சேமித்து
தம்முயிராய் மானமதைப் போற்றும்
மனிதர்களாய் வாழுகின்ற
அற்புதத்தைப் பாட அழைத்தீரோ, யானறியேன்!
கற்பனையை விஞ்சும் கதைகள்
கவிதைக்குப் பாடுபொருள்!
எங்கள் குருதியிலே கோலைத் தோய்த்து
ஈடுபாட்டோடு எழுதும் பரம்பரைநாம்!




பூமி அதிரப் புறப்பட்டு முன்னேறி
ஆமி புக, மக்கள் அள்ளுண்டு வந்தநாள் –

குஞ்சு, குருமான், குமர், கிழடு கட்டை எல்லாம்
பஞ்சாய்ப் பறந்து வருகையிலே –
கண்டேன் நான்!
மாடில்லை
மனிதன் ஒருவன்
ஒரு வண்டியினை
பாடுபட்டுத் தள்ளி வருகின்றான்.
பார்க்கின்றேன்
மூப்பால் தளர்ந்து
முனகிக் கிடந்தான் அத்தேப்பன்
அருகே கிழவி – தாய்
இருவரையும் சொத்தாய்க் கருதி
வேறெதையும் காவாது
அத்தேர் இழுத்து நடந்தானே!
அம்மகனை
பாடாத பாட்டென்ன பாட்டு – நெஞ்சில்
படமாக ஓடுதே அக்காட்சி மீட்டும்.
காலை மணி ஏழு
கையில் ஒரு பை
வழக்கம் போல அவசரமாய்
ஓடுகிறேன் சந்தைக்கு
என்னெதிரே வந்தாள் இளவயது மங்கை
அவள் கண்ணின் ஒளி
நெஞ்சின் உறுதியினைக் காட்டிற்று
எதையும் கணக்கில் எடுக்காது
அவள் நடந்த விதம் –
இந்தப் பெண் வேறு ரகம் என்று சொல்லிற்று
பார்த்தேன்
அடிபெயர்த்து அப் பாவை நடந்து வந்தாள்.
பார்த்தேன் – அவளுக்குக் கைகள் இரண்டுமில்லை!
வேல் நெஞ்சில் பாய விறைத்துப்போய் நின்றேன்!
பெண்போன திசையறியேன் போன பணிமறந்தேன்
ஊனம் பிறப்பால் உறின், ஊழ்வினை எனலாம்.
கூனும் குருடும் குறைபாடுதான்
ஈனம் இனம் உறுதல் கண்டு
ஆயுதம் ஏந்தி
மான நெடும்போர்க் களத்திலே
தன்னிரண்டு
கையும் இழந்தாளைக் கண்ணுற்ற நாள்முதலாய்
நையும் மனம்
கனவு நனவெல்லாம் அக்காட்சி!
கற்பனை அல்ல
கலைவாணர் சொல்லுகிற
அற்புதங்கள் இங்கே அநேகம் அரங்கேறும்!

பூண்டேதும் இன்றிப் பொசுங்கிய இம்மண்ணிருந்து
மீண்டும் எழுவோம், வியக்கும் உலகு!
எங்கள் வேர் ஆழப் பாயும்
விழுது பல இறங்கும்
ஆராலும் எம்மை அசைக்க முடியாது.
□□



(கடந்த 17.07.2004) இல் கொழும்பு கம்பன் விழாவில் அரங்கேறிய கவிதை)

# புரந்தார்கண் நீர்மல்க.

செ.யோகநாதன்

நட்சத்திரங்கள் களைத்துச் சோர்ந்து படுத்திருந்த வானத்தைப் பார்த்தபடியே அமைதியாக உட்கார்ந்திருந்தாள் வசந்தி. மனதினுள் அளவுமீறிய மகிழ்ச்சி கிறுகிறுத்துக்கொண்டிருந்தது. இதுவரை இப்படிப் பொங்கிப் பிரவகிக்கும் மகிழ்ச்சி அவளுக்கு ஏற்பட்டதில்லை. கூரிய கண்கள், நெடுந்தூரநோக்கில் பார்த்தபடி இருந்தன. பளிச்சென்று யாவுமே இன்றைக்குப் புத்தம் புதிதாக அவளுக்குத் தெரிந்தன.

அந்தச் செய்தியை அவள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்தாள் என்பது உண்மையென்றாலும் அதைத் தெரிந்துகொண்டதும் மனதினுள் மகிழ்ச்சி பிரவகித்தது. அவளது கடந்தகால வாழ்வும், ஒவ்வொரு நாட்களும் பூவிதழ்களாய் அவிழ்வதுபோல மனம் பரவசம் கொண்டது. இந்த மகிழ்ச்சிப் பிரவாகத்தை யாரிடம் சொல்லிக் கொண்டாடுவது? யாரிடமும் சொல்லமுடியாது.

மங்கிய நட்சத்திரங்களிடையே ஒரு நட்சத்திரம் திடீரென்று ஒளிப்பிரவாகமாய் ஊற்றெடுப்பதுபோல அவளது கண்கள் உணர்ந்தன. இப்படி ஒரு காட்சி தனக்கு வெகு அபூர்வமாகத் தோன்றும் என்று அவள் மலரவளிடம் ஒருநாள் சொன்னபோது அவள் முழுமையாகச் சிரித்தாள். பிறகு அவளது விரல்களைப் பற்றிக்கொண்டு வாஞ்சையோடு பார்த்தாள். கொஞ்சநேர இடைவெளிக்குப் பிறகு கட்டாயம் உனக்கு அப்படியான அபூர்வக் காட்சி தோன்றுவது அதிசயமே இல்லை என்று சொன்னாள். அவளை அறியாத பரவசம் கண்களிலே வெளிச்சமாய்ப் படர்ந்தது.

இவ்வளவும் சொல்லிவிட்டுத் தன் உணர்வுகளை வார்த்தைகளில் கொண்டுவர முடியாதவள்போல சில கணங்கள் மௌனமாக இருந்தாள் அவள். அந்த மௌனத்துக்கு எண்ணற்ற ரகசியங்கள் உட்புதைந்திருந்தன.

அவர்கள் இருவரிடையேயும் இப்படித்தான் மௌனமே சிலவேளைகளில் நீண்ட நேரத்துக்குப் பேச்சுமொழியாகிவிடும்.

மீண்டும் வானத்தைப் பார்த்தாள் வசந்தி. இப்போது அந்த நட்சத்திரத்தைக் காணவில்லை. முன்னர்போலவே எல்லா நட்சத்திரங்களும் பாதிக் கண்களை மூடிக்கொண்டாற்போல் இவள் உணர்ந்தாள்.



இதேபோல தக,தகக்கின்ற பிரகாசம் பொருந்திய நட்சத்திரங்கள் திடீர் என்று அவளின் பார்வையில் அழுத்தமாகப் பிரகாசிக்கும். ஆனால் அவள் அதை அடிக்கடி காணாவிடினும் கண்டபொழுதிலேயே ஒரு பேரொளிபோல மனத்தினுள் அழுத்தமாக விதை ஊன்றிவிட்டது. அந்த விதை உமிழ்ந்த பிரகாசம் அவளை எல்லாத் துன்பங்களில் இருந்தும் சட்டென்று உயரத்துக்குத் தூக்கிவிடும். ஆனால் அதற்கு ஒரு சரியான இலக்கணம் சொல்லமுடியாதபடி வெளிச்சம் உமிழ்கின்ற ஆற்றல் எப்படி வாய்த்தது என அவள் ஆச்சரியப்பட்டாள். அந்த ஒளியில் எல்லாமே இருந்தன. ஆனால் நேருக்கு நேராகப் பார்க்க முடியாது எனினும் பார்க்கவேண்டுமென மனம் உன்னுகின்ற பிரகாசம் அது.

இப்பொழுது வானத்தின் வெகுதொலைவில் ஒற்றைச்சுடராய் பொறி

ஒன்று படுகின்றது. கண்களைத் தீட்சண்ணியப்படுத்தி விட்டு பிரமிப்புக்குள் ஆழ்த்திவிட்டு அந்த வெளிச்சம் காணாமற்போயிற்று எனினும் என்ன? அந்த வெளிச்சமும், தீட்சண்ணியமும் எத்தனை விந்தைகளை விதைத்திருக்கும். யாருக்கும் சொல்லாத மௌனத்துடன்.

அவள் கரும்புலிக்கான பூரண பயிற்சி பெற்றதும் மனதினுள் எல்லையற்ற மகிழ்ச்சி பிரவகித்தது.

சின்னஞ்சிறிய கிராமம் முழுவதும் அழித்து நாசமாக்கப்பட்டு அந்த அப்பாவி மக்கள் கொத்திக் குதறப்பட்டபோது அவளின் பிஞ்சுக் கண்கள் வேதனையோடு நொந்தன. அவளால் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடமுடியவில்லை. ஆனால் ஒரு வைரம் பாய்ந்த உறுதி நெஞ்சினுள்ளே வலுக்கொண்டது. இவ்வளவு கொடுமைகள் செய்த பிறகும் மிருகக் கூட்டங்களைப் போல அவர்கள் துள்ளித்துள்ளி ஆடினர். கண்களில் கயமை மின்ன அங்கே உயிரிழந்து கிடந்த பிஞ்சுகளையெல்லாம் கால்களால் உருட்டியும் புரட்டியும் கேவலப்படுத்தினர்.

அவளுக்கு அந்த மறைவிடத்தில் இருந்தாவது ஏதாவது செய்ய வேண்டும்போல தீக்கனல் நெஞ்சினுள் பிரவகித்தது. ஆனால் வெறும் கையும், காலும் எதைச் செய்ய முடியும்?

எல்லாம் அடங்கி ஓய்ந்து மரணமும் கொடூரமும் கரையை மூடிக்கிடந்த அந்த வேளையில் அவளுக்குள் ஒரு வெளிச்சம் மெல்ல முகத்தை எட்டிப்பார்த்தது. அமைதியாக எழுந்தாள்.


இந்த அமைதிக்கூடாக நிறைய நெருப்புக்கோடுகள் உருவெடுத்தன. அந்தக் கிராமத்திலே மௌனத்தைச் சுமந்துகொண்டு எரிந்து காயப்பட்ட உணர்வோடும் இரண்டொரு நாட்கள் அவள் திரிந்தாள். இந்தக் கொடூரமான கொடுமைகள் ஏன் என்ற கேள்வி அவளது உடல் எங்கும் ராட்சத நெருஞ்சி முட்களாய்ப் பிய்த்தெறிந்தன. ஆனாலும் மனம் சோர்வடையவில்லை. இதற்கெல்லாம் பழிவாங்கவேண்டும் என்ற ஆக்ரோசம் நெஞ்சினுள்ளே தணல்புக்களாய் படர்ந்து பரவின.

இந்தவேளையிற்தான் அவள் ஒருங்கையை இழந்த அனுசுயாவைச் சந்தித்தாள். அனுசுயா வாட்டசாட்டமாய் இருந்தாள். கண்களிலே மின்னுகின்ற துணிவைப் பார்க்கின்றபோது அவளின் வார்த்தைகளை அப்படியே ஒப்புக்கொண்டு அவள் சொன்னபடி எதையும் செய்யக் கூடியவர்கள். அவளுடைய சின்னக் கண்களில் எவரையும் வசீகரிக்கும் தீட்சண்ணியம் இருந்தது.

சட்டென்று அவள் கண்களை வசந்தி நிமிர்ந்து பார்த்தாள். கண்களோடு சேர்ந்து மனத்திலும் இருட்டு பளீரென்று அறைந்தது. இவளை அறியாமலே விம்மல் சுழித்து உதிர்ந்தது.

அவளின் மனதை உடனே உணர்ந்துகொண்டாள். அவள் "ஏன் திடுக்கிட்டுப்போனாய்? என் ஒற்றைக் கண்ணிலேயே என் இரண்டு கண்களின் வெளிச்சமும் இருக்கின்றது. அதைப்பற்றிக் கவலைப்படாதே" என்றாள்.

இப்படி யார் செய்தது?



யார் செய்திருப்பார்கள் என்று நினைக்கிறாய்?

அந்த மிருகங்கள்தான் என்றாள் வசந்தி.

கொஞ்சநேரம் இருவரும் மௌனத்தில் மூழ்கிப் போய் இருந்தனர்.

"இந்தக் கொடுமைகளுக்கு ஒரு முடிவு வராதா?" என்று தன்முன்னே உள்ள பலரையும் பார்த்துக் கேட்பது போலக் கேட்டாள் வெப்பமான பெருமூச்சுடன் வசந்தி.

அனுசயா மௌனமாகவே இருந்தாள்.

மௌனத்தை அவளே கலைத்தாள்.

"அப்போ இதற்கு என்ன செய்யலாம்?"

"இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்"

"எப்படி?"

ஒற்றைக் கண்ணில் வெளிச்சம் சுடர அவளைப் பார்த்தாள் அனுசுயா.

"நாங்கள் இதற்கு எதிராகப் போவதைவிட வேறு ஒரு வழியுமில்லை."

தன்னை அறியாத பரவசத்துடன் கொஞ்சம் கேள்வி களுடனும் அவளைப் பார்த்து, "நீங்கள் என்ன சொல்லு றியளோ அதன்படி நான் எதையும் செய்வேன்" என்றாள் வசந்தி.

"அப்படியா?" புன்னகை மணக்க அவளின் கைகளை மிகுந்த வாஞ்சையோடு பற்றிக்கொண்டாள் அனுசுயா.

2

கைகளிலே ஆயுதங்களோடு பிறந்தவள்போல அவ்வளவு நுட்பமாகச் செயற்பட்டாள் வசந்தி. ஒரே நேரத்தில் கண்களும், கைகளும் எதையுமே துல்லிய மாகத்தொட்டு நிற்கும். ஆயுதங்களைக் கையாள்வது மட்டுமல்ல புதிய ஆயுதங்களை உருவாக்குவதிலும் அவள் மின்னலாய்த் தெறித்தாள்.

சில மாதங்களுக்குள்ளாகவே அவளின் வீரசாக சங்கள் எல்லாரையும் பிரமிக்கவைத்தன. புதியவர்க ளுக்குப் பயிற்சி கொடுப்பதில் ஆர்வத்தோடு இருந்தவர் களுக்கு அவள் மின்னலானாள்.

கரும்புலியான அவள் அன்றைக்குத் திடீரென்று எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தாள். இந்த மகிழ்ச்சி அளக்கமுடியாது விரிவடைந்தது. கண்களை மூடிய போதும் திறந்தபோதும் உறக்கத்திலும் விழிப்பிலும் அவளை அந்தப் பேரொளியே வசீகரித்துக்கொண்டது.

பயிற்சியில் இருந்த அவள் எதிர்பாராதவிதமாக அங்கு மௌனம் பிரவகித்ததைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். வார்த்தைகளே வரவில்லை - கண்கள் இமைக்கவில்லை. கணப்பொழுதுக்குள் எங்குமே மின்னல் தொடர்ந்து வெளிச்சம் பூத்துப் பரவினாற்போல அவள் பிரமித்துப்போய் நின்றாள்.

"என்ன?" அந்தக் கனிந்த குரல் அவளை இன்னும் பிரமிப்பினுள் ஆழ்த்திற்று.

"வசந்தி உம்முடைய ஆளுமையில் எனக்கு நம்பிக்கை யுண்டு"

அவள் அவரை நிமிர்ந்து பார்க்கவும் முடியாமல், பார்க்காமல் இருக்கவும் முடியாமல் மனம் தத்தளித் தாள்.

அபூர்வமான அந்த நட்சத்திர வெளிச்சம்போன்ற பார்வையை அவளால் நேர்கொண்டு பார்க்கமுடிய வில்லை. மௌனமாகவே நின்றாள்.

"உம்முடைய திறமை மிக அபூர்வமானது."

வாழ்வின் எந்தக் கட்டத்திலும் உணர்ச்சிவசப்படாத அவள் கண்களால் பொலபொலவென்று கண்ணீர் பெருகி ஓடுவதை உணர்ந்தாள். நெஞ்சு தளதளத்து விம்மிற்று. அந்த அபூர்வ நட்சத்திரத்தின் வெளிச்சம் இப்போதும் அவளைப் பரிவோடும், கனிவோடும் வரு டிக்கொடுப்பதாக அவள் உணர்ந்துகொண்டாள்.

அந்தக் கொஞ்சநேரம் அவளுக்கு வாழ்க்கையின் ஆழ்ந்த அர்த்தத்தை விளக்குவதாக அவள் மனம் உணர்ந்தது.

தந்தையையும், தாயையும் ஒரே உருவில் கண்டு புளகாங்கிதம் அடைந்தவள்போல மௌனம் படர்ந் திருந்த அந்த இடத்தில் அவள் பிரமித்து நின்றாள்.

சுடர்விடும் அந்த நட்சத்திரம் சட்டென்று அங்கிருந்து மறைந்தது. அங்கு நின்றவர்கள் பரவசத்துடன் வார்த் தைகள் அற்றவர்களாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

முன்னர் ஆயுதங்களோடு இயங்கியதைவிட இப் போது வீறுகொண்ட நெருப்பாய் சுடர்ந்துகொண்டிருந் தாள்.

முன்பு ஒருநாள் வீதியெங்கும் குரூரமாக கொத்திக் குதறப்பட்ட பச்சைப் பிஞ்சுகள், உதிர்ந்த மொட்டுக்கள் யாவுமே அவளை அறியாமல் அவளின் கண்களிலே வந்து நின்றன. வலிவும் பொலிவுமாய் இருந்து உடல் சிதைந்த அனுசுயா பளீரென்ற பார்வையுடனும் பளிச் சென்ற புன்னகையுடனும் அவள் தோள்களில் கை கொடுத்தாள்.

வானத்தை நிமிர்ந்து பார்த்தாள் வசந்தி. அந்தப் பளபளப்பான ஒற்றை நட்சத்திரம் இப்போது மேலும் மேலும் ஒளிசுடர்ந்துகொண்டு இருந்தது. கண்களால் பார்க்கமுடியாத பிரகாசம் எங்கும் பரவுவதாய் உணர்வு தொட்டது. அந்த நட்சத்திரத்துக்குப் பெயர் இல்லை. இதுதான் என்று சொல்லத்தக்க அடையாளம் எதுவும் இல்லை. ஆனால் சுடர் உமிழும் அந்த நேரத்தில் அது சாகாவரம் பெற்றுவிடுகிறது.

# மனதைத் தொட்ட எழுத்துக்கள் 2



## அ.இரவியின் 'காலம் ஆகிவந்த கதை'

ந.சத்தியபாலன்.

ஒரு படைப்பாளி ஆத்மார்த்தமான ஈடுபாட்டோடு தனது படைப்பினை உருவாக்கும்போது அப்படைப்பினூடாக அவன் தன்னை - தானுணர்ந்த - தன்னைத் தொட்ட - தன்னைத் துயருறுத்திய - தன்னுள் மகிழ்வானுபவக் கிளர்ச்சியை விளைவித்த - தன்னை அலைக்கழித்த சகலதையும் வாசகனிடத்தில் தர எத்தனிக்கிறான். அந்தப் படைப்பினோடு தொடர்புடைய இவையெலாம் தனக்குச் சம்பவித்த அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுகிற தவிப்பே அந்தப் படைப்பினூடு எம்மிடம் வருகிறது.

இந்தப் பகிர்தலுக்கான முயற்சியில் அவனது அணுகுமுறை, மொழி, பார்வை என்பனவெல்லாம் எத்தனை தூரம் அவனது வெற்றிக்குத் துணைநிற்கின்றன என்பதைப் பொறுத்தே படைப்பின் . சிறப்புத் தீர்மானிக்கப்படுகிறது.

சிறுகதைப் படைப்பாளி அ.இரவியின் 'காலம் ஆகிவந்த கதை' மேற்சொன்ன எத்தனிப்புகளின் பதிவாக ஒரு அனுபவப் பகிர்வு முயற்சியாக முழுமையடைந்து எம்மிடம் வந்துள்ளது.

எல்லா மனிதனிடத்திலும் அடியாழ மனசில் உறைந்து கிடக்கிறது வாழ்க்கை மீதான அவனது காதல் - இந்த வாழ்வின் ஒவ்வோர் அங்கத்திலும் ஊறிக்கிடக்கிற வாழ்வின்ரசம் அவனை வாழத்தூண்டுகிறது. வாழ்தலின் மீதான அவனது ஆர்வத்தைத் தூண்டிவிடுவதான வாழ்வின் அழகின்மீது அவனுக்குத் தீராத மோகம்.

இவ்விதமாய் வாழ்வைப் பார்த்து, ரசித்து துய்த்து வாழும் மனிதனிடமிருந்து அந்த வாழ்வைப் பறிக்க முனைந்தால் - இயல்பாய் வாழும் அவனது உரிமையைப் பிடுங்கிப்போனால் அவனது இதயம், ஆத்மா இவையெல்லாம் எப்படித் துன்புறும்? அவ்வாறு பறிபோன நிலையில் முன்பிருந்த வாழ்வினை - அந்த ஞாபகங்களை அவன் மீட்டுப் பார்க்க முனையும்போது எத்தகைய ஒரு வலி வெளிப்படும்?

இயல்பாய் ஓடிக்கொண்டிருந்த எமது வாழ்வை யுத்தமும் ஆக்கிரமிப்பும் கொடுமைகளும் சிதைத்த போது அ.இரவி என்கிற தனிமனிதன், தனது பதின்மூன்றாவது வயதில் எத்தகைய ஒரு வாழ்வோடு இயைந்து இருந்தான் என்பதை அந்தச் சிறுவனின் குரலாய் வெளிப்படுத்துவதாக காலம் ஆகிவந்த கதையின் பல சிறுகதைகள் அமைகின்றன.

அவரது கதைகள் ஒவ்வொன்றிலும் அக்கால வாழ்வின் வனப்பு வரையப்பட்டுள்ளது. கற்பனைப் புனைவுகளின் கலப்பில்லாமல் உண்மைகளை, உண்மை நிகழ்வுகளை அப்படியே சொல்வது அவரது எழுத்துக்கு வலிமை சேர்க்கிற ஒரு பண்பாய் அமைந்துள்ளது.

*16.02.2004* இல் யாழ்.பல்கலைக்கழக நாடக அரங்கியல் விரிவுரைமண்டபத்தில் நடந்த இந்த நூலின் அறிமுக விழாவின்போது கலந்துகொண்ட இரவி கூறிய ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

"எழுதுகிறபோது பொய்யாய் ஏதும் எழுதக் கூடாது. உண்மையை எழுத வேணும், உண்மையை உணர்ந்த மாதிரி அப்படியே உண்மையாய் எழுதும்போதுதான் படைப்பில் அழகுவரும்....." அதே நிகழ்வில், வேறொருசமயம் அவர் குறிப்பிட்டார், "தனியே இருந்து அழுது

அழுதுதான் இதில் பல கதைகளை நான் எழுதினேன்."

இந்தக் கதைகளை மனமொன்றிப் படிக்கின்ற போது நெஞ்சுபொங்கி, அழுகை வருவதைப் பல சமயங்களில் நிறுத்த முடியவில்லை - இந்த அனுபவத்துக்கு ஆளாகும்போது இரவி சொன்ன கூற்றில் இருக்கிற உண்மையை உணரமுடி கிறது. அவரது எழுத்துக்கள் வெறும் அழுகை ஒப்பாரிகள் அல்ல. ஒரு சிறுவனின் ஞாபகமீட்டு தல்களாகத்தான் பல கதைகள் உள்ளன. ஆனாலும் -

அவற்றில் நாம் எமது சொந்த வாழ்வினை அடையாளம் காணுகிறோம். அங்கு சித்திரிக் கப்படும் வாழ்க்கை நம்முடையதாய், நாம் அனுபவித்ததாய் ஞாபகமூட்டப்படுகிறது. இரவி யின் குடும்ப உறவுகள் பல கதைகளில் மீண்டும் மீண்டும் வருகின்றன. அந்த அப்பா, அம்மா, அக்கா, மாமாக்கள் எல்லோருமே நம்மோடு ஒருகாலம் வாழ்ந்தவர்களாய் இருக்கிறார்கள். கதைகளினூடு அவர்களைத் தரிசிக்கையில் எமது பழைய உறவுகளும் வாழ்க்கையும் நினை வுக்கு வருகின்றன.

"பலாப்பழத்தின் மணம் போயிற்று, பழஞ் சோற்றின் ருசி போயிற்று, நிலாக்காய்ந்த அந்த நெடுநிலத்தின் நினைவும் போயிற்று, உலாப் போயிற்று, ஊர்போயிற்று, உறவுபோயிற்று, துலாத்தாழ்த்தி நீரள்ளியுண்ட துரவும் போயிற்று. இவை போனால் நமக்கென்ன என்று இருந்து விடமுடிகிறதா? ஞாபகம் அது வந்து எம்மைக் குத்திக்குடைகிறது. இப்போ மேளச்சத்தம் கேட்கிறதே இது செய்துவிட்ட வேலை என்ன? அதன் தாளக் கட்டை ரசிக்கிறோமா? கணீரென்று ஒலிக்கின்ற அதன் நாதத்தை நயக்கிறோமா? ரசிக்கின்றோம்தான் நயக்கின்றோம்தான் ஆயினும் அதற்கும் மேலாக வேறொன்றும் செய்கிறோம். என்ன அது? ஞாபகம் கொள்கி றோம் அதுதான். மேளச்சமா கேட்டவுடனை அம்மாள் கோயில் வடக்கு வீதிக்கு ஓடுகி றோமே. ஞாபகம் அது நம்மைத் துரத்துகிறது. செம்பாட்டுப்புழுதி ஏன் மூக்கில் புகவேண்டும்? சோளகக் காற்றும் பனங்கூடலும் பன்னாடை, கொக்கறை, காவோலை விழுதலும் வெயிலும் மாலையின் குளிர்மையும் எல்லாம் எல்லாமும் ஞாபகம் வருகின்றன." - என்று சொல்கின்ற இரவியின் எழுத்தில் எமது உணர்வுகளும் கலந் திருக்கின்றன. ஞாபகங்களால் அலைப்புறும் துயரம் யாருக்கில்லை இங்கு?

சொல்லும்முறை, கையாளும் மொழி, அழகு டன் திகழும் எளிமை என்கிற பல தனித்தன்மை களால் முதன்மைபெறத்தக்க ஒரு நூலாக விளங்கும் காலம் ஆகிவந்த கதையின் மூலம் இரவி தனக்கான ஒரு தனியிடத்தை சிறுகதை ஆக்கத் துறையில் நிலையாக்கிக் கொள்கிறார். பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடு கிறமாதிரி உமாவரதராஜன், ரஞ்சகுமார் வரிசை யில் இரவியும் ஒரு தனியிடத்துக்கு உரியவரா கிறார்.

"இதை வாசிக்கும்போது எனக்கு இரண்டு ஆச்சரியங்கள். ஒன்று இரவிக்கு இந்த அமைவு எப்படிக் கைவந்தது என்பதுதான். நெஞ்சையும் கவர்கிறது சிந்தனையையும் தூண்டிவிடுகிறது. உண்மையில் எனக்குப் பெருமையாகவே இருக் கிறது." எனத் தனது பாயிரத்தில் பேராசிரியர் சொல்வது கவனிப்புக்குரியது.

இரவியினுடைய கதைகளில் சம்பவச் சித் திரிப்புகளில் இயல்பாய் இழையோடும் நகைச் சுவையும் கிராமிய வாசனையும் ரசனைக்குரிய அம்சங்கள். சில இடங்களில் இரவியின் மொழி நடை இடக்கரடங்கல் என்கிற மரபினை அலட்சி யப்படுத்திவிட்டு கட்டியிருக்கிற சிற்றாடையை யும் உதறிவிட்டுச் சுதந்திரமாய் வெற்றுடம்பாய் நடந்துபோகின்ற சிறுகுழந்தைபோல நகர்கிறது. இதிலிருக்கிற இயல்பானதன்மை இன்னும் படைப்புகளுக்கு அழகு தருவதாகவே அமை கிறது.

படைப்புத்துறையில் ஈடுபட்டிருக்கிற பலரும் ஏதோ தோன்றியதை எழுதிவிட்டால் போதும் என்ற ஆசுவாசத்தோடு அமர்ந்திருக்கிறபோது, தனக்கெனப் படைப்பில் தனியான பண்புகளை வரித்துக்கொண்டு பேனாவைப் பயன்படுத்து கின்ற இரவி புதிதாய் எழுத முன்வரும் பலருக் கும் சில வெளிச்சங்களைத் தெளிவாக்குகிறார்.

ஒரு படைப்பில் மொழிச்செழுமை, சிக்கலில் லாத நடை, படிப்பவனை இயல்பாகவே ஆகர் ஷிக்கின்ற போக்கு இவையிருந்தால் அந்தப் படைப்புச் சிறப்பான ஒன்றாகவே திகழும். இரவி யின் காலம் ஆகிவந்த கதை இந்த இலக்கணத் துக்குச் செம்மையாய் பொருந்தி வருகின்ற ஓர் அரிய படைப்பாகும்.

# அவரோகணம்

அஜந்தி



பிரிவு, ஏக்கம், வேதனை, சோகம், நெருஞ்சி முட்களான கடந்தகால நினைவுகள்......

எட்டு மிக நீண்ட வருடங்களின் அனுபவங்கள் இவை.

இதோ -

என் சொந்த மண்ணில் காலடி வைக்கின்ற இந்த நிமிடத்தில் எனக்குள்ளே உருவாகின்ற உணர்ச்சிக்குவியல்களை - இதே உணர்ச்சிப் பரப்புக்குள் உலாவர நேர்ந்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

புளியங்குளம்... கனகராயன்குளம்... மாங்குளம்... முறிகண்டி.

முறிகண்டியானுடைய வாசலில் மினிபஸ் நின்றது.

“பதினைஞ்சு நிமிஷத்துக்குள்ளை எல்லாரும் வந்திடுங்கோ.. அஞ்சு மணிக்கு முன்னம் முகமாலை தாண்டிட வேணும்...”

இது சாரதியின் கண்டிப்பான வேண்டுகோள்.

இந்த மண்ணில் நிகழ்ந்த - நிகழ்ந்துகொண்டிருக்கிற - அத்தனை மாற்றங்களையும் உள்வாங்கியபடி, தான் மட்டும் எதுவித மாற்றமும் காட்டாமல் A9 சாலையில் வீற்றிருக்கும் முறிகண்டியான்..

சுவாலை பரப்பி எரிகின்ற கற்பூர தீபம்....

தேங்காய்ச் சிதறல்கள்...

முண்டியடிக்கின்ற பக்தர் கூட்டம்...

மனசுக்குள் பரவச சிலிர்ப்பு.

இந்த வாசலில் இனி ஒருதரம் இப்படி நிற்பேன் என்பதை அன்று - துயரம் தோய்ந்த அந்த நாளில் - துளியேனும் நினைத் திருப்பேனா?

அல்லது, இது பற்றிய நினைப்புக்கு அன்று மனசில்தான் இடமேது?

கண்ணீருடனும் கனத்துப்போன இதயங்களுடனும் ஊர்பிரிந்து நடந்த பல்லாயிரம் என் மக்களில் நானும் ஒரு அங்கமாய்....

வீட்டு யன்னல் வழியே சுகமான காற்றைத் தினம் தினம் எமக்கு அன்பளிப்புச் செய்த அந்த வேப்பமரம்.

தம் மலர்களால் தினமும் காலை வணக்கம் சொல்லிய செவ்வ ரத்தைச் செடிகள் -

ஓய்வாகச் சாய்ந்திருந்து பத்திரிகையும் புத்தகங்க ளும் வாசிக்கின்ற நிம்மதி நிறைந்த மகிழ்ச்சியைத் தந்த வீட்டின் முன் விறாந்தை - இன்னும்... இன்னும்... எமது வாழ்வுடன் ஒன்றிக்கலந்துவிட்ட அத்தனையையும் விட்டு விட்டு....

பசி, தாகம், களைப்பு, சோர்வு என்பவற்றின் கைதி களாய், எதிர்காலம் பற்றிய எதுவித இலக்குமின்றி அந்த நீண்ட நடைப் பயணத்தில் சென்றதை இந்த நிமிடம் நினைக்கையிலும், அடி வயிற்றிலிருந்து தீச்சுவாலை ஒன்று கிளம்பி, மேலே... மேலே.... நெஞ்சினுள் பரவி, உயிரை உருக்கி - ஆன்மாவையும் தீண்டி இம்சை செய்கிறதே....

தாயகம் நோக்கிய பயணத்தில் இந்த இம்சை, இந்தச் சோதனைமிக்க வேதனை என்பவை தவிர்க்க முடியாத ஒரு நியதியாக இருந்திருக்குமோ?

இருந்தது.

எதிரில் தென்பட்ட ஒவ்வொரு முகத்தையும் உற்றுப் பார்க்கிறேன்.

நிம்மதியும் சந்தோஷமும் தெரிந்தன. ஆனால் அவற் றையும் மீறி - 'இந்த நிம்மதியும் சந்தோஷமும் நீடிக்க வேண்டுமே..' என்பது போன்ற விசனமும் அந்த முகங் களில் தெரிவதாய் எனக்குத் தோன்றியது.

நெஞ்சில் பட்ட காயமும் வலியும் இன்னும் ஆறாதது காரணமாயிருக்கலாம்.

பஸ் கிளிநொச்சியைத் தாண்டுகையில், வீதியோரப் பெயர்ப்பலகைகளின்மீது பார்வை பதிய -

'அறிவமுது பொத்தக நிலையம்', 'இசைவிழி வாணி பம்', 'தமிழ்நம்பி வெதுப்பகம்' என்பன போன்ற அழகான அறிவிப்புகள் மனசை நிறைக்கின்றன.

அழகழகாய் ஆடைகள் அணிந்து நிற்கும் தூயதமிழ்.

'அலைவற்றிக் கடலது சாகுமா.... தமிழ்ப் புலிப்படை தோற்றிடக்கூடுமா...' என்ற யோகியின் பாடல்வரி காற்றோடு வந்து மனசை வருடியது.

இப்படி எத்தனை பாடல்கள்.

வயது வித்தியாசமின்றி அனைவரையும் முணுமுணுக்க வைத்து விடுதலை உணர்வுக்கு உரம் சேர்த்த கானங்கள்.

இப்போது கூட ஞாபகமிருக்கிறது.

பக்கத்து வீட்டுச் சின்னப்பையன் குட்டி இந்தப் பாட் டெல்லாம் அழகாய்ப் பாடுவான்.

"நீ பெரிசாய் வளந்து படிச்சு என்னவாய் வருவாய்?" என்று கேட்டால்,

"புலி மாமாக்களோடை வேலை செய்வன்" பளிச் என்று பதில் சொல்வான்.

விடுதலை என்பதன் அர்த்தம் தெரியாத அந்த ஐந்து வயசிலேயே அவன் மனசில் இப்படியொரு எண்ணம் விதைக்கப்பட்டிருந்தது எங்களுக்கு ஆச்சரியமாயும் கூடவே பெருமையாயும் இருக்கும்.

அவன் இப்பொழுது வளர்ந்து பெரிய பையனாய் இருப்பான்.

என்னை ஞாபகம் வைத்திருப்பானா?

இன்னும் இரண்டரை மணி நேரத்தில் எல்லோரையும் சந்திக்கப்போகிறேன்.

பதட்டமும் சந்தோஷப் பரபரப்புமாய் மனம் துள்ளுகிறது.

பரந்தன் தாண்டித் தூரம் கடந்துகொண்டிருந்தபோது ஆனையிறவுத் தடைமுகாம் நினைவுக்கு வருகிறது.

வெளியே எட்டிப் பார்க்கிறேன். விரிந்து பரந்து கிடந்தது - வெளி மட்டும்.

கடலின் நீலம் சாட்சி சொல்ல, எனக்குள் கரைந்து போகிறேன்.

எத்தனை விலை கொடுத்திருப்பார்கள் என் பிள்ளை கள்?

அவர்கள் புதையுண்டு விதையாகிப்போன உப்பு நிலம் தழுவிவந்த காற்று என்னை வருடி நலம் விசாரிப்பதாய் உணர்கையில் கண்கள் பனிக்கின்றன.

'நன்றி என் செல்வங்களே நன்றி'

இயக்கச்சி... பளை.

பளை தென்னந்தோட்டத்துக்குப் பேர்போன இடம். ஒருவர் பளையில் தென்னந்தோட்டம் வைத்திருந்தால் அந்தக் காலத்தில் அவர் பெரிய பணக்காரர்.

கண்டி வீதியின் இரு புறமும் ஓங்கி நின்று சிறகசைக் கும் தென்னைகள் தம்மை வரவேற்று வாழ்த்துவதாய் போவோர் வருவோரை உணரச்செய்யும். அது ஒரு இதமான அனுபவம்.

ஆர்வம் மேலிட இருபக்கமும் கண்களை ஓடவிடு கிறேன்.

பல நூற்றுக்கணக்கான தென்னைகள் தலையிழந்து சிறகொடிந்து சமாதிநிலை அடைந்திருந்தன.

வரவேற்புமில்லை... வாழ்த்துமில்லை.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

நெஞ்சுக்குள் வலி.

அழித்தவனை மனசு தூற்றிச் சபிக்கிறது.

நகர்ப்பகுதியில் பளை களைகட்டியிருந்தது.

நவீன பாணியிலமைந்த வியாபார நிலையங்கள் பல வண்ணம் காட்டின.

தென்னிந்திய சினிமாக் கதாநாயகர்கள் அஜித்தும் விஜய்யும் 'அம்பாள் கொமினிக்கேசன்', 'நிர்மல் கொமினிக் கேசன்' என்ற பெயர்ப்பலகைகளில் பெரிதாய் இருந்து 'போன்' பேசிக்கொண்டிருந்தார்கள்.

'தொலைத் தொடர்பு நிலையம்' என்ற அழகிய தமிழ்ப் பதம் இருக்கையில் ஏன் இந்த 'கொமினிக்கேஷன்?'

வீடியோக் கடை ஒன்றின், 'இன்றைய வெளியீடுகள் பிதாமகன், ஆஞ்சநேயா' என்ற வாசகம் ஒரு நிமிடம் பார்வையில் தெறித்து விலகிப் பின்னால் ஓட,

விக்ரமும் அஜித்தும் என்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது.

மீண்டும் பழைய நாட்கள் நினைவில் மோதின. நெஞ்சை நெகிழ்த்தும் வாசகங்களுடன் எங்கள் மண்ணின் மைந்தர்களை அஞ்சலிக்கும் சுவரொட்டிகள்.

இந்த மண் தனது விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வரலாற்றை எங்கும் எதிலும் பிரதிபலிக் கும் வாழ்க்கைமுறை...

இன்று திலீபனும் மாலதியும் எங்காவது ஒரு வீதி யோரச் சுவரில் சின்னதாய்த் தெரிந்தார்கள்.

ஊருக்குத் திரும்புகின்ற சந்தோஷம் வலுவிழந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு.

யுத்தத்தின் சாட்சிகளாய் [illegible] அழியாத வடுக்களைச் சுமந்தபடி இடிபாடுகளாய் மாறியிருந்த வீடுகளும் கட்ட டங்களும் கொடிகாமம், சாவகச்சேரி எனத் தொடர்ந்த பயணத்தில் இம்சை செய்ய -

கைதடியும் நாவற்குழியும் மனித வாழ்வின் சுவடே இல்லாத பாலைவனங்களாய் வரண்டுபோய்க் கிடந்தன. கைதடிப் பாலத்திலும் நாவற்குழிப் பாலத்திலும் முட்கம்பி களால் சூழப்பட்ட கூடுகளுக்குள் நின்றபடி ராணுவம் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது.

செம்மணி வெளி.

கிருஷாந்தி... புதைகுழி... எலும்புக்கூடுகள்... எதையெதை யெல்லாம் இதுவரை பறிகொடுத்துவிட்டோம்...?

இனி...?

தூரத்தில் அந்த வளைவு தெரிகிறது.

'யாழ்ப்பாணம் உங்களை அன்புடன் வரவேற்கிறது.'

என அந்த வளைவிலுள்ள வாசகம் எனக்கு மிகவும் பிடித்தமானது.

யாரோ ஒரு மனிதர் எமக்காக அங்கே நின்று எம்மை அன்போடு வரவேற்பதான ஒரு உணர்வுப் பூரிப்பு அந்த வாசகத்தைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் இதமாக இதயத்தை வருடும்.

பஸ் அந்த இடத்தை நெருங்க - வாசகம் தெளி வாய்த் தெரிகிறது.

என் தாய் மண்ணே... நீண்ட பிரிவுக்குப் பின் உன்னிடம் இதோ வருகிறேன். என்னை அன்போடு அணைத்துக்கொள்...

நீ என் சொந்தம்...

நீ என் வாழ்வு....

நீ என் உயிர்...

வாசகம் மீதிருந்த பார்வை கீழே இறங்கி, சாலையில் பதிகிறது.

அங்கே -

அடுக்கப்பட்ட மண்மூடைகளுக்கு நடுவில் - பச்சைத் தொப்பி... குரோதம் கொப்பளிக்கும் இரண்டு கண்கள்... துப்பாக்கி முனை!

அவனா? எனக்கே எனக்கேயான என் தாய் நிலத்தில் என்னை வரவேற்க -

அவனா? தலையிழந்த தென்னைகளும் கற்குவியல் களான வீடுகளும்... மயானமாகிவிட்ட ஊர்களும்.... எலும்புக்கூடுகளை அடையாளம் காணவேண்டிய எம் மக்களின் சோகமும்... சீரழிந்துபோன எம் வாழ்க்கை யும்.

எல்லாம்... எல்லாமுமே அவனால் நிகழ்ந்து முடிந்த பின்னும் அவன் எப்படி இங்கே... இப்படி?

இந்த இடத்தில் நிற்க அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது?

இதயம் வலிக்கிறது.

அரியாலை.... கச்சேரியடி....

யாழ்.பஸ் நிலையம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
[illegible] கிளை நூலகம்

யாழ்.பஸ் நிலையம்.

மீண்டும் உயிர் பெற்ற நவீன சந்தை - நடை பாதைக் கடைகள்....

அப்பிள் - திராட்சைகளின் குவியல்கள்...

ஓட்டோ வரிசைகள்.

வாசலில் ஓட்டோ நின்றதும் முதலில் ஓடி வந்தது கமலா - குட்டியின் அம்மா.

"அன்ரி வாங்கோ.... எவ்வளவு காலம்...? உங்களைக் காண எவ்வளவு சந்தோஷமாயிருக்கு.. நல்லா மெலிஞ்சு போனியள்..."

ஒரே மூச்சில் சொல்லி ஓடிவந்து கட்டிப்பிடித்து - பைகளைத் தன் கையில் வாங்கியபடி -

"டேய் குட்டி... ஓடியாடா... அன்ரி வந்திட்டாவடா..." உரத்துக் கூப்பிட்டாள்.

ஓடி வந்தவன் - குட்டியா? நம்ப முடியவில்லை. நன்றாய் வளர்ந்திருந்தான்.

"குட்டி... எப்பிடியப்பன் இருக்கிறாய்? அன்ரியை ஞாபகம் இருக்கே?" கேட்டேன்.

"ஓ... அம்மா சொல்லுறவ..."



"நல்லாப் படிக்கிறியே...? எத்தினையாம் வகுப்பு?"

"ஆண்டு எட்டு"

பழைய ஞாபகம்வர, சிரித்தபடி நான் கேட்டேன்.

"அப்ப பெரிசாய் வளந்து படிச்சு என்னவாய் வருவாய்...?"

கமலாவுக்கும் ஞாபகம் வந்திருக்க வேண்டும். சிரித்தாள்.

"என்ன... நான் கேட்டதுக்கு ஒண்டும் சொல்லேல்லை...?"

சிரித்தான் பதிலேதும் சொல்லவில்லை.

அடிக்கடி தாயைப் பார்ப்பதும் அவசரப்படுவதுமாய் பரபரத்தபடி நின்றான்.

"என்னடா... அவ வந்துநிக்கிறா.... நீ ஓடப்பாக்கிறாய்... கொஞ்சநேரம் நில்.... அந்த சூட்கேசுகளை எடுத்துக் கொண்டு போய் உள்ளுக்கு வை.... அன்ரி களைச்சுப் போனா...."

மளமளவென்று எல்லாவற்றையும் தூக்கி வீட்டின் முன் விறாந்தையில் வைத்தான்.

"நான் போட்டு வாறன்...." தாயிடம் சொல்லி, எனக்கும் சொல்வது போல ஒரு தரம் என்னைப் பார்த்துவிட்டு வெளியே ஓடினான்.

"இவ்வளவு அவசரமாய் எங்கை ஓடுறான்? ரியூஷன் ஏதுமே...?"

"இல்லை அன்ரி... இண்டைக்கு ஒக்ரோபர் ரெண்டல்லே... அதுக்காக விசேஷ நிகழ்ச்சியளாம். ஆரோ நடிகை மும்தாஜின்ரை பேட்டியும் 'பாபா' படமும் போடுறாங்களாம்.... இப்ப சன் ரீவியை அப்பிடியே எடுத்து இங்கை சக்தி போடுதல்லே.... அதுதான் பாக்கிறத்துக்கு ஓடுறான். முன் வீட்டில ரீவி இருக்கு...எல்லாப் பிள்ளையளுக்கும் இப்ப இதுதான் பைத்தியம்... முந்தி மாதிரி இல்லை...."

கமலாவின் குரலில் கவலை தெரிந்தது.

"இந்தாங்கோ அன்ரி திறப்பு... நீங்கள் குளியுங்கோ...நான் அதுக்கிடேலை தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறன்..."

கமலா போக - கதவைத் திறந்து உள்ளே நுழைகிறேன்.

என் வீடு எனக்கே அந்நியமாகிப் போய்விட்டது போன்ற உணர்வொன்று நெஞ்சைத் தாக்க.

துக்கம் பீறிடுகிறது.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

அம்புலி

# தரைவழிப் பயணத்தின் நினைவுகள்



ஓடிக் கொண்டிருக்கும்
மரங்களைப் பார்த்தவாறு
பயணத்தில் லயித்திருந்தன விழிகள்
உதிரத் தளமிட்டு
தார்ப்பூச்சால் கட்டியெழுப்பிய
உயிர்ச்சாலையின் மேலே
விரைந்து கொண்டிருந்தது பேருந்து

வெம்மை பொசுக்கும்
வெளிகள் தாண்டி
தறிக்கப்பட்ட தலையறுந்த
மரங்களின் மயானங்கள் தாண்டி
முள்வேலிக்குள் நுழைந்தது ஊர்தி.

கையில் பையுடனும் – சட்டைப்
பையுள் அடையாள அட்டையுடனும்
அணிவகுப்பு உடற்சோதனைச்
சடங்கு முடித்து
வேறொரு ஊர்திக்கு
விரைந்தன கால்கள்.

தலையில் சுமையுடன்
ஓடிவந்த காலத்தை அசைமீட்டபடி
பாரத்துடன் நகர்ந்தன மணித்துளிகள்.
யன்னலுக்கு வெளியே
மரங்களுக்குப் பதிலாக
துப்பாக்கி மனிதர்கள்
ஓடிக் கொண்டிருந்தார்கள்.
கண்ணைக் கவரும்
கடைகளுக்கு முன்னால்
விழுங்கும் பார்வையுடன்
வில்லங்கமானவர்கள்.

சிதிலமாகிப் போன
தென்மராட்சியின்
கட்டடவெளிகளுக்குக் கீழே
புதைந்து கிடந்தது மானுடவாழ்வு.
காதுகளில் இரைந்த
'ஊ' வென்ற ஒலியுடன்
கடந்து சென்றது
கைதடி வெளியும் வரவேற்பு வளைவும்.
வெளியே பார்க்க மறுத்தன விழிகள்.

கடலால் விளிம்பு கட்டியிருந்த
யாழ்குடாவின் கரைகளுக்கு
முட்கம்பி அலங்காரம் – புது
முகவரி தந்தது.
தீக்குளித்த சரசுவதியின்
அழகுபடுத்தப்பட்ட
என்புக்கூடு தாண்டி
விளம்பரங்களால் நிரம்பிய
நகர நெரிசலில்
சென்று தரித்தது ஊர்தி.

கிழித்துவிடப்பட்ட காற்சட்டையுடன்
பூச்சியரித்த தலையர்கள்
உலவித் திரிந்தார்கள் தெருக்களில்.
வாவென்று சொல்ல மறந்து
நாட்களையும் விழிகளையும்
தொலைக்காட்சித் தொடர்களால்
நிறைத்திருந்தனர்
உறவுக்காரப் பெண்கள்.
சீமெந்து மதில்களுக்குள்ளே
கறையான்கள் அரித்திருந்தன
மனங்களை.
இயேசுவும் ஈசுவரனும்
அல்லாவும் புத்தனும்
அலங்கார ஆலயங்களுள்
அயர்ந்து போய்க் கிடந்தார்கள்.
அவர்களின் செவிகளை அறைந்து
பள்ளியெழுச்சி பாடிக்கொண்டிருந்தன
ஒலி பெருக்கிகள்.
தொழில்நுட்பத்தின் உச்சியில்
கரைந்து காணாமல் போயிருந்தது
வாழ்க்கையின் இனிமை.
காற்றின் தழுவலின்றிப்
புழுக்கமுற்றுக் கொண்டிருந்தது மனது.
சவர்க்கிணற்றின் நீரைப்போல்
ஒரு பண்பாட்டின் ஜீவன்
உருமாறிக்கொண்டிருந்தது.
பிறந்தமண்ணின் புழுதியெங்கும்
அந்நியப் புழுக்களின் அடையாளங்கள்.

பயணச் செலவை மீறிக்
காட்சிகளால் கனதிபெற்றது
பயணத்தின் நேரம்.
ஏழெட்டு வருடங்களை
விழுங்கியிருந்தன
கடந்து வந்த சிறுதூரம்.
தரிக்கமறுத்துத் திரும்பவைத்தது
மனப்பாரம்.

சிதைவுகளுக்கிடையில் துளிர்விடும்
ஆலமரக்கன்றுகளை
ஆசையோடு பார்த்தபடி – மீண்டும்
ஊர்திக்குள்ளிருந்து
பயணித்தது மனது.

# புதிய மனுசி



ஆதிலட்சுமி சிவகுமார்

நிலவின் ஒளியில் கூரைத்தகரங்கள் பளபளத்தன.

அவள் தன் உள்ளங்கைகளை ஒருதரம் தடவிப் பார்த்தாள். கரகரப்பாய் காய்த்தபடி கைகள். தன் கைகளால் மண்வெட்டியும் பிக்கானும் பிடித்து அவள் உழைத்த உழைப்பின் அறுவடைதான் இந்தத் தகரங்கள் என நினைத்துப் பெருமைப்படுபவளாய்... அவள் முகம்...

"இந்தப் பிஞ்சுகள் ரெண்டும்... மழையிலையும்.... குளிரிலையும் விறைக்கக் குடாது....'

குழந்தைகளைத் திரும்பிப் பார்த்தாள். பாயைவிட்டு விலகிப்போய் ஓரமாய்த் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.... மூத்தவள் ஐஸ்வர்யா அச்சில் வார்த்த மாதிரி தகப்பனையே போன்று, அகலிகா கொஞ்சம் கறுப்பு. ஆனால் இவளைப்போல கம்பி கம்பியாய் நீளமான தலைமுடி.

'மூத்தபிள்ளை சரியாய்த் தேப்பனையே மாதிரி.... நல்லநேரம் பொம்பிளைப் பிள்ளையாய்ப் போச்சு... இல்லாட்டி.... தேப்பனை முடிச்சுப்போடும்....'

ஐஸ்வர்யா பிறந்திருந்தபோது உறவினர்கள் சொன்னார்கள். ஆனால் என்ன விதியோ.... அவன் இல்லாமற்தான் போய்விட்டான்.

மனது கனத்தது.

மற்றைய நாட்களில் என்றால் கூலிவேலைக்குப் போய்விட்டு வரும் அவள் பாயிற் சரிந்தவுடனேயே தூங்கிப்போவாள். இன்றைக்கு அவளால் முடியாமலிருந்தது. ஆறு வருடங்களாய் ஒதுக்கித்தள்ளிவிட்டு வேகமாய் முன்னேறிய துன்பங்கள் எல்லாமாக ஒன்று திரண்டு தன்னைத் துன்புறுத்துவதாக அவள் உணர்ந்தாள்.

அழக்கூடாது என்கிற வைராக்கியத்தோடு இறுகிப் போயிருந்த அவளின் விழிகள் ஈரலித்தன.

அவள் தான் வைராக்கியமானவள் என்பதைப் பல தடவைகள் உணர்த்தியவள்.... அவள் அவனைக் காதலித்தபோது... உற்றம் சுற்றம் ஒன்றாகி அவர்களின் உறவை எதிர்த்தபோது - அந்த எதிர்ப்புக்களை எல்லாம் உதறி அவனையே திருமணம் செய்துகொண்டது முதல் வைராக்கியம்.

அவள் வீட்டில் நான்காவது பெண்பிள்ளை. மூத்தவர்கள் மூவரும் திருமணவாய்ப்பின்றி முதிர்ந்துகொண்டிருந்தார்கள். அவனுடைய வீட்டில் மூன்று பெண்கள். இரண்டு ஆண்களில் இவன் இளைவன். இருவரும் தாமாகவே தம் வாழ்வைத் தீர்மானித்துக் கொண்டார்கள். மூத்தவள் ஐஸ்வர்யா பிறந்து... அகலிகாவும் பிறந்து... அகலிகா ஆறுமாதக் குழந்தையாயிருந்த போதுதான் அந்தப் புயல் மையங்கொண்டது.

'சத்ஜெய....' கிளிநொச்சி மீதான பெரும்படையெடுப்பு....

ஒரு மையிருட்டுப் படர்ந்திருந்த சாமப்பொழுதில்... ஊரோடு சேர்ந்து இடம்பெயர்ந்து.... ஸ்கந்தபுரத்தில் ஒதுங்கினார்கள்....

முருகன் கோயில்... இரண்டாம் பாடசாலை... அகதிக்குடியிருப்பு என்று நாட்கள் நகர்வடைந்தன.

ஒரு அதிகாலைப்பொழுது, அவன் காலை நீட்டி கப்போடு சாய்ந்து அமர்ந்திருந்தான். அவன் முகம்

ஒட்டி உலர்ந்து.... உதடுகளும் காய்ந்து தெரிந்தன. கன்னங்களில் வளர்ந்து சுருண்டிருந்த உரோமங்கள்.... அவள்கூட மெலிந்து போய்விட்டாள். சரியாகச் சாப்பிட முடியாதிருந்தது. பிள்ளைகளுக்கு மட்டும் ஒருநேரச் சாப்பாடு எப்படியோ கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் வேலைசெய்த மில் முதலாளி வீட்டுக்கு வந்திருந்தார்.

'மிசின் பெட்டி ஒண்டு ஒழுங்குசெய்திருக்கிறன் ராசன்... ஒருக்கா அங்க உள்ள சாமானுகளை ஏத்த வேணும்..."

'ரவுண் முழுக்க ஆமி நிக்கிறானெண்டு கதைக் கினம்...."

'உதெல்லாம் கட்டுக்கதை.... ரவுணுக்கை பெடியள் தான் நிக்கிறான்கள்... நேற்றும் முருகேசற்றை வீட்டுச் சாமான்கள் ஏத்தி வந்தவையாம்....'

மரத்தின் கீழ் அடுப்பெரித்துக் கொண்டிருந்த அவளுக்கு உரையாடல் கேட்டது.

'என்ன கமலி.... மனுஷன் விட்டிட்டுப் போகாது போல...'



அவளிடம் வந்து அவளுக்கு மட்டும் கேட்கக் கூடியதாகக் கேட்டான்.

'அந்த மனுசனும் எங்கடை கலியாணத்துக்கு உதவினது.... ஏதோ யோசிச்சு செய்யுங்கோவன்...'

அவன் மரக்கொப்பில் கொழுவியிருந்த சேர்ட்டை எடுத்து உதறிப்போட்டான். ஓலைத் தட்டியில் செருகிக் கிடந்த சீப்பை எடுத்து தலை வாரினான்.

'பாணும் சம்பலும் கிடக்கு.... தரட்டே....'

'இல்ல... அந்தாள் பாத்துக்கொண்டிருக்குது... போட்டுவாறன்....'

கால்களுக்குச் செருப்புக்கூட இல்லாமறதான் போனான்.

அன்றுமுழுவதும் அவன்வரவில்லை. அவள் பதறிப் போய் அவனைத் தெரிந்த எல்லோரிடமும் விசாரித் தாள். அவனுக்கு என்ன நடந்ததென்று தெரியாமலே போய்விட்டது.

பிள்ளைகளை அணைத்துக்கொண்டு இரவுபகலாய் அழுதாள்.

உறவினர்கள் யாரும் ஏனென்று கேட்கவில்லை.

அவனுடைய அண்ணன் வீடு கொஞ்சத்தூரத்தில் இருந்தது. அவள் இரண்டு குழந்தைகளையும் கொண்டு ஒருநாள் அங்கு போனாள்... உதவிக்காக அல்ல. அவனைப்பற்றி ஏதாவது அறிந்தீர்களா என்று அறிவதற்காக....

அவர்களும் இடம் பெயர்ந்துதான் இருந்தார்கள்.

'ஆமி நிக்கிறானெண்டு தெரிஞ்சு கொண்டும்... கூலிக்காக அவனை அனுப்பிச் சாகடிச்சனி.... பிறகேன் இஞ்ச வந்தனி?... போய் எங்கையெண்டாலும் எச்சில் இலை பொறுக்கு....?

அந்த வார்த்தைகளின் கூர் அவள் இதயத்தைக் குத்திக் கிழித்தது. அவனின் அண்ணன்தான் சொன்னான். தன்னுடைய தம்பி இறந்துவிட்டானே என்கிற ஆதங்கத்தில் அந்த வார்த்தைகள் அவசரமாய்ப் பிறந்திருக்கலாம் என அவள் சமாதானங் கொள்ள முயன்றாலும்... மனது பட்டகாயத்திலிருந்து மீள மறுத்தது.

'என்ர இந்தக் கையளால எச்சில் இலை பொறுக்க

மாட்டன்... என்ன கடினமான வேலையெண்டாலும் செய்து.... என்ர பிள்ளையளைப் பாப்பன்...'

வைராக்கியத்தோடு திரும்பி நடந்தாள்.

அகதிக் குடியிருப்பில் பல பெண்கள் கூலிவேலைக் குப் போனார்கள். அவர்களுடன் அவளும் போனாள்.... சிறிதளவு கூலிதான். சமாளித்துக் கொண்டாள். கைக ளிலும் கால்களிலும் புதியபலம் புகுந்தது. மண்வெட்டி பிடித்தாள். மண் சுமந்தாள்... கல் அரிந்தாள்...

நான்கு வருடங்கள் அவளின் உறுதியோடு கழிந்தன.

மீண்டும் சொந்த இடத்துக்கு வரக்கூடிய வாய்ப்பு... தெருவுக்குத்தெரு, சந்திக்குச் சந்தி.. குருதி சிந்தி... உயிரைவிதைத்து... வணக்கத்துக்குரியவர்கள் இடங்களை மீட்டுத் தந்தார்கள்.... மீட்ட இடங்களில் பல மனிதர்களின் எச்சசொச்சங்கள்....

எலும்புக்கூடுகளில் அவனும் இருக்கலாம் என்று எண்ணி.... காவல் நிலையங்களில் எலும்புக் கூடு களைப் பார்த்து வந்தாள். அவனின் இருப்புக்கு உறுதி யில்லை. அவள் தான் தனித்துப்போனதை உள்ளூர உணர்ந்து கொண்டுவிட்டாள். அவன் போகும்போது ஆறுமாதக் குழந்தையாகவிருந்த அகலிகாவுக்கு இப் போது ஆறுவயது. ஆண்டு ஒன்றில் படிக்கிறாள். ஐஸ்வர்யா உருவத்தில் மட்டுமன்றி சில செயற்பாடுக ளிலும் தகப்பனைப்போலவே இருந்தாள்...

அவள் சொந்த இடத்துக்குத் திரும்பினாள். காணிக் குரிய வேலிகளை ஒழுங்காக அமைத்துக்கொண்டாள். அவளின் கைகளிலும் கால்களிலும் போதியளவு பலமிருந்தது. காணியைத் துப்பரவு செய்து சிறிய கொட்டில் அமைத்தாள்.

அருகே அவனுடைய அண்ணனுடைய வீடு.

வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வைராக்கியம் அவளுக் குள் நிலையாயிருந்தது. பகலில் கூலிவேலைக்குப் போனாள்... இரவில் காணிக்குள் நின்று உழைத்தாள்.

கடைக்கார மூர்த்தியண்ணர் வீட்டில்தான் தண்ணீர் அள்ளுவாள். கூலிவேலையால் வந்தவுடன் பிளாஸ்ரிக் குடங்களை எடுத்துப்போய் தண்ணீர் சுமந்து வருவாள்.

ஒருநாள்.... ஏதோ அலுப்பில் தண்ணீர் எடுக்கவில்லை. விடிய எழுந்ததும் குடத்தோடு மூர்த்தி அண்ணர் வீட்டுக்குப் போனாள். மூர்த்தியண்ணை ஏதோ அலுவ லாக வெளியேபோக சயிக்கிளை உருட்டிக்கொண்டு படலையடிக்கு வந்தவர்.... அவளைக் கண்டதும் முகம்



மாறிப்போனார். படலைக்கு அருகில் சயிக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே போனார்.

அவள் நேராகக் கிணற்றடிக்குப்போய் தண்ணீர் அள்ளினாள்.

'இஞ்ச கமலி...'

அவள் திரும்பிப் பார்த்தாள். மூர்த்தியண்ணரின் மனைவி.

'என்னக்கா?...'

"மனுசன் ஆரையோ சந்திக்கவெண்டு போகவந் தது.... உன்னைக் கண்டவுடனை திரும்பி வந்திட்டுது... நீ புருசன் இல்லாதனி.... இனிமேல் விடிய வெள்ளண முழுவியூளத்துக்கு இஞ்ச வராதை... பின்னேரத்திலை வந்து.... தண்ணி அள்ளிக்கொண்டு போயிடு...." அவள் ஒரு கணம் ஆடிப்போனாள். அவன் இறந்துவிட வில்லை. இறந்துபோனதாக எந்தத் தடயமும் இல்லை. பொருட்களை ஏற்றப்போன இடத்தில பிடிபட்டு... எங்காவது உயிருடன் இருப்பான். என்றோ ஒருநாள் அவன் வருவான் என்றே அவள் காத்திருக்கிறாள். அவன் இறந்ததாக யாரும் உறுதிசெய்யாதபோது - இவர்கள் தன்னை விதவையாகப் பார்க்கிறார்களே என்று அவள் மனது அழுதது.

ஆனால்.. அவள் கைகளுக்கும் கால்களுக்கும் வலுவிருந்தது. வீட்டின் வடகிழக்கு மூலையில் நிலை

யம் பார்த்து கிணறு வெட்டத் தொடங்கினாள். பகலில் கூலிவேலை. இரவில் கிணறு வெட்டினாள். நிலவும் நட்சத்திரங்களும் அவளுக்குத் துணையாய் நின்றன.

மூன்றுமாதகால அயராத உழைப்பு. கிணற்றில் ஐந்து அடிமட்டத்துக்குத் தண்ணீர்...

'ஏன் இப்ப தண்ணி அள்ள வாறேல்லை....'

அவள் அவர்களுக்கு தன் புன்னகையை மட்டுமே பதிலாய்க் காட்டினாள்....

அவளுக்குள் நம்பிக்கைகள் முளைத்தன. வீடிருக்கும் காணிக்குள்ளேயே தோட்டம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளைகளைப் படிக்கவைக்கவேண்டும் என்பது மட்டும் அவள் மனதில் குறியாயிருந்தது.

இதுவரை பட்ட நோவுகளும், காயங்களும், அவமானங்களும் அவளை வருத்தமுறச் செய்தாலும்... அவற்றை அவள் பொருட்படுத்தவில்லை.

ஐஸ்வர்யாவுக்கு இப்போது வயது எட்டு. மூன்றாவது வகுப்பில் படிக்கும் அவளுக்கு தைமாதம்தான் சிறிய தோடுகள் வாங்கிப்போட முடிந்தது.

அவனுடைய அடையாளஅட்டை இருந்தது. அதைக்கொடுத்து பெரிதாக்கி படம் வைக்குமாறு சிலர் கூறினார்கள். அவள் மறுத்துவிட்டாள்.

'அவர் எங்கையெண்டாலும் உயிரோட இருப்பார்.... எப்பெண்டாலும் ஒரு நாள் வருவார்.....'

கடின உழைப்பால் அவளின் உடல் முதிர்ச்சியடைந்திருந்தது. முன் நெற்றியில் கொஞ்சம் நரை முடி, கால்களில் சேற்று மண்ணின் படிவு, காய்த்துப் போன கைகள்....

அவளுக்கு தன்னைப்பற்றி எதுவித கவலையுமில்லை. ஐஸ்வர்யா இல்ல விளையாட்டுப்போட்டியில் சிறப்புப் பரிசு பெற்று வந்தபோது - பெருமையோடு அவளைக் கட்டியணைத்து மகிழ்ந்தாள்.

பிள்ளைகள் அப்பாவுக்கு என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளும் பக்குவத்தை அவள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தினாள். அவளைப் பொறுத்தவரைக்கும் அவளுடைய வாழ்க்கையில் பிசிறில்லை. கடந்தமுறை பெய்த சிறுமாரிக்குக் கூரை ஒழுகியது.

இரண்டுவாரங்கள் அவளின் கைகளும் கால்களும் மிளகாய்த் தோட்டத்தில் இயந்திரமாகின....

வீட்டின் பழைய ஓலைகளைப் பிடுங்கிவிட்டு புதிய தகரங்களை அவள் போடுவித்தாள்.... பிள்ளைகள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காய் அவளின் வியர்வை வீட்டுக் கூரையாய்.... குழந்தைகள் மகிழ்ந்தார்கள்.

காலையில் எழுந்து அவள் கிணற்றடியில் பல் விளக்கிக்கொண்டிருந்தாள். பிள்ளைகளுக்கும் வாளிகளில் தண்ணீர் நிரப்பவேண்டும்.

அடுத்தவீடு அவனுடைய அண்ணன் வீடு. நிறைய வாழை நட்டிருந்தார்கள். வளவு சோலையாயிருந்தது. பேச்சுக்குரல்கள் கேட்டன. அண்ணன்காரனும் மனைவியும்,

'கமலி வீட்டுக்கு புதுசா கூரைபோட்டிருக்கிறாள்.... இவ்வளவு காசு எப்பிடி உவளுக்குக் கிடைக்குது...'

'உதுகூட விளங்கேல்லையே உனக்கு?.... மிளகாய்த் தோட்டக்காரன்தான் அள்ளி அள்ளிக்குடுக்கிறான்.... இவளும் அவன் காணாமபோயிட்டானெண்ட கவலையில்லாமல் தோட்டக்காறனோட இருக்கிறாள்....'

அவள் ஒருகணம் ஆடிப்போனாள்.

'என்ர உடம்பை வருத்தி... என்ர வியர்வையை ஊத்தி நான் உழைச்ச உழைப்புத்தான் இது....' அவள் இருகைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு கீழே இருந்தாள்.

உதவிகேட்டபோது உதவாமல் அவமானப்படுத்தியவர்கள் - தான் கடினப்பட்டு உழைத்து உயர்ந்தபோது பாராட்டவும் முடியாமல் - நயவஞ்சகத்தனமாய் பேசுவது அவளுக்கு வேதனையளித்தது.

ஆனால்.... இரவு முழுவதும் ரணமாய் வலித்த அந்தச் சொற்கள் பொழுது புலர்ந்தபோது... அவளை வருத்தவில்லை. வழமைபோன்று அவளுக்குள்ளிருந்த வைராக்கியம் அவளை உஷாராக்க.... அவள் புது மனுஷியாய்.. காய்த்துப்போன கைகளை வீசி நடந்தாள்.



# காவல் தெய்வம்

ஆர்.கே குப்பிளான்

பகல் மறைந்து இருள் கவிந்திருந்தது. வானம் மட்டுமே போர்வையாகி மண்ணை மறைத்திருந்தது. நிசப்தமான சாமம்.... அது எனக்கு முன் எப்போதும் பழக்கப்படாத இடம். இன்று எனது பூர்வீக பந்தமாக மாறிவிட்ட நிலமே அதுதான்! எனது வாழ்நாளில் இப்படி ஒரு பொன்விளையும் பூமியை நான் தரிசிப்பேன் என்று நினைக்கவில்லை. ஆனால் காலம் இட்ட கட்டளைப்படி இன்று.....

சாமம்தாண்டி நடுநிசியைத் தொட்டபோது நிலவு காலிக்கத் தொடங்கியது. பறம்பு மலையில் பாரி மகளிருடன் கூடியிருந்து குலாவி மகிழ்ந்து உண்ட பாற்சோறினை நினைத்துக்கொண்டேன். எங்கள் ஊரில் நிலவின் ஒளியில் நாம்....முன்னைய நாள் நினைவுகள் வந்து என்னுள் எட்டிப்பார்த்தன.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை எங்கும் சுற்றி நோட்டம்விடுகிறேன்.... மின்மினிப்பூச்சிகள் என்னை எள்ளிநகையாடின. என்ன பார்க்கிறாய் என்று கண்ணைச் சிமிட்டியபடி கேட்பதுபோல இருந்தது.

காற்சலங்கை ஒலிபோலச் சில்வண்டு எங்கோ தொலைவில் கத்தி ஓய்ந்தது. பனித்தூறலில் தலை நனைந்திருந்தது. இருகைகளாலும் தலையைத் தடவிப் பார்க்கின்றேன். என் கட்டளை இன்றியே கைகள் தோளில் இருந்த துவாய்த்துண்டை எடுத்துத் தலையைத் துவட்டின.

சின்னானின் காவற்குடிலில் ஓர் பஞ்சுவைத்த ஜாம் போத்தல் விளக்கு எரிவது தெரிந்தது. என்னுடைய ரோச்லைற்றை எடுத்து அடித்து என் வயலைச் சுற்றிக் கண்களால் காவல்செய்கின்றேன். கைப்பெருவிரல் அழுத்தியில்பட ரோச்லைற் அணைந்தது.

நிலவின் ஒளியில் என் வயலின் நெற்கதிர்கள் நாணித்தலைகுனிந்து வெக்கி மண்ணை நோக்கிக் கவிழ்ந்திருந்தன. நான் மட்டும் என் குடிலில்.... பரணின் கீழே உற்ற நண்பன் 'வீரா' படுத்துக்கிடந்தது. அருகில் எரிந்துகொண்டிருந்தன இரண்டு பாலைக்குற்றிகள்.

0 0 0

சாமம் கழிந்துவிட்டது....நான் பரணில் கண் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தேன். 'வீரா' சிணுங்கும் சத்தம் கேட்டது. எனது குட்டித்தூக்கம் இப்போது கலைந்து விட்டது.

"என்ன வீரா... டேய் ஏன் குலைச்சனி... சும்மாபடு..." நாயோ விட்டபாடில்லை. இப்போது நாய் உக்கிர மெடுத்துக் குரைத்தது. எனது வயலின் தென்பகுதி காடும் குளக்கட்டின் ஓர் கரையும் இணைந்த பகுதி... அடிமேல் அடிவைத்து மெல்ல நடக்கின்றேன். "இது யானையாய் இருக்காது" என்மனம் அடித்துக் கூறியது.

நாயும் என்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. லைற்றை அடித்தேன். ..தெற்குப்புற வேலியின் கொப்பு நேரியை மாடுகள் உடைத்து அதர்வைத்திருந்தன. ஆனால் மாடுகளைக் காணவில்லை. அதன் கொம்பு கள்கூட எனது லைற்றில் மினுங்கவில்லை. அவை எங்கேயோ மறைந்துவிட்டனபோலும். இப்போது பாலையின் பெரிய அலாக்கு ஒன்றைத் தூக்கி அதரை மறித்துக் கொப்பு நேரியைச் சீர்செய்தேன்.

காவற்கொட்டிலுக்குத் திரும்பி வந்தபோது உடல் வியர்த்துக்கொட்டியது. என் நெஞ்சு படபடத்தது. நாய் இப்போது முன்பைவிட உக்கிரமாக் குரைத்தது. எனக்கு நன்றாக விளங்கிவிட்டது இது பன்றியாகத்தான் இருக்கவேண்டும் என்பது. "இது பண்டிதான்... இது பண்டிதான்" என மனம் அடித்துச் சொன்னது.

இடியனைத் தூக்கித் தோளில் வைத்தபடி வயலைச் சுற்றினேன். எனக்கு பயமாக இருக்கின்றது. வெடிச் சத்தம் மாடுகளை வெகுண்டு எழச்செய்தால்...? வேறு

வழியும் எனக்குத் தெரியவில்லை...வயலின் வடக்கு மூலையில் முற்றிய கதிர்களைப் பன்றி பதம்பார்த்துக் கொண்டிருந்தது. இடியனைத் தடவிப்பார்க்கிறேன். நிலவின் ஒளியில் பன்றியின் உருவம் தெளிவாகத் தெரிந்தது. குனிந்து முழந்தாள் பதிந்து இருந்து.... நாய் அமைதிகாத்தது. ..எனது வலதுகையின் ஆட்காட்டி விரல் இடியனின் விசையைத் தொட ...இடி இறங்கிப் பெருஞ்சத்தம் ...ஒரு திமிறல்... உறுமல்... எழுந்து அடங்கி பன்றி இறந்தது. எனது கன்னிக்குறி தப்பவில்லை. என் கணக்கும் பிழைக்கவில்லை.

"பண்டியைச் சுட்டால் உடனை கிட்டப்போகக்கூடாது. காயப்பட்ட பண்டி ஆளையும் வெட்டிக் கொண்டு போடும்"

எப்பவோ ஒருநாள் கனகன் சொன்னது என் மனதை நெருடியது. கனகன் சிறந்த வேட்டைக்காரன். குறி தப்பாமல் சுடுவான். அவனுக்கு வலதுகாலில் பன்றி வெட்டினகாயம்.... நடக்கும்போதும் காலை அகலமாக வைத்து அசிங்கமாகவே நடப்பான்.

எனக்கு இப்போது பயமாக இருந்தது. "எதுக்கும் விடியப் பாப்பம்" என நினைத்தபடி விடியக் கருக்கல் போடவேணும் என்ற எண்ணம் மனதில் ஓட நெருப்பை அணையவிடாமல் மூட்டிக்கொண்டிருந்தேன்.

எனது பின்பக்க வயலின் காட்டுப் பகுதியில் யானை முறிக்கும் சத்தம் கேட்டது. "எல்லாம் சர்வநாசம்தான்" என எண்ணியபடி நெருப்புக்குற்றி ஒன்றைக் கையில் சுழற்றியபடி வேலியை நெருங்கினேன். ரோச்லைற்றை அடித்து நோட்டம்விட்டேன்..... அமைதி.... நிசப்தம்.... மௌனம்...

அது நின்று நிலைக்கவில்லைச் சிறிதுநேர இடைவெளிக்குள் வயல் அவைக்கையில் சலசலப்புக் கேட்டது. "இது யானை மாதிரித் தெரியவில்லையே!" என நினைத்தபடி நிலவின் வெளிச்சத்தில் அத்திசையை நோக்கினேன். இப்போது.... எனக்கு வியர்க்கத் தொடங்கியது..... மூச்சுத் திணறுவதுபோல ஓர் உணர்வு..... கொட்டும் பனியிலும் வியர்வை முகத்தில் ஒழுகியது.

வரிசையில் பலர் என்னை நெருங்கி வந்தனர். கையில் இரும்புக் கருவிகள் நிலவின் ஒளியில் மினுமினுத்தன. "கடவுளே ஏன் இவங்கள் வந்தவங்கள்" என நான் எண்ணும்போதே என்னை நெருங்கிய ஒருவன் தமிழில்...

"ஆரடா அவன்" என்றான்.

மொழிப் பிரச்சினை தீர்ந்தது. தெளிவாக.... மிகவும் தெளிவாக.... பணிவாக....

"நான்தான் ஐயா!" என்றேன்.

"ஆரடா இஞ்சை சுட்டுக்கேட்டது" என்றான் அவன்,

"நான்தான் ஐயா!"

"உனக்குச் சுடக்கூடாது எண்டு தெரியாதோ?"

"ஐ... யா..." வார்த்தைகள் வரமறுத்தன. தொண்டைக்குள் ஏதோ அடைத்துக்கொண்டது போன்ற பிரமை.

"உன்னைக் கூட்டிக்கொண்டுபோய் விளங்கவேணும் வா" என்றான் அவன்.

மற்றவர்கள் சிங்களத்தில் ஏதேதோ பேசிச் சிரித்தனர். என்னைத் திட்டுவதுபோல இருந்தது எனக்கு.

"ஐயா! விடியட்டும் நான் எங்கை வேணும் எண்டாலும் வாறன்.'' என் கூற்றை எவரும் பொருட்படுத்தவில்லை.... நான்....

0 0 0

என்ரை வயல் என் கண்முன்னாலை விரிந்து கிடந்தது. "நான் விடியப் பிணமாய்க் கிடப்பேன். என் குடிலில்.... அப்பாவைக் காணேல்லை எண்டு என் மகன் வருவான்.... ஐயோ! எல்லாருமாய் என்னைச் சுத்தியிருந்து ஒப்பாரிவைச்சு அழுவினம்...."

"என்ரை மனிசிதான் பாவம்.... சின்னவயசிலை விதவையாய்" கடவுளே நினைக்கவே பயமாய் இருந்தது.

"ஐயோ! கடவுளே குளத்தடிப் பிள்ளையாரப்பா! என்ரை மனிசி பிள்ளையளுக்கு ஒரு வழிகாட்டு!" எண்ண அலைகள் என்வீட்டைச் சுற்றி வட்டமிட்டன.

0 0 0


இப்போது என்னால் தெளிவாகக் கேட்கமுடிகின்றது. பெரிய சத்தம்....! அது யானைதான்!!! வயலின் ஒதியமரம் முறிகின்றது.... இப்போது எனக்கு நன்றாக விளங்கிவிட்டது அது அலியன் யானைதான் என்பது. இப்போது யானை எனது வயலின் கொப்புநேரியை உடைத்து வயலில் காலடி எடுத்து வைக்கின்றது.... என்னால் என்னதான் செய்யமுடியும்....?

வந்தவனில் ஒருவன் தனது இயந்திரத் துப்பாக்கியால் யானையை நோக்கிச் சுடுகின்றான். ஒன்றிரண்டு சன்னங்கள் யானையைத் தைத்திருக்க வேண்டும். யானை உக்கிரம்கொண்டு பிளிறியது. வீறுகொண்டு அவர்களைத் துரத்தியது.... அவர்கள் மறையும்வரை.... நிலவின் ஒளியில் அதன் உருவம் தெரியும்வரை.... உற்றுநோக்குகின்றேன்.

நிலம் மெல்ல வெளிக்கத்தொடங்கியது. என் எல்லைவரை எங்கும் எவரையும் காணோம். விடிவை நோக்கி.... வானம் தயார்நிலையில்.....

# விரியும் போர் மருத்துவம்

● தூயவன்



வெடிமருந்தாலான வெடிபொருட்கள் சுமந்த படகொன்று கடலலைகளை ஊடறுத்துப் பயணிக்கின் றது. கடற்கரும்புலிகள் இருவர் படகோட்டிகளாகப் பணிபுரிகின்றனர். அதில் விடுதலைப்புலிகளின் இராணுவ மருத்துவர்கள் இருவரும் காணப்படுகின்றனர். வானத்து மின்மினிப்பூச்சிகளின் அழகும், பகைப் படகுகளை அவாவும் எச்சரிக்கைப் பார்வைகளும், ஈரம் கலந்த கடற்காற்றின் குளிர்மையும், படகில் இருக்கும் ஆயுதக் களஞ்சிய நினைவும் என அனைத்தும் சேர்ந்து உருவாக் கும் சூழல் அவர்களிடையேயான வார்த்தைப் பரிமாற்றத் தைக் குறைத்துவிடுகின்றது. தென்தமிழீழத்தின் போரிடும் வலுவை அதிகரிக்க இவ்வாறான பயணங் கள் நடைபெறுவது வழமையானது. எதிரிக் கடற்படை யால் இடைமறிக்கப்படுகையில் சண்டைகள் வெடிப்ப தும், பெரும்பாலும் படகுடன் சேர்ந்து இவர்கள் வெடிப் பதுவும் பரிச்சயமானதுதான்.

பகைவனின் கழுகுப்பார்வைகளுக்கு கண்ணா மூச்சி காட்டி அப்படகு வாகரை வந்துவிட்டது. 1990இல் தாக்குதல் ஒன்றின்போது அருண்மொழியின் வலதுகால் முழங்காலிற்குக் கீழாகச் சிதைவடைந்தது. மேலதிகச் சிகிச்சைக்காக படகின்மூலம் அவன் யாழ்ப்பாணம் கொண்டுசெல்லப்பட்டிருந்தான். இப்பொழுது பத்து வருடங்களின் பின்னர் மீண்டும் வாகரைத்தரை தொடுகின்றான். அவன் தனது அங்கமொன்றை இழந்திருக் கின்றான். எனினும் கள, தள மருத்துவ அறிவையும் அனுபவங்களையும் உள்வாங்கியிருக்கின்றான். பத்துவரு டங்களின் முன்னர் குறிப்பிட்ட சத்திரசிகிச்சைகள் செய் வதற்கான ஆளணி, உபகரண வசதிகள் இங்கு இருக்கவில்லை. இதனை மேம்படுத்தவேண்டுமெனும் தேவையுடன் கூடிய அவா இவனுள் குடிகொண்டுள் ளது. தங்களின் வருகை உறுதிப்படுத்தப்படுவதற்குக் கரும்புலிப்படகு பயன்படுத்தப்பட்டதும், வெடிபொருட் கள் மேலிருந்து, இராப்பொழுதில் பகை உலாவும் அலைகடல் தாண்டியதும் பெருமை கலந்த வேறுபட்ட உணர்வைக் கொடுக்கின்றது.

வாகரையிலிருந்து கொழும்புவீதி கடந்து மட்டக்களப் பினுள் நுழைவது என்பது கடினமானது. இராணுவ நடவடிக்கை ஒன்றிற்கு ஒப்பானது. அதற்கான தயார் படுத்தலைச் செய்வதற்கு சில நாட்கள் தேவைப்படும் அவ்விடைவெளியில் திருமலையில் கடமையாற்றும் போராளி நண்பன் ஒருவனைச் சந்திக்கச் செல்கின்றான். ஐந்து நாட்கள் ஓய்வில் சென்றவனை உள்ளுணர்வு எச்சரிக்கின்றது. இரண்டாம் நாளே வாகரை திரும்பு கின்றான். இவன் வந்தடைந்த சிறிதுநேரத்தில் காய முற்ற போராளிகள் இருவர் அங்கு கொண்டுவரப் படுகின்றனர். வேறு பணி நிமித்தம் சென்றவர்கள் காட்டிக்கொடுப்பொன்றினால் இராணுவத்தினரின் பதுங்கித்தாக்குதலுக்கு உள்ளானார்கள். இங்கிருந்த இவர்களின் மருத்துவ முகாம் ஏற்கனவே கலைக் கப்பட்டிருந்தது. இராணுவம் அப்பகுதி நோக்கி முன்னேறு வதற்கான சாத்தியங்கள் தென்பட்டது. ஆதலால் மருத்துவ வளங்களைப் பகுதிகளாகப் பிரித்து காட்டுப் பரண்களில் ஏற்றியும் கண்ணாப் பற்றைகளுக்குள் புகுத் தியும் விட்டார்கள்.

மேற்படி பொருட்களை மீள எடுத்து ஒழுங்கமைப் பதற்கு பல மணித்தியாலங்கள் எடுக்கும். எனினும் அதனைச் செய்தே ஆகவேண்டும். அதற்கான கட்டளை களைப் பிறப்பித்துக்கொண்டிருக்கின்றான். காயமுற்றுச் சென்றவன் கடமையாற்றுபவனாக வந்திருக்கின்றான். தனது இப்பிரதேசத்திற்கான முதல் மருத்துவ முயற்சி பூரண வெற்றியடையவேண்டும். அதன்மூலம் போராளிக ளுக்குத் தன்னில் பூரண நம்பிக்கை ஏற்படவேண்டும் எனவும் எண்ணினான். அதனால் என்னவோ தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதீத கவனம் செலுத்து வது வெளிப்படுகின்றது.

காயக்காரர்களைப் பரிசோதிக்கின்றான். நிலைமை சிக்கலானது என்பதை உணர்கின்றான். ஒருவனின் வலது மேற்கை சிதைந்துள்ளது. அவனிற்கு குருதிக் கலன்கள் திருத்தும் சத்திரசிகிச்சை செய்யவேண்டும். மற்றவனுக்கு வயிற்றில் பலகாயங்கள் காணப்படு கின்றன. வயிற்றறை பெருத்தும், முகம் வெளிறியும் தென்படுகின்றது. நாடித்துடிப்பு வேகம்கூடியும் பலவீன மானதாகவும் காணப்படுகின்றது. அவனிற்கு உள்ளகக் குருதிப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்பதை அனுமானிப் பதில் சிரமம் இருக்கவில்லை. சாதாரண சூழ்நிலையில் இவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கு, துறைசார் நிபுணத்துவமும், நவீன வசதிகளை உள்ளடக்கிய சத்திரசிகிச்சைக்கூடமும், பிரத்தியேக உபகரணங்களும்

தேவைப்படும். இங்கு இருக்கும் வளங்களை அதி உச்ச பயன்பாட்டிற்கு உட்படுத்தவேண்டும். இது போர்க்காலங்கள் கற்பிக்கும் பாடங்களில் ஒன்று. சிலமைல் தொலைவில் நிற்கும் தன்னுடன் வந்த பெண்போராளி மருத்துவரையும் அவ்விடம் வரச் சொல்லிச் செய்தியனுப்புகின்றான்.

இரு காயக்காரர்களுக்கும் திரவ ஊடகம் ஏற்றி மீள உயிர்ப்பளித்தலைத் தொடர்கின்றான். ஏனையவர் களைக் கொண்டு வீடொன்றைச் சத்திரசிகிச்சைக் கூடமாக மாற்ற முயற்சிக்கின்றான். அங்கொன்றும் இங்கொன்றுமாக பல திசைகளிலும் பிரித்து மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பொருட்களை எடுத்துவரப் பணிக் கின்றான். அவற்றைக் கொண்டுவந்து சேர்க்கச் சில மணித்தியாலங்கள் தேவைப்படும். அதுவரை இவர்க ளின் உயிரைத் தக்கவைக்கவேண்டும்.

குறித்த மருத்துவப் பொருட்கள் வந்து சேரச்சேர சத்திரசிகிச்சைக்கூடம் தயாராகின்றது. முறைப்படி தொற்றுநீக்கும் உபகரணம் அங்கு இல்லை. மாற்றீடாகப் பானையொன்றை எடுத்து, அதனுள் நீர்விட்டு, முக வாயில் துணிகட்டி, அதன்மேல் தேவையானவற்றை வைத்து, நீராவியில் அவித்துத் தொற்று நீக்குகின் றார்கள். குருதியை உறிஞ்சி அகற்றப் பயன்படும் 'சக்கர்' எனும் கருவி வேலை செய்ய மறுக்கின்றது. அதனைத் திருத்துவதற்கும் நேரம் ஒதுக்கவேண்டி யுள்ளது.

காயக்காரர் இருவருக்கும் குருதி ஏற்றவேண்டும். ஆனால் பொருத்தமான இரத்தப்பிரிவு உடையவர்க ளாகத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய ஆய்வுகூட வசதிகள் இல்லை. எனினும் இரத்தப்பிரிவு தெரிந்தவர்களின் குருதி நீர்ப்பாயத்தைப் பிரித்தெடுத்துப் பாவிப்பதன்மூலம் தேவையான குருதிப்பிரிவை இனங்காணலாம். நடை முறை மற்றும் கோட்பாட்டுச் சிக்கல்கள் நிறைந்த இம்முறை முன்னைய போர்க்காலங்களில் வாய்ப்புப் பார்க்கப்பட் டது. மேற்படி முறையைப் பயன்படுத்தி இரத்த மாற்றீடு செய்ய முடிவெடுகின்றார்கள். ஆனால் அதற்குத் தேவையான பரிசோதனைக் குழாய்கள் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக பிளாஸ்ரிக் 'ஸ்ரிஞ்சின்' முனையை உருக்கி அடைத்து பரிசோதனைக் குழாய்களாக மாற்றுகின்றார்கள். அப்பொழுது அவசியம் தேவையான மையநீக்கி விசைக்கருவியும் கொண்டுவரப்படுகின்றது. மேற்படி மாற்றீடுகளைப் பயன்படுத்திக் காயக்காரர்க ளுக்கு ஏனைய போராளிகளிடமிருந்து பொருத்தமான குருதி எடுத்து ஏற்றப்படுகிறது.

வசதிக்குறைவுகள் உள்ள ஊர்மனை ஒன்றில் சத்திரசிகிச்சைக்கூடம் ஒன்று உருவாகிவிட்டது. ஆனால் இருவருக்கும் ஒரேநேரத்தில் சிகிச்சையளிக்க முடியாது. முதலில் யாரைச் சிகிச்சைக்காகத் தெரிவு செய்வது என்பது பெரிய கேள்வியாக எழுகின்றது. உணர்வுரீதியாகச் சிந்திப்பதைத் தவிர்த்து, போரியல் விதிகளின் பக்கம் நின்று சிந்திக்கின்றார்கள். கைக் காயக்காரனுக்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் ஒரு போராளியை மீளப்பெறும் சந்தர்ப்பம் உண்டு. வயிற்றுக் காயக்காரனுக்கு திருப்திகரமான சிகிச்சை செய்தாலும் உயிர் தப்புவதற்கான சாத்தியக்கூறு ஒப்பீட்டளவில் குறைவு. மேலும் இவனின் உடல்நிலை மயக்கமருந்துக்குத் தாக்குப்பிடிக்கக்கூடியவாறு மேம்படுத்தப்படுவதற்கு இன்னும் சிறிதுநேரம் மீள உயிர்ப்பளித்தல் செய்ய வேண்டும். மேற்படி காரணங்களால் முதலாமவனை சிகிச்சைக்கு முதலில் உட்படுத்துவது எனும் முடிவிற்கு வருகின்றார்கள். இவர்கள் காயமடைந்து அண்ணள



வாக ஆறு மணித்தியாலங்கள் ஆகிவிட்டிருந்தது. தொடர் தாமதம் கூடாது குருதிக்கலன்களை அழுத்திப் பிடிக்கும் உபகரணங்கள் இல்லாமல் குறித்த சிகிச்சை யைச் செய்வது கடினமானது. எனினும் அவ்வப்போது மாற்றுவழிகளும் தோன்றும் எனும் அனுபவப் பாடத்தி னூடாகச் சிகிச்சையை ஆரம்பித்துவிட்டனர். சத்திரசிகிச் சைக்குப் பின்னான பராமரிப்பு வேலைகள் மிகவும் கவனமாகச் செய்யப்படவேண்டும். அதற்கு உடல், உளக் களைப்பற்ற அனுபவம் மிக்க ஒரு மருத்துவப் போராளியாவது இருக்கவேண்டும். ஆதலால் மேற்படிக் காயக்காரர்களுடன் சென்று திரும்பிய மருத்துவப் போராளியை ஓய்வெடுக்க அனுப்பிவிட்டார்கள். பல வகையான சிரமங்கள் காணப்படுகின்றன. எனினும் முன்னைய கள அனுபவங்களில் இருந்து இது வித்தி யாசமான அனுபவமாக உள்ளது. விமானக் குண்டுவீச்சு, எறிகணைவீச்சு, துப்பாக்கிச் சத்தங்கள் போன்ற நேரடிப்

போர் அழுத்தங்கள் இங்கு இல்லை. எனினும் இப் பிரதேசத்தை எதிரி தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்கான இரா்ணுவநடவடிக்கையை எப்பொழுதும் ஆரம்பிக்கலாம் எனும் மறைமுக அழுத்தம் இருக்கவே செய்கின்றது.

முதலாவது சத்திரசிகிச்சை முடிவடைய மதியம் கடந்துவிட்டது. உடனடியாக மற்றவனுக்குச் சிகிச்சையைத் தொடங்கவேண்டும். தசைநார்களைத் தளர்வடையச் செய்யும் மருந்து கைவசம் இல்லை. இருக்கும் மயக்க மருந்தில் வயிற்றறையைத் திறந்து சிகிச்சை செய்வது என்பது மிகவும் கடினமானது. காற்றடித்த நீளமான பலூனை நீரினுள் அமிழ்த்துவது போன்றது. அது நீரிற்கு வெளியே வர முயற்சிப்பது போல் உணவுக்கால்வாய்த் தொகுதியின் பெரும்பகுதி வெளியில்வர எத்தனிக்கும். எனினும் சிகிச்சையை ஆரம்பிப்பதற்கு அதிகம் யோசிக்கக்கூடாது. ஏனெனில் இவ்வாறான சம்பவம் ஒன்று திருமலைக்காட்டில் நடைபெற்றது. அதன்போது முடிவெடுக்கப்பிந்தியதால் ஒரு போராளி உயிரிழந்தான். மேற்படி படிப்பினையின் படிதான் வேகமாகச் செயலில் இறங்குவதே சிறந்தது எனும் முடிவிற்கே வருகின்றான். சிகிச்சை செய்தபின்னர் இவன் இறந்தால் முயற்சித்த திருப்தியாவது மிஞ்சும் எனப் பலவாறு எண்ணியவன் செயற்படத் தொடங்குகின்றான்.


காயமுற்றவனுக்கும் அவனது நிலைமை விளங்கியிருக்கவேண்டும் மருத்துவனைத் தன்னருகில் குனியச் சொன்னவன் காதோடு ஏதோ செய்திகளைச் சொல்கின்றான். இவன் மெல்லத் தலையசைத்தவண்ணம் கூர்ந்து செவிமடுக்கின்றான். "அதற்கு அவசியம் வராது நீங்கள் சுகமடைவீர்கள்" எனக் கூறுகின்றான். மயக்கும் மருத்துவரை நிமிர்ந்துபார்க்கின்றான். அவள் மருந்தை மெதுவாக நாளத்தினூடு குருதியோட்டத்தினுட் செலுத்துகின்றாள். காயக்காரன் மெல்லமெல்ல தனது சுய நினைவை இழக்கின்றான். வயிற்றறையை நிதானமாகவும் வேகமாகவும் வெட்டித் திறக்கின்றான். எதிர்பார்த்ததாக இருந்தபொழுதிலும் இருவருக்கும் அதிர்ச்சி ஏற்படவே செய்கின்றது. வயிற்றறைக்குழி இரத்தம் நிரம்பிக் காணப்படுகின்றது. அதில் பெரும்பகுதி உறைந்துவிட்டது. அதனை அகற்றும்வேளை, உயிர்ப்பான குருதி வெளியேற்றத்தைச் செய்யலாம். உரிய உபகரண வசதிகள் இல்லாததால் இக்காயக்காரன் சத்திர சிகிச்சை மேசையிலேயே பார்த்திருக்க உயிரிழக்க வேண்டிவரலாம்.

சில கணங்களெனினும் கடுமையாக யோசித்தவன் மெல்ல உறைந்த குருதியை அகற்றுகின்றான். எதிர்ப் பார்த்தவாறு பீறிட்டுப்பாயும் குருதியால் மீண்டும் வயிற்றறைக்குழி நிரம்புகின்றது. சில கண இடைவெளியில் சேதமடைந்திருந்த பிரதான குருதிக்கலனை அடையாளம் காண்கின்றான். வேகமாக எட்டி அதனைப்பிடித்து அழுத்துகின்றான். குருதிப்பெருக்கின் வேகம் தளர்கின்றது. கலன்களால் விட்டுவிட்டு வெளிவந்த குருதியை ஒற்றி எடுகின்றான். சேதவிபரங்களை அவதானிக்கின்றான். மேற்கொள்ளவேண்டிய சிகிச்சைகளைக் கணிக்கின்றான். மண்ணீரல் சேதமடைந்துவிட்டது. கல்லீரல் சிறுசேதம். பெருங்குடலிலும் ஆங்காங்கே சிறுசேதங்கள் காணப்படுகின்றன. சிறுசிறு குருதிப்பெருக்குகளையும் நிறுத்தியவன். மண்ணீரலை அகற்றுவதில் ஈடுபடுகின்றான்.

எதிரில் உதவிக்கு நின்றவளின் அனுபவக்குறைவால் சிரமங்களைச் சந்திக்கின்றான். எனினும் வன்னிக் களங்கள் கொடுத்த மருத்துவப் பயிற்சி தடைகள் தாண்ட உதவுகின்றது. பெருங்குடலின் ஒரு பகுதியை வெட்டி அகற்றுகின்றான். சிறுசிறு சேதங்களை நிதானமாகத் திருத்துகின்றான். இவன் தேவைக்கு அதிகமான நிதானம் எடுத்து நேரத்தைச் செலவழிக்கின்றானோ என மயக்கும் பெண் மருத்துவர் சந்தேகிக்கின்றாள். "BP இன்னும் பிக்கப்பாகவில்லை" என நாகரீகமான முறையில் சுட்டிக் காட்டுகின்றாள். அதனை ஆமோதிப்பதுபோல் தலையசைத்தவன் கல்லீரலில் ஏற்பட்டிருந்த கிழிசலைத் சரிசெய்கிறான். சத்திரசிகிச்சையின் பிரதான பகுதி முடிவிற்கு வந்திருந்தது. நிமிர்ந்து பார்க்கின்றான். நேரம் மூன்று மணிகளினுள் கரைந்துவிட்டிருந்தது. நீண்ட நேரம் குனிந்து நின்றவன் பொய்க்கால் பொருத்திய பகுதியிலும் நாரிப்பகுதியிலும் பாரிய வலியை உணர்கின்றான். அதனை வெளிக்காட்டாமல் உறுதித் தன்மையற்ற சந்தேகத்துக்கிடமான பெருமூச்சொன்றை வெளிவிடுகின்றான். திரவஊடகம் விட்டு வயிற்றறையைக் கழுவி வெளியேற்றியவன் அதனை மீண்டும் மூடித்தைக்கின்றான்.

அருகில் மட்டைகள் மூலம் இலையான் கலைக்கும் இருவர் வீசும்காற்று சற்று ஆசுவாசத்தைக் கொடுகின்றது. சத்திரசிகிச்சைக்குப் பின்னான பராமரிப்பை மிகவும் சரிவரச் செய்யவேண்டும். ஆதலால் தூரத்திலுள்ள அனுபவம் வாய்ந்த பிரதம மருத்துவரிடம் ஆலோசனை கலக்க முற்படுகின்றான். சக்திவாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிமூலம் தொடர்பு எடுக்கின்றான். சங்கேத பாசையில் காயக்காரர்களின் நிலைமையையும், செய்யப்பட்ட சிகிச்சைகளையும் விளக்குகின்றான். விபரங்களைக் கேட்டறிந்தவர் தனது கருத்துக்களையும் சொல்கின்றார். அத்துடன் "இவ்வளவும் செய்தனீங்கள், மிகுதியையும் சரியாகச் செய்வீர்கள். நீங்களாகவே முடிவுகளை எடுத்துச் செயற்படுங்கள்" எனவும் கூறிமுடிக்கின்றார். மேற்படி கூற்றினூடாகத் தொடர் விடுதலைப்போரின் பயணத்திற்குத் தேவையான தத்துவம் ஒன்றை ஞாபகமூட்டியதாகவே இவன் கருதுகின்றான். அடுத்தசில நாட்களில் காயக்காரர்களை இடம்மாற்றவும், மருத்துவ வளங்களை மீண்டும் பிரித்து வளமறைப்புக்களினுள் புகுத்திவிடவும் மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் திட்டமிடுகின்றான்.

எங்கள் நிலத்தின் இனிய அழகுகளை
உங்களுக்குச் சொல்லும்
உவமைக் குவமைசொல்ல
வார்த்தைகளே இல்லை!
மர்ம மினுக்குகளும்,
நாகரிகம் என்று நடிக்கும் புதுமைகளும்,
இடாம்பீகம் காட்டும் ஆரவாரச் சோடனையும்,
படாபடோபப் போலிக் பளபளப்பும்,
என்நிலத்தில்
இருக்காது!
எங்கும் இயற்கை அழகுகளும்,
நிரைநிரையாய் நிற்கும் நிஜமும், பழமைகளும்,
எளிய நடைமுறையும்,
இறையோடு ஒன்றிநிற்கும்
வழிமுறையும், வேடமற்ற வாழ்வும்,
போலியான
நாகரீகந் தன்னை நம்பிச் சுயம் இழந்து
போகா விழுமியமும்,
புதுமையோடு உறவுபூண்டும்
மண்ணோடு இன்றுமொட்டும் வரலாறும்,
எம்நிலத்தின்
வண்ணங்களாய் நிற்கும்!
எனக்கென் நிலவாழ்வே
பிடிக்கிறது,
நவீன நாகரிகப் பெருமை சொல்லித்
தடல்புடலாய் இயந்திரமாய்த் தத்தளிக்குஞ் சிறைவாழ்வோ
வெறுக்கிறது,
நானென் நிலவாழ்வைக் காதலித்தேன்!
எந்தன் நிலவாழ்வில்
இரண்டொன்றாய்க் குறைபாடு
இருந்திடினும் அதையே இறுதிமட்டும் விரும்பிடுவேன்!
அந்தக் குறைகளையும் அகற்றக்...
கவிவரைவேன்!
எந்தன் நிலத்தின் இயல்புவாழ்வைப் போலத்தான்
எந்தன் கவியும் இயல்பை அவாவிற்று.
சோடனை, வியப்பூட்டல்,
சொற்சிலம்பம் போன்றவெறும்
சிலுசிலுப்புக் களையன்றி எளிமையாய் உயிர்ததும்பி,
விலகாதோர் விழுமியத்தின்
வேரில் செழித்தபடி,
சீவிக்க வேண்டுமெனுந் தெளிவோடு வாழ்கிறது.
□□




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஈழத்து இலக்கியத்தின் புதுவரவாகிய
போராட்டப் படைப்புக்களைத் தாங்கி வந்த
**வெளிச்சம்** இதழ்கள்
பதின்மூன்று ஆண்டுகளின் தொடர்ச்சியான வருகையில்
**வெளிச்சம்** பதிவு செய்த
போராட்ட கால எழுத்துக்கள்

இன்னும்
**விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடுகள்**

இவற்றுடன்
**திருமதி அடேல் ஆன் அவர்கள் எழுதிய**
**சுதந்திர வேட்கை**
(போராட்ட அனுபவ தொகுப்பு)
**அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய**
**விடுதலை**
(கட்டுரை தொகுப்பு)

எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள

**விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகம்**
*நடுவப்பணியகம்*

# வெளிச்சம்

## திருகோணமலையில் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் நடத்திய மூன்று விழாக்களின் காட்சிகள்



திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன்


'விடுதலை' அறிமுக விழா




கலை,பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை


கலை, இலக்கிய படைப்பாளிகள் சங்கமம்



திருமலை கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன்


'சிலம்பம்' பரிசளிப்பு விழா


திரு.இரா.சம்பந்தன் M.P


கலாசார உத்தியோகத்தர் குணபாலன்


சிலம்பம் இணைப்பாளர் நடராஜா


இசைக்கருவிகள் அன்பளிப்பு